

கல்கி
KALKI 4.7.2004 ரூ.6.00
வீதிக்கு வரட்டும்
விஜயகாந்த்!
பா.ம.க. ஜிவ்..!
சார்மியின்
ஜூராஸிக்
ஆல்பம்!
இலவசம்: சென்னை ஸ்கேன்
சென்னை வாசகர்களுக்கு மட்டும்
பார்த்திபனின்
மழை ரகசியம்!

S.V.முதியோர் இல்லம்

Charitable Trust (Reg)

இங்கு முதியோர்களுக்கு இலவச மருத்துவமனை, ஆரம்பிக்கப்பட்டு அனைவரையும் தனித்தனியாக பரிசோதனை செய்து, உடல் ஆரோக்கியம் கண்காணிக்கப்படுகிறது. படுத்த படுக்கையில் உள்ள முதியோர்கள் அனைவரையும் 24 மணி நேரமும் டாக்டர்களும், நர்சுகளும், உதவியாளர்களும் கவனித்துக் கொள்கிறார்கள். எல்லா எமர்ஜென்சி உபகரணங்கள் உள்ளன.



மனச்சிதைவு, மனவளர்ச்சி குன்றிய முதியோர்கள் மற்றும் எல்லா வயது ஆண்/பெண் நோயாளிகளுக்கென்று தனி இல்லம் மருத்துவ வசதியுடன் செயல்பட்டு வருகிறது.

முதிய பருவத்தில் மறதி நோயால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு (ஆண், பெண் இருபாலரும்) சிறப்பு பாதுகாப்பு வசதியுடன் முற்றிலும் இலவச மருத்துவ வசதியுடன் தனித் தனி இல்லம் செயல்படுகிறது.



உங்கள் பிறந்த நாள் மற்றும் சிறப்பு நாட்களில் நீங்கள் அளிக்கும் ஒரு சிறிய நன்கொடைத் தொகை எங்கள் இல்லத்தில் உள்ள முதியோர்கள் மருத்துவ வசதிக்கு பயன்படுத்துவதுடன், அவர்கள் வாழ்க்கையை காப்பாற்றிய நல்லாசி உங்கள் குடும்பத்திற்குக் கிடைக்கும் மிகப் பெரிய பரிசாகவும் அமையும்.

முதியோர் சேவை பெரியது!

நன்கொடைக்கு வருமானவரி விலக்கு (80G, Income Tax Excemption) உண்டு

S.V. HOME FOR AGED

Charitable Trust (Reg)


50 / 88, Panchali Amman Kovil Street, Arumbakkam, Chennai - 600 106.
(Near Panchali Amman Temple) Tel. Off: 044 - 2475 5700, 2475 6700
2475 7777 2475 5799,
e-mail:svhome@vsnl.net


4
'வீதிக்கு வரட்டும் விஜயகாந்த்!'
8
52
44
72
கல்கி
4.7.2004

இரண்டு மேஜை

இப்போது எப்படி?

1912ம் ஆண்டு டைட்டானிக் கப்பல் பனிமலையில் மோதி மூழ்கியதும், அதில் இருந்த 2224 பயணிகளில் 1513 இறந்து விட்டதும் செய்திகள் மூலம் நாம் அறிவோம். அதன் பிறகு அது போல விபத்துக்கள் நடக்காதிருக்க, செய்திருக்கும் முன் ஏற்பாடுகள் :



அனைத்து நாட்டுப் பனிமலை வேவுப் படை ஒன்று நிறுவப்பட்டது. இப்படை பனிமலைகள் காணப்படும் கடற்பகுதிகளை நன்கு கண்காணித்துக் கப்பல்களுக்கு எச்சரிக்கை விடுக்கிறது.

இவர்களிடம் பல நவீன சாதனங்கள் உள்ளன. இவற்றின் உதவியால் கடலுக்குள் முழுவதும் மறைந்து கிடக்கும் பனிகளைக் கூட, இவர்கள் எளிதில் கண்டு பிடித்து விடுகின்றனர். மேலும் பெரிய பனிமலைகளை வெடிவைத்துத் தகர்த்து கப்பல்களுக்குத் தேவையான பாதைகளையும் அமைத்துக் கொடுக்கின்றனர்.

- ஆர்.ஆர். பூபதி, திண்டுக்கல்

'பொடி'சுங்க பத்திரிகை

"கோணிப் பையை தோள்ல தொங்க விட்டு, ரோட்ல இருக்கற பேப்பர்களைப் பொறுக்கி, அந்தந்த வேளைக்கு வயித்தைக் கழுவிக்கிட்டிருந்தா போதுமா?"ன்னு தோணுச்சி உமேஷுக்கு. 'நேஷனல் சில்ட்ரன் டைம்ஸ்' என்ற பெயரில் மாசம் இரண்டு முறை வெளிவரக் கூடிய பத்திரிகை ஒண்ணை ஆரம்பிச்சிருக்கார். ஆறு பக்கம் இருக்கக் கூடிய இது ஹிந்தி, ஆங்கிலம் மொழிகள்ல வெளியாகுமாம். ரிப்போர்ட்டர், உதவி எடிட்டர்கள் என்று எழுபது பேர் இருக்கிறார்களாம் இதில். கூடிய சீக்கிரம் எல்லா ஊர்கள்லயும் இதுக்குக் கிளைகள் வரப் போகுதாம்!



- திவ்யா, மடிப்பாக்கம்.


குற்றாலத்துக்கு 22 பெயர்கள்

திருக்குற்றாலத்திற்கு மொத்தம் 22 பெயர்கள் உள்ளன. அவை பிதுர்கண்ட தீர்த்தபுரம், சிவத்துரோகம் தீர்த்த மூதூர், மதுவுண்டான் உயிர்மீட்டபுரம், பவர்க்கம் மீட்டபுரம், தென்றற் பேரூர், முதுகங்கை வந்தபுரம், திருநகரம், நன்னகரம், ஞானபுரி, வேடன்வலவந்தபுரம், யானை பூஜித்தபுரம், சக்திபீடபுரம், மும்மூர்த்திபுரம், முனிக்குருகும் பேரூர், தேவகூடபுரம், திரிகூடபுரம், புடார்ச்சுனபுரம், குறும்பலாத்திருநகர், தரிசனவேதி, குற்றாலம், செண்பகாரணியம், பஞ்சதரிசனம்.

- எஸ்.வி. அமிர்தகௌரி, தூத்துக்குடி

டி.வி. பார்க்கறீங்களா?

கொலம்பியா யூனிவர்சிட்டியின் ஆராய்ச்சியாளர் டாக்டர் ஜெஃப்ரி ஜான்சன், அதிகமாக டி.வி. பார்க்கும் இளைஞர் / இளைஞிகளை வைத்து ஆராய்ச்சி நடத்தியிருக்கிறார். 14, 16, 22 வயதுடைய 759 இளைஞர்களை வைத்து ஆராய்ந்ததில், 14 வயதுக்காரர்களைவிட மற்றவர்களிடம் தூக்க நோயின் அறிகுறிகள் இருப்பது கண்டறியப்பட்டிருக்கிறது. தூக்கம் சரியாக இல்லாமை, பாதித் தூக்கத்தில் எழுந்து விடுவது என்று தொடங்கி, தூக்கத்தில் நடக்கும் வியாதிவரை கொண்டு சென்று விட்டுவிடும் அபாயம் இருக்கிறதாம். வயது ஏற ஏற, இந்த நோய்கள் முற்றி தொல்லை கொடுக்கும் என்று



எச்சரிக்கிறார், டாக்டர் ஜெஃப்ரி ஜான்சன்.

- தேவா, சென்னை - 33

மெகா மரம்!

படத்தில் (கீழே) காணப்படுவது மான்தான். ஆனால் அதன் பின்னணியில் இருப்பது குகை அல்ல, மரப்பொந்து. 'மான்களும் மற்ற மிருகங்களும் வசிக்கக் கூடிய அளவு அவ்வளவு பெரிய பொந்து, எனில், மரம் எவ்வளவு பெரிதாய் இருக்க வேண்டும்!

அமெரிக்காவில் யோஸெமிடி தேசியப் பூங்கா என்று அழைக்கப்படும் வனப்பகுதிகளில் உள்ள பல்லாயிரக் கணக்கான ராக்ஷஸ மரங்களில் ஒன்று இது. இம்மரங்கள் 2500 ஆண்டுகளுக்கும் முற்பட்டவை. சீக்யூயா என்ற பெயருடைய இந்த மரங்கள் நீண்ட காலம் வாழ்வதன் ரகசியம் என்ன? இதன் பட்டையில் டானின் எனப்படும் வேதியியல் பொருள் ஏராளமாக உள்ளது. அதனால் பூச்சி, நோய், ஏன் காட்டுத் தீ கூட இதனைத் தீண்டுவதில்லை! நானூறு அடி உயரம் வளர்கின்றன!

விஷயம்



- எம்.கே. வேங்கடநாராயணன்

படம் : கதாகர்

கல்கி

பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டிற்காக பரதன் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடுபவர் : கி.ராஜேந்திரன்

கல்கி பில்டிங்க்ஸ், 47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 97

ஆசிரியர் : சீதா ரவி

ஆசிரியர் குழு : செ. ஏக்நாத் ராஜ், அனுராதா சேகர், ஆர்.சி. ஜெயந்தன்

வடிவமைப்பு : எஸ். ஸ்டீஃபன், பி.ஆர். ராஜன்

தொலைபேசி : 22345622, 23, 24

தொலைநகல் : 044 - 22345621

மின்னஞ்சல் :
ஆசிரியர் குழு : kalki@kalkiweekly.com
சந்தா பிரிவு : subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு : info@kalkiweekly.com
கல்கி இன்டர்நெட் முகவரி : www.kalkionline.com

சந்தா விவரம் :
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ.330/-
ஆறு மாதம் : ரூ.165/-
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : 62 யு.எஸ். டாலர்
இலங்கை : ரூ.2000/-

Bharathan Publications Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 097.

ஒவ்வொரு இதழும் உங்கள் மேன்மைக்கு

விஜயகாந்த் சமூகக் கொந்தளிப்பை ஏற்படுத்தும் விதத்தில் கன்னாபின்னாவென்று பிதற்றக் கூடாது.

பற்றிக்கொண்டு எரிகிறது விஜய காந்துக்கும் பா.ம.க.வுக்குமான போர். 'எங்கிட்டே மோதாதே' என்று அவர்கள் குரல் கொடுத்தால், இவர்கள் கொடும்பாவி எரித்துக் கொதிக்கிறார்கள். இது பற்றி, பா.ம.க. தலைவர் ஜி.கே. மணியிடம் கேட்டோம் :

''கருத்துக்குக் கருத்து மோதுவதை விட்டு விட்டு கொடும்பாவி எரிப்பு,

'வீதிக்கு வரட்டும்'



மன்றம் எரிப்பு என்று மோதல் தொடருவது சரிதானா?

ஜி.கே. மணி : கள்ளக்குறிச்சியில் நடிகர் விஜயகாந்த் பேசும் போது, பா.ம.க. அமைப்புச் செயலாளர் அன்புமணியைப் பற்றிய கருத்துக்களை ஏன் சொன்னார் என்பதை அவரைத்தான் கேட்க வேண்டும். அவருக்குப் பா.ம.க. மீது என்ன கோபமோ? காழ்ப்புணர்ச்சியோ? பா.ம.க. மீது கோபப்படுவதற்குக் கொஞ்சம் கூட அடிப்படையே கிடையாது. தேர்தலில் நிற்காமல் ராஜ்யசபைக்குத் தேர்ந்தெடுக்கப் படும் முதல் பிரமுகர், அன்புமணி மட்டும் அல்ல; பல்வேறு கட்சிகளில், பல கால கட்டங்களில் இதுபோன்று தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள்.

'மக்களை சந்திக்காம



—பா.ம.க. ஜிவ்

விஜயகாந்த்!’

அன்புமணி அமைச்சராகிறார்' என்று சொல்லியிருக்கிறார் விஜயகாந்த். தேர்தலுக்கு முன்பு, டாக்டர் ஐயாவிடம் பத்து நாட்களுக்கு மேல் ‘அன்புமணியை தேர்தலில் நிற்க வைக்க வேண்டும்’ என்று மிக அழுத்தமாகவே கோரிக்கை வைத்தோம். ஒட்டுமொத்த பா.ம.க. தொண்டர்களின் விருப்பம் அது. ஆனால், டாக்டர் "தமது குடும்பத்தினர் யாரும் தேர்தலில் நிற்க மாட்டார்கள்" என்று ஏற்கெனவே சொல்லியிருந்ததால், மறுத்து விட்டார். எங்களுக்கெல்லாம் வருத்தம். இருந்தும் பா.ம.க. போட்டியிட்ட ஆறு தொகுதிகளில் மட்டுமில்லாமல், கூட்டணி போட்டியிட்ட எல்லாத் தொகுதிகளிலும் அன்புமணி தீவிரமாகப் பிரசாரம் செய்தார். அது மட்டுமா?

கடந்த பல வருடங்களாகவே ‘பசுமைத் தாயகம்’ என்ற சுற்றுச்சூழல் அமைப்பின் சார்பில், பல பொது நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்து மக்களைத் தொடர்ந்து சந்தித்து வருகிறார் அன்புமணி. அப்படிப்பட்டவருக்கு மக்களைச் சந்திக்க எந்தத் தயக்கமும் கிடையாது. இதெல்லாம் விஜயகாந்துக்குத் தெரியுமா? தேர்தலில் கூட்டணி வென்று, மத்திய அமைச்சரவையில் சேரும் வாய்ப்பு பா.ம.க.வுக்குக் கிடைத்த போது, தொடர்ந்து ஒரு வாரம் போராடி, ஐயாவிடம் அன்புமணியை அமைச்சராக்க அனுமதி வாங்கினோம்.

“அது சரி. அதற்காக டாக்டர் ராமதாஸ், அன்புமணியை ராஜாஜி மற்றும் வேறு பல தலைவர்களுடன் ஒப்பிட்டுப் பதில் சொன்னது எப்படிப் பொருந்தும்?”

பல தலைவர்கள் அந்தந்தச் சூழலுக்கு ஏற்ப, தேர்தலில் நிற்காமல் அமைச்சர் பொறுப்பு, முதலமைச்சர், பிரதமர் என்று பதவிக்கு வந்திருக்கிறார்கள். அதைத்தான் சுட்டிக்காட்டினார் டாக்டர். வரலாற்றைச் சுட்டிக்காட்டத்தான் அந்தத் தலைவர்களின் பெயரைப் பயன்படுத்தினாரே தவிர, அந்தத் தலைவர்களின் மேல் எங்களுக்கு மிகுந்த மரியாதையும், உயர்ந்த எண்ணமும் உண்டு. மற்றபடி ஒப்பிட்டுக் காட்டுவது எங்கள் நோக்கமல்ல.

‘அரைவேக்காட்டுத்தனமாகப் பேச வேண்டாம்’ என்றுதான் சொன்னார். இப்படிச் சொன்னதற்குப் பதிலாக, எங்கள் ஐயாவின் கொடும்பாவியை எரித்தார்கள் அவரது ரசிகர்கள். ரோஷமுள்ள எந்தத் தொண்டனும் அதைப் பொறுத்துக் கொள்ள மாட்டான். கருத்துக்குக் கருத்து மோதல் இருக்கும் போது கொடும்பாவி எரித்ததும், வம்புக்கு இழுப்பதும் ஏன்? எனவேதான் எங்கள் தோழர்கள் கொதித்து எழ, ஆங்காங்கே மோதல் தொடர்ந்தது.

“நடிகர்கள் தங்கள் கருத்தைச் சொல்லக் கூடாதா?”

நடிகர்கள் சினிமாவில் முதலமைச்சர், எம்.எல்.ஏ., என்று சகலரையும் விமர்சிக்கிறார்கள். செய்து விட்டுப் போகட்டும். ஆனால் நிஜ வாழ்க்கையில், சமூகத்துக்கு ஏதேனும் செய்ய வேண்டுமென்று நினைத்தால், அரசியல் கட்சி ஆரம்பித்து

தைராய்டு பிரச்சினைகள்

டாக்டர் ஆர். ஞானசம்பந்தம் "தைராய்டு கோளாறுகள்" என்ற புத்தகத்தில் தைராய்டு பிரச்சினைகளுக்கு ஹோமியோபதி மருத்துவத்தின் மூலம் தீர்வு காணும் வழிமுறைகளைப்பற்றி தெளிவாக்கியுள்ளார்.



சிகிச்சைக்கு முன்



சிகிச்சைக்கு பின்



இதன் விலை ரூ.85. ஏ.கே.பி. ஹோமியோபதி மருத்துவ ஆராய்ச்சி மையம். 6, லாயிட்ஸ் இரண்டாவது சந்து, இராயப்பேட்டை. சென்னை–600 014 என்ற முகவரிக்கு எழுதி புத்தக விலையை மணியார்டர் செய்யவும். வி.பி.பி கிடையாது. தபால் செலவு இலவசம். போன்:044–28113300/ 28115500. Website: www.thyroidmiracles.com E-mail: gnanas@vsnl.com

வீதிக்கு வந்து போராடட்டும். 'பா.ம.க. மக்கள் விரோதக் கட்சி என்று மேடைக்கு மேடை பேசட்டும். அப்போது நாங்கள் தக்க பதிலடி கொடுப்போம். அதை விட்டு விட்டு, வரலாறு தெரியாமல், உள் நோக்கத்தோடு புலம்பினால், 'அரைவேக்காடு' என்றுதான் சொல்ல நேரிடும். அதைத் தாங்கிக் கொள்ள முடியாமல் 'கொடும்பாவி எரிப்பு' என்று துவங்கினால், விளைவுகளை அவர் அனுபவித்துத்தான் ஆக வேண்டும். நாங்கள் திரைப்படத்திற்கோ, நடிகர்களுக்கோ எதிரியல்ல, நல்ல திரைப்படங்களையும், சமூக அக்கறை உள்ள நடிகர்களையும், தொழில்நுட்பக் கலைஞர்களையும் பா.ம.க. என்றுமே பாராட்டி வந்திருக்கிறது.

"முன்பு ரஜினி; இப்போது விஜயகாந்த் - இவர்களுக்கு எதிரான மோதலில், தி.மு.க. ம.தி.மு.க. போன்ற கட்சிகள் உங்களுக்குத் துணைவரத் தயங்குகின்றனவா?"

'விஜயகாந்துக்கு மிக அழகாக, வாழைப் பழத்தில் ஊசி ஏற்றுவது போன்று கலைஞர் பதில் சொல்லியிருக்கிறாரே! மற்ற கட்சிகளின் தலைவர்களது கொடும்பாவியை விஜயகாந்த் ரசிகர்கள் எரித்தால், அந்தந்தக் கட்சிகளின் தோழர்கள் எங்களைப் போல்தான் பதிலடி கொடுத்திருப்பார்கள்.

"திரைப்படத் துறையினர் உங்களுக்கு வேண்டுகோள் விடுத்திருக்கிறார்களே..."

நடிகர் சங்கத் தலைவராக இருக்கும் விஜயகாந்த், திரைப்பட உலகின் நலன்களைப் பற்றிச் சிறிதும் கவலைப்படாமல் சமூகக் கொந்தளிப்பை ஏற்படுத்தும் விதத்தில், கன்னாபின்னாவென்று பிதற்றக் கூடாது. எங்களுக்கு ஆலோசனை சொல்லும் பட அதிபர்கள் விஜயகாந்திடம், நீங்கள் ஏன் அப்படிப் பேசினீர்கள்?' என்று கேட்க வேண்டும்.

"விஜயகாந்த் துன்னி எழுவதற்குப் பின்பலமாக 'வைகோ' இருக்கிறார்' என்று சில பத்திரிகைகளில் செய்திகள் வருகின்றனவே?"

அதில் உண்மையிருக்குமென்று நினைக்கவில்லை. அது போன்ற கருத்துகள் அந்தந்த பத்திரிகையின் கருத்துகளே!

சந்திப்பு : ப்ரியன்
படங்கள் : மீடியா ராமு

பார்த்திபனின்



'தென்றல்' படத்திற்குப் பிறகு, கதவைத் தட்டிய கதாநாயகன் வாய்ப்புகள் மொத்தம் பதினெட்டு. அனைத்தையும் மறுத்து விட்டு, தமது, 'குடைக்குள் மழை'யில் குளிரக் குளிர நனைந்து கொண்டிருக்கிறார் பார்த்திபன். படப்பிடிப்பு முடிந்து பின்னணி இசை சேர்ப்பில் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருந்த பார்த்திபனை, அவரது எடிட் ஸ்டுடியோவில் குறுக்கிடு செய்தோம்.

"படத்தில் ஐந்து பாடல்கள். தவிர, மூன்று நிமிட தீம் இசை. அதற்கான காட்சிகளை அந்த இசையோடு உங்களுக்குக் காட்டப் போகிறேன்" என்றபடி அருகிலிருந்த கணிப்பொறி இளைஞருக்கு கண் ஜாடை காட்ட, திரையில் திடீர் வெளிச்சம்! தொடர்ந்து காட்சிகள்.

கதாநாயகன் கையில் ஒரு சிறு பரிசுப் பெட்டி. எதிர்படும் கதாநாயகியிடம் அதை நீட்டுகிறான். வாங்கிப் பிரிக்கிறாள் அவள். உள்ளே ஒரு புடைவை. கொஞ்சம் கோபத்தோடு அவனது முகத்தில் புடைவையை வீசுகிறாள். அடுத்த காட்சியில், தலைக்கு மேல் உறைந்த மௌனத்தோடு தென்படுகிறது மின்விசிறி. அதை நோக்கி புடைவையின் ஒரு முனையை வீசி, முடிச்சுப் போட முனைகிறான் கதாநாயகன். ஆனால் விசிறியைத் தழுவியபடி கீழே வரும் புடைவை, நாயகியாக உருமாறி, நாயகனின் கழுத்தைக் காதலோடு பற்றுகிறது. புடைவையை விசிறியிலிருந்து உருவி, மொத்தமாய் சுருட்டி வீச முயல, அதற்குள்ளிருந்து நாயகியின் கரம் நீண்டு, நாயகனின் முகத்தை வருடுகிறது. பின்னணியில் ஒலிக்கும் தீம் இசை, காதல், காமம், ஏமாற்றம், நிராகரிப்பு, பரிதவிப்பு, பற்றுதல் என கலவையான உணர்ச்சிகளைப் புதிய ஒலிகளோடு பிரதிபலிக்கிறது. காட்சி முடிந்ததும் அறையில் வெளிச்சம் பரவுகிறது. பார்த்திபனின் முகத்திலும் கூட நம்பிக்கை வெளிச்சம். நமக்கோ சர்வதேசப் பட விழா ஒன்றில், பல நாள் தூக்கத்தைக் காவு கேட்கும் கவித்துவமான குறும்படமொன்றைப் பார்த்த பாதிப்பு. ஆனால் இது, "கமர்ஷியல் கவிதை" என்று 'குடைக்குள் மழை'யின் ரகசியத்தைப் பகிரத் தொடங்கினார் பார்த்திபன்.

"விதம் விதமாகக் கார் வாங்குவது, விரும்பிய ஸ்டைலில் பங்களா கட்டுவது, வங்கிக் கணக்கை வளமாக வைத்திருப்பது, இவையெல்லாம் சராசரி சினிமா மனிதர்களின் வெளியே தெரியும் வளர்ச்சிகள். வெளி வளர்ச்சியை நான் விரும்பியதில்லை. சினிமாவில் எனது உள் வளர்ச்சி என்ன என்பது பற்றி, கடந்த பத்து வருடங்களாகவே என்னை நானே கேட்டுக் கொண்டிருக்கிறேன். பல முயற்சிகளையும் தொடர்ந்து மேற்கொண்டிருக்கிறேன். 'சுகமான சுமைகள்', 'ஹவுஸ்ஃபுல்' போன்ற முயற்சிகளால், எனது கடன் சுமைகளை ஏற்றிக் கொண்டிருக்

கிறேன். என்றாலும் ஒவ்வொரு முயற்சியிலும் செய்த தவறுகளைத் திருத்திக்கொண்டு, மீண்டும் நெருடலான முயற்சியைத் தொடருவதில்லையா? அதுபோன்ற ஆத்மார்த்த முயற்சி இது. இரத்தம் சூடாக இருக்கும் போதே இதுபோன்ற முயற்சிகளைச் செய்துவிட வேண்டும்" என்ற பார்த்திபனிடம், "கமர்ஷியலும் கவிதையும் வெவ்வேறு துருவங்கள். இரண்டையும் எப்படி இணைக்க முடியும்?" என்றோம்.

"மணிரத்னம் சார் படங்களைப் பார்க்கிறபோது ஓர் ஆதங்கம் வரும். இது போன்ற பர்ஃபெக்ஷனை நம்மால் ஏன் கொண்டு வர முடியவில்லை, பணம் மட்டும்தான் பிரச்னையா என்று யோசித்திருக்கிறேன். எம்.ஜி.ஆர். கூட அவர் காலத்தில் 'நாடோடி மன்னன்' என்ற பெரிய முயற்சியைச் செய்தார். படம் ஜெயித்தால் மன்னன், இல்லையென்றால் நாடோடி என்று துணிந்து இறங்கி ஜெயித்திருக்கிறார். நானும் அது போலத்தான் துணிந்திருக்கிறேன். நிச்சய வெற்றி என்று உறுதிசெய்துகொண்டு, கமர்ஷியலையும், கவிதையையும் சரியான விகிதத்தில் கலந்திருக்கிறேன். ஒவ்வொரு ஃபிரேமிலும் பர்ஃபெக்ஷனுக்கு உழைத்திருக்கிறேன். இது எல்லோரையும் ஈர்க்கும். எனக்கு பெரிய பெயரை வாங்கித் தரும்" நம்பிக்கையோடு சொல்கிறார்.



இவரது நம்பிக்கையைக் காப்பாற்றும் விதமாக, கடந்த ஜூன் பன்னிரண்டாம் தேதி நள்ளிரவு பன்னிரண்டு மணிக்கு சன் டீ.வியில் ஒளிபரப்பான 'குடைக்குள் மழை' படத்தின் முதல் டிரைலர் காட்சியை ஹைதராபாத்தில் பார்த்துவிட்டு, அன்று அதிகாலையே, விமானத்தைப் பிடித்து சென்னைக்கு வந்து பார்த்திபனைச் சந்தித்த முன்னணி தெலுங்குப் படத் தயாரிப்பாளர் ஒருவர், "டிரைலரில் உங்கள் கண்களில் பார்த்த தன்னம்பிக்கையை வைத்தே வந்து விட்டேன். தெலுங்குப் பட உரிமையை எனக்குக் கொடுங்கள்'' என்று

முடி ரகசியம்!

அன்றே வாங்கிப் போய் விட்டாராம். இத்தனைக்கும் படத்தில் இடம்பெறும் ஒரு காட்சி கூட அந்த டிரைலரில் இல்லை. படம் குறித்து பார்த்திபன் பதினைந்து விநாடிகள் பேசுவது மட்டுமே டிரைலர்!

அப்படி என்னதான் படத்தில் கதை? "கல்தோன்றி மண் தோன்றாக் காலத்து, முன்தோன்றிய" காதல்தான் மையக்கரு என்றாலும், இதுவரை சொல்லப்படாத கதையாக, நடைமுறையில் இல்லாத திரைக்கதை கொண்டு சொல்லியிருக்கிறேன்" எனும் பார்த்திபன், படத்தின் கதாநாயகி மதுமிதாவை மட்டுமே இப்போது அறிமுகப்படுத்துகிறார். மற்ற நடிகர்களைப் பற்றி, மூச்! யார் கண்டது? படத்தில் இவர்கள் இருவர் மட்டும்தானோ என்னவோ?

டெயில் பீஸ் : இந்தப் படத்துக்காக முதன்முறையாக பாடல் ஒன்றை எழுதியிருக்கிறார் பார்த்திபன். சுவைக்க இரண்டு வரிகள். "ஒரு பொட்டு வைக்கிறேன்! உயிர்தொட்டு வைக்கிறேன்!"

- ஜெய்



படங்கள் : 'குடைக்குள் மழை'யிலிருந்து...



ஆசிரியர் பக்கம்

பெண்ணுரிமை!

"பெண்களின் உரிமைகளை பலப்படுத்த அவர் என்ன செய்திருக்கிறார்...?"

எம்.எஸ். சுப்புலட்சுமியைப் பற்றி இப்படி ஒரு கேள்வியைக் கேட்டார் ஒரு பெண் பத்திரிகையாளர்.

இடம் : புதுடெல்லி கமானி ஆடிடோரியம். நேரம் : இரவு சுமார் 8.45 மணி. கடந்த ஒன்றரை மணி நேரமாக அந்த அரங்கம் எம்.எஸ். இசையிலும், அவினாஷ் பஸ்ரிசாவின் அற்புதமான ஒளி-ஒலி படைப்பு வழியே எம்.எஸ்ஸின் சாதனைகளிலும் தோய்ந்து எழுந்திருந்தது. டெல்லி முதல்வர் ஷீலா தீக்ஷித், "அவர் இசை, வாழ்க்கையைச் சமநிலையுடன் ஏற்கும் பக்குவம் தந்திருக்கிறது..." என்று புதியதொரு கருத்தை முன்வைத்திருந்தார். எம்.எஸ். குரலில் பிரபலமாகியுள்ள சில கீதங்களுக்கு, ப்ரியதர்ஷினி கோவிந்த் நடனமாடி முடித்திருந்தார்... 'டெல்லி அரசாங்கமும், பெண்கள் கமிஷனும் அளித்த வாழ்நாள் சாதனையாளர் விருதுத் தொகை பதினொரு லட்சம் ரூபாயும், ஒரிருக்கையில் காஞ்சி பரமாச்சார்யார் நினைவாக உருவாகும் ஆலய மணிமண்டப அறக்கட்டளைக்கு வழங்கப்படுகிறது' என எம்.எஸ்.ஸின் அறிவிப்பும் அரங்கில் தெரிவிக்கப்பட்டிருந்தது. ரசிகர்களும் பிரமுகர்களும் மனநிறைவில் திளைத்துக் கொண்டிருந்த ஒரு கணத்தில், சுஸ்வரச் சூழலுக்குச் சவால் விடுவது போல் ஒருகணம் தொனித்தது நிருபரின் கேள்வி :

"What has she done for women's empowerment?"

கணவரின் நிழலாக வாழ்ந்து, இன்று அவர் நினைவுகளிலேயே வாழும் எம்.எஸ்., பெண்ணுரிமைக்காகத் தனியே குரல் கொடுத்ததில்லை. குடும்ப அமைப்பின் பாதுகாப்பே ஒரு பெண்ணுக்கு முதல் மகிழ்ச்சி என்று நம்புகிறவர். சுற்றத்தாரிடமும், நட்பு வட்டத்திலும் சந்தர்ப்பம் கிடைக்கிறபோதெல்லாம் இதை எடுத்துச் சொல்பவர்... அதே சமயம்...

இந்த நம்பிக்கையும் பண்பாடும், பெண்ணின் விருப்பங்களுக்கும், சாதனைகளுக்கும் தடை அல்ல என்று வாழ்ந்து காட்டியவர்.

இசைக் கலைஞர், சினிமா நட்சத்திரம், ஒரு முதல்தர பத்திரிகையின் தோற்றத்துக்குக் காரணமானவர்; பக்தியைப் பரப்புவதில் ஒரு பிரவசனகர்த்தாவுக்கு நிகரான இடம் பெற்றவர், நல்ல காரியங்களுக்கு உதவவே லட்சம் லட்சமாகச் சம்பாதித்தவர், இதற்காகச் சோர்வறியாது உலகமெல்லாம் சுற்றி வந்தவர், உலகப் புகழின் வெளிச்ச வெள்ளத்தில் மூழ்கியபோதும், உள்ளத்தின் எளிமையைத் தொலைக்காதவர்; வசுதேவ குடும்பகம் என்பதற்கேற்ப, அன்பால் அனைவரையும் சொந்தமாக்கிக் கொண்டவர்; நான்கு புடைவைகள், மூன்று கொண்டை ஊசிகளுக்குள் சொந்தத் தேவைகளை அடக்கத் தெரிந்தவர்.

எம்.எஸ்ஸின் சங்கீதம் இதயத்தில் சமன்பாடு விதைக்கிறது எனில், அவரது வாழ்க்கை எழுச்சியூட்டி, உத்வேகம் அளிக்கிறது.

பெண்களின் உரிமைகள் பலப்பட அவர் என்னதான் செய்யவில்லை!

கோமேதகம் முத்து புஷ்பராகம் பவளம்

The Legend in Fashion Jewellery



➢ **12th Anniversary Offer 10% - 20%**

➢ **Best Customer Service**

A well-known name for its Unbeatable, Irrestible and Dynamic design in Pearls, Corals, American Diamond Jewels, Theva Sets, Hyderabad Gold Foil Beeds, Full Range of Cutting Beeds, Coral Flower Sets, Kundhan Sets, Jade, Ruby, Emerald, Blue Sapphire Necklace Sets, Temple Jewellery, 1gm & 2 gm Gold Forming Jewellery and many more apart from Attractive Jewel Gift Articles, Lucky Birth Stones.

NARAYANA pearls & gems

Main Show Rooms:
KASI ARCADE
116, Theygaraya Road
Next to GRT Hotel
T.Nagar, Chennai - 600 017.
Ph : 2815 3457 / 5624
Ample Car Parking (Unpaid)

Pondy Bazaar Branch:
Ground Floor,
FATHIMA PLAZA
Next to Hotel Saravana Bhavan
Pondy Bazaar,
Chennai - 600 017
Ph : 2815 5094

OUR NEW SHOWROOM
L.B ROAD
EXACTLY OPP :
Ganapathy Ram Theatre
(Next To Archies)
Adyar,
PH : 2446 2592

Open On all Sundays 11AM - 8 PM

FULL TIME ASTROLOGER SERVICES AVAILABLE

கல்வி கொடுங்கள்; வாழ்க்கை வழங்குங்கள்!

• சென்ற வருஷம் நடந்த பல்கலைக் கழகத் தேர்வில் கல்லூரியளவில் முதலாவது மாணவியாக இடம் பெற்றேன். எனது தந்தை சாதாரண மீன்பிடித் தொழிலாளி. எனது குடும்பத்தின் வறுமைச் சூழல் காரணமாக, பட்டமேற்படிப்பைத் தொடர இயலவில்லை. தங்கள் அறக் கட்டளை சார்பில் எனக்கு உதவித் தொகை வழங்குமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

தூத்துக்குடி, அ. அன்புக்களஞ்சியம்

• நான் துரைப்பாக்கம், M.N.M ஜெயின் பொறியியல் கல்லூரியில் மூன்றாவது செமஸ்டர் படிக்கிறேன். எனது தந்தை மனநோயினால் பாதிக்கப்பட்டிருக்கிறார். எனது தாய் கூலி வேலை செய்து குடும்பத்தை நடத்தி வருகிறார். சென்ற தேர்வில் நான் 80.28 சதம் மதிப்பெண் பெற்றேன். கருணை கொண்டு எனக்கு உதவித் தொகை அளிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

சென்னை-14, எஸ். புகழேந்தி

• நான் SSM கல்லூரியில் மூன்றாம் ஆண்டு பட்டயப் படிப்பு படித்து வருகிறேன். கடந்த பருவத் தேர்வில் துறையின் இரண்டாம் நிலையில் தேறியுள்ளேன். எனது தந்தையார் நெசவுத் தொழில் செய்கிறார். அவரது வருமானத்தில் கல்விக் கட்டணம் செலுத்த முடியாமல் மிகவும் சிரமப்படுகிறோம். அருள் கூர்ந்து என் படிப்பைத் தொடர உதவவும்.

பெருமாகவுண்டம்பட்டி, சேலம் (மா.வ) ம. தமிழரசி

கல்கி கிருஷ்ணமூர்த்தி நினைவு அறக்கட்டளைக்கு இது போன்ற கடிதங்கள் ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கில் வருகின்றன. ஒவ்வொரு மனுவையும் அதனுடன் இணைந்த சான்றிதழ்களையும் கவனமுடன் ஆராய்ந்து, அறங் காவலர்கள் உதவித் தொகை பெறத் தகுதியுடையவர்களைத் தேர்வு செய்கிறார்கள்.

கடந்த பதினேழு ஆண்டுகளாக இந்த அறப்பணி நடைபெற்று வருகிறது. முதலாண்டு ரூ. 10,000-ல் தொடங்கி, நடப்புக் கல்வி ஆண்டுக்கு ரூ. 2,00,000 விநியோக மாகிறது. அமரர் கல்கி கிருஷ்ணமூர்த்தி நினைவாக நடைபெறும் இந்தப் புனிதப் பணியில் பங்கேற்க விரும்புவோர், தங்களால் இயன்ற அளவு நன்கொடையை KALKI KRISHNAMURTHY MEMORIAL TRUST என்ற பெயருக்கு MO, A/C payee cheque அல்லது DD மூலம் அனுப்பலாம்.

நன்கொடைகளுக்கு 80.G வருமான வரி விலக்கு உண்டு.

ரூ. 1000 அல்லது அதற்கு அதிகமாகத் தரப்படும் நன்கொடைகள், மூலதன நிதியில் சேர்க்கப்பட்டு, அரசுப் பத்திரங்களில் முதலீடாகின்றன. கிடைக்கின்ற வருவாய், கல்விக்கான உதவித் தொகைகளாக விநியோகமாகிறது. எனவே, உங்கள் நன்கொடை நிரந்தரப் பலன் தருவதாக அமைகிறது.

நன்றி.

கல்கி ராஜேந்திரன்
நிர்வாக அறங்காவலர்


• அன்புக்களஞ்சியம் • புகழேந்தி • தமிழரசி







Managing Trustee,
KALKI KRISHNAMURTHY
MEMORIAL TRUST
New # 14, Fourth Main Road,
Kasthurba Nagar, Adyar,
Chennai 600 020



கோடிகள் செலவில் கொடூரம்!

'சேர்மன்' என்கிற அலங்காரப் பதவியில் தூக்கி அமர்த்தப்பட்டிருக்கிறார் வாஜ்பாய். இனி அவரது மிதவாத அரசியல் பாதைக்கு பா.ஜ.க. மதிப்பு கொடுக்காது என்று திட்டவட்டமாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. 'அடிப்படைகளுக்குத் திரும்புவோம்' என்று கட்சித் தலைவர் வெங்கய்யா நாயுடு எதிர்காலத் திட்டத்தைச் சுருக்கி வரைந்திருக்கிறார்.

பா.ஜ.க. மேற்கொள்ளவிருக்கும் இந்த 'அடிப்படைகள்' என்ன என்பது குறித்து, தப்பித் தவறியும்கூட யாருக்கும் சந்தேகம் இருந்துவிட முடியாது. சங் பரிவாரின் ஹிந்துத்வா கோட்பாடுதான் அந்த அடிப்படை என்பதை, மும்பை பா.ஜ.க. மாநாடு பல வகைகளில் உணர்த்தியிருக்கிறது :

மோடி பேரில் உள்ள குற்றச்சாட்டுகள் குறித்து விவாதம் மேற்கொள்ள மறுப்பு ;

சமீபத்தில், குஜராத்தில், முஸ்லிம் தீவிரவாதிகளாகக் கருதப்படுவோர் மீது நடந்த துப்பாக்கிச் சூடு - அதையொட்டிய சர்ச்சைகள் ;

மும்பை மாநாடு தொடங்குவதற்கு இரண்டு நாள் முன்பு வாஜ்பாய், அத்வானி போன்ற தலைவர்களை வாய்க்கு வந்தபடி ஏசிய வி.எச்.பி. தலைவர் தொகாடியாவின் காட்டமான உரை ;



கல்கி



2004 ஜூலை 4
தாரண ஆனி 20
மலர் : 62
இதழ் : 49



அதற்கு பா.ஜ.க. தரப்பில் ஏதும் பதில் தரப்படாதது;

வாஜ்பாயைத் தாக்கி குஜராத் முழுவதும் செல்போன்களுக்கு அனுப்பப்பட்ட எஸ்.எம்.எஸ். குறிப்புகள்;

இந்த இழி செயல் குறித்து 'காவல் துறை விசாரிக்கும்' என்ற மோடியின் சப்பைக்கட்டு;

'தனிநபர் ஆளுமைக்கு இனி மதிப்புத் தர மாட்டோம்' என்று வெங்கய்யா நாயுடு வாஜ்பாய் மீது நடத்திய மறைமுகத் தாக்குதல்...

- இவை எல்லாமே தீவிர ஹிந்துத்வாவை நோக்கி பா.ஜ.க. உறுதியாகத் திரும்பியிருப்பதை உணர்த்துகின்றன.

'ஹிந்துத்வாவினால் என்ன கேடு விளைந்துவிட முடியும்?' 'அதுவும் ஓர் உயர் சித்தாந்தம்தானே?' என்று கேட்கலாம்.

ஆர்.எஸ்.எஸ். முதலான அமைப்புகள் ஆதரிக்கும் 'ஹிந்துத்வா'வில், துரதிர்ஷ்டவசமாக, ஹிந்துக்கள் அல்லாதவர்களுக்கு இந்நாட்டில் இடமில்லை என்பதாக, உறுதியான பிரகடனம் செய்யப்பட்டு வருகிறது. பயிற்சி முகாம்களில் நேரடியாகவும், அரசியல் களத்தில் மறைமுகமாகவும், விதைத்து வளர்க்கப்பட்டு வருகிற இந்த வெறுப்புணர்வு, நாட்டுக்குப் பெருங்கேடு விளைவிக்கும்.

சராசரி மக்கள், மதத்தைப் பிரச்னையாக்கிக் கொண்டு, வாழ்க்கையில் சிக்கல்களை வளர்த்துக் கொள்பவர்கள் அல்ல. அவர்கள் அமைதியையும், சகோதரத்தையும் நாடுபவர்கள். வேற்று மதத்தை ஏற்காவிட்டாலும் சகித்துக் கொள்ளப் பக்குவம் படைத்தவர்கள்.

சகிப்புத்தன்மை, பிற மத மதிப்பாக வளரத்தான் அரசியல் சூழலும் தலைவர்களும் வழிகாட்ட வேண்டுமேயொழிய, சகிப்புத்தன்மைக்குச் சவால்விட்டு, வெறுப்பை



வளர்க்கக்கூடாது. ஆனால், மும்பையில் நடந்த பா.ஜ.க.வின் செயற்குழு கூட்டம், இதைத்தான் சாதித்திருக்கிறது. இந்த விஷ விதையை ஊன்றுவதற்காக, கோடிகள் செலவில் ஏழு நட்சத்திர ஹோட்டலில் கூட்டம் நடத்தியது ஆடம்பரக் கொடூரம்!

தொடரும் துக்ளக் தர்பார்!

ஜெயலலிதாவின் துக்ளக் பாணி செயல்பாடு, நம்பமுடியாத உச்சகட்டத்தை எட்டியது ஜூன் 21 - 23 தேதிகளில்.

அரசு ஊழியர்கள் வேலைநிறுத்தத்தையொட்டி தற்காலிகப் பணியில் அமர்த்தப்பட்ட சுமார் 16,000 ஊழியர்கள், 21ஆம் தேதியன்று தங்கள் வேலைகளை இழந்தார்கள். அதற்கு இரண்டாம் நாளே அவர்களை மீண்டும் பணியில் அமர்த்தியது தமிழக அரசு!

அரசு ஊழியர்களின் வேலை நிறுத்தத்தைக் கையாண்ட யதேச்சாதிகாரப் போக்கின் தொடர்ச்சிதான் இந்தச் செயல்கள்.

நிரந்தர ஊழியர்களைப் பணி நீக்கம் செய்த முதல்வரின் கெடுபிடி, தற்காலிக ஊழியர்களிடையே நம்பிக்கையை வளர்த்தது. தங்கள் பணி நிரந்தரமாவதற்கு வாய்ப்பு உண்டு, என கனவு காண ஆரம்பித்தார்கள். தேர்தல் தோல்வியைத் தொடர்ந்து, முதல்வரின் கெடுபிடி காணாமல் போய்விட்டது. நீக்கியவர்களை மீண்டும் பணியில் அமர்த்தியது அரசு. தற்காலிக ஊழியர்களை இரவோடிரவாகத் தூக்கியெறிந்தது; அந்த உத்தரவின் மை காயும் முன்னர், மீண்டும் அவர்களைப் பணியில் சேர்த்தது...

தமது சொந்த (அரசியல்) ஆதாயங்களுக்காக அரசு அமைப்பை இவ்வாறு பந்தாட, எந்த முதல்வருக்கும் உரிமை கிடையாது. இந்த துக்ளக் தர்பார் ஜெயலலிதாவுக்கு வாடிக்கையாகிவிட்டது. இந்த யதேச்சாதிகாரம் விளைவிக்கும் மனப்புண்கள் சுலபத்தில் ஆறக்கூடியவை அல்ல. ●

ஜெ. பாஸிட்டிவ்!

கடந்த நாடாளுமன்றத் தேர்தலின்போதே, அ.தி.மு.க. சார்பில் தென்சென்னை சீட் கேட்கிறார் என்றார்கள் எஸ்.வி.சேகரை. இப்போது அதிரடியாக அ.தி.மு.க.வில் சேர்ந்து உறுப்பினராகிவிட்டார்!

என்ன சேகர்... இனி தரையில் விழுந்து எழுந்திருக்கும் வாய்ப்பு இருப்பதால், உடல் கொஞ்சம் இளைக்குமே!

உஷாராகி விட்டார் சேகர். "உங்களைப் போல ஆட்கள் அம்மாவைப் பற்றி இல்லாததும் பொல்லாததும் எழுதி, மக்களை ரொம்பவே குழப்பி வைக்கறீங்க. யார் காலில் விழுந்தாலும், அம்மா கொஞ்சம் உறுதியாகவே 'இதெல்லாம் எதுக்கு?' என்று தடுக்கிறார். ஆனால் வயதில் குறைந்தவர்கள், கல்யாணத் தம்பதிகள் காலில் விழுந்து ஆசிர்வாதம் பெற விரும்புவது இயற்கைதானே!"

ரத்தத்தின் ரத்தமாகிவிட்டீர்கள். இனி உங்கள் குரூப் ஜெ. பாஸிட்டிவ் என்று சொல்லலாமா?

"ஒரு கட்சியில் சேர்ந்தால், தலைமைக்கு நூறு சதம் நம்பிக்கைக்கு உரியவனாக இருந்தால் மட்டும் போதாது. பணியாற்ற வேண்டும். அதைத்தான் நான் செய்யப் போகிறேன்.

தேர்தலுக்கு முன்னால் சேர்ந்திருந்தால் சீட் கிடைத்திருக்குமே!

"எல்லாவற்றுக்கும் ஒரு நேரம் வரணுமே! ரொம்ப வருஷமாய் யோசிச்சு இந்த முடிவெடுத்துச் சேர்ந்திருக்கேன். நாட்டுப் பற்று, ஆன்மிகம் ஆகியவற்றில் அம்மாவை யாரும் வெற்றி கொள்ள முடியாது. மதச் சார்பின்மை என்று சொல்லிக் கொண்டு, இந்துக்களைத் தாக்குபவர் கருணாநிதி. அவரைச் சந்திக்க, சமாளிக்க, சரியான தலைவர் அம்மாதான். கருணாநிதிக்கு 'பக' என்றாலே பிடிக்காது? ஏன் தெரியுமா?" நாம் முழிக்க, சேகரே தொடர்ந்து "அது அம்மா... அம்மா என்று குரல் கொடுக்குதே!" (ஆஹா கிளம்பிட்டாங்கய்யா...)

நகைச்சுவை உணர்வை இனி பரணில்தான் போடவேண்டுமா?

"காமெடி நாடகங்கள் போடுவது, சினிமாவில் நடிப்பது, தொழில். அது தொடரும்" என்றவர், "பரமசிவனும், பார்வதியும் கம்ப்யூட்டர் கற்றுக் கொள்ள வேண்டுமென்றால், பிள்ளையாரின் தயவு வேண்டும், ஏன்?" வழக்கம்போல நாம் முழிக்க "மௌஸ் அவர்கிட்டதானே இருக்கு" என்று சொல்ல, மண்டை காய்ந்து ஜூட் விட்டோம்.

- ஸ்ரீநிவாசன்

படம் : மீடியா ராமு





‘ஒலிம்பிக் டார்ச்’ தீம் பாடலுக்கு இசையமைத்து அசத்தியிருக்கிறார் வயலின் மேதை எல். சுப்ரமண்யம்!

சில நாட்களுக்கு முன் தில்லியில், ஒலிம்பிக் ஜோதி எடுத்து வரப்பட்ட விழா மேடையில் சுப்ரமண்யம் வயலினுடன், மனைவி கவிதாவுடன் இசைக்க, நடுவே மகள் சீதா சுப்ரமண்யமும் இன்னிசை சேர்க்க, தில்லி பள்ளிக் குழந்தைகள் நூறு பேர் சீராக சுருதி சேர்க்க, களை கட்டியது ஒலிம்பிக் கீதம்! டிரம்பெட்டும், எலக்டிரிக் கிடார்களும் தம் பங்கிற்கு முழங்க ஒவ்வொருவரின் ரத்த நாளங்களிலும் ஒலிம்பிக் ஸ்பிரிட் கிர்ரென்று ஏறியது!

வயலின் வசீகரர்!

“இரண்டு மாதத்திற்கு முன்னால்தான் ஒலிம்பிக் ஸாங் கம்போஸ் பண்ணச் சொல்லிக் கேட்டார்கள். போதிய நேர மில்லை. இருந்தாலும் பாடல் நன்றாகவே இருந்து. இசையும் பரிமளித்ததால் அமோக ஆதரவு கிடைத்தது. கூடிய சீக்கிரம் ஒலிம்பிக் இசை ஆல்பமும் வெளி வர இருக்கிறது. மனைவி கவிதாவும், மகள் சீதாவும் பாடியிருக்கிறார்கள்...” என்கிறார் சுப்ரமணியம்.

நூற்றுக்கணக்கான காஸெட், சி.டி., ஆல்பங்கள், பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட இசைக் கச்சேரிகள், நாடு நாடாக இசைப் பயணம், புதுப் புது தியரிகள், நோட்கள், வெஸ்டர்ன் க்ளாஸிக்கிலும் அபார ஞானம். (ஆறு வருட கோர்ஸை ஒன்பது மாதங்களிலேயே முடித்த மா மேதை!) யஹூதி மெனுஹின், ஸ்டீபன்ஸ் கிராபெல்லி போன்ற வெளிநாட்டு மேதைகளுக்கு நிகரான இசைப் புலமை, பீட்டர் புருக்ஸின் ‘மகாபாரதா’ விற்கு மியூசிக் அட்வைஸர்... என்று சுப்ரமண்யம் சூப்பர் பிஸி. எப்படி சாதிக்க முடிந்தது?

“என் அப்பா லட்சுமி நாராயணா தான் குரு. ஆலோசகர் எல்லாமே... ‘வயலின் என்பது பக்க வாத்தியமாக இல்லாமல், இதை மேன்மேலும் பரிமளிக்கச் செய்ய ணும்டா. நீ ஏதாவது செய்... வயலினை ஸோலாவாக்கி நம் நாடு மட்டுமல்லாது



• கவிதா, எல். சுப்ரமண்யம்

வெளிநாட்டு அரங்கிலும் வெற்றியடையணும்’ என்று சொல்லி சொல்லி என்னை ஊக்குவித்தார். நான் படித்தது எம்.பி.பி.எஸ். டாக்டருக்கு. ஆனால் எம்.ஏ இசையில் படிக்க வெளிநாடு போய்விட்டேன். இங்கு செம்பை வைத்யநாத பாகவதருக்கு நிறைய வாசித்திருக்கிறேன். அவரை மாதிரி நல்லிதயம் கொண்ட மாமேதையைப் பார்ப்பது அரிது. சொந்தப் பையன் போல் என் மேல் அன்பையும் பாசத்தையும் பொழிந்தார். ஒருமுறை ஒரு கச்சேரியில் செம்பை, தோடி ஆலாபனை செய்து முடித்து என்னைப் பார்க்க, நான் தனி ஆவர்த்தனம் செய்தேன். ‘தனி’ முடிந்த பிறகு செம்பை மைக்கில் “இந்த மாதிரி தோடி யாராலுமே வாசிக்க முடியாது. எனக்கு ஐந்து



• விழா மேடையில்

தலைமுறைகளாக பலர் பக்க வாத்தியம் வாசித்து விட்டார்கள். ஆனால் உன்கிட்டே நெருங்க யாராலுமே முடியாது. நீ வயலினுக்காகவே பிறந்திருக்கே. நீ சக்கரவர்த்தி மாதிரி இருப்பேடா..'' என்று சொல்லி முடித்தவுடன், பத்து நிமிடத்திற்கு அப்ளாஸ்... பார்வையாளர்களில் உட்கார்ந்திருந்த என் அப்பாவின் கண்களில் பரவசம். கூடவே கண்ணீர். என்னை வளர்த்து விட்டதில் பாலக்காடு மணி ஐயருக்கும் பெரும் பங்குண்டு'' என்கிறார் சுப்ரமண்யம்.

இவரது மனைவி கவிதா அருமையான பின்னணிப் பாடகி. பல ஹிட் பாடல்கள் கொடுத்திருக்கிறார், ஹிந்தியில்.

தமிழ் உலகம் ஏன் இவரை இன்னமும் கண்டு கொள்ளவில்லை?

''தமிழில் பாடியிருக்கிறேன். நான் மும்பை, ஹைதராபாத், வெளிநாடு என்று பறந்து கொண்டேயிருப்பதால், எனக்கு சான்ஸ் வராமல் போயிருக்கலாம். சித்ரா, சுஜாதான்னு அருமையான பாடகிகள் அங்கேயே இருக்காங்களே'' என்கிறார் கவிதா.

எகிப்தில் இருக்கும் அலெக்ஸான்டிரியா நூலகம் உலகப் போரில் அழிந்து போனது. அதை மீண்டும் புதுப்பித்த போது, உலகெங்கிருந்தும் இசைக் கலைஞர்கள் நிகழ்ச்சி தர வரவழைக்கப்பட்டனர். கவிதாவும், சுப்ரமண்யமும் தான் இதில் பங்கு பெற்ற ஆசியர்கள்!

''ஒவ்வொரு நாட்டிலிருந்தும் கலைஞர்கள், எங்களுக்குக் கொடுக்கப்பட்ட நேரம் நாலு நிமிடங்கள். கணேச தோத்திரம் பாடினேன். அவர் வயலினில் ஆலாபனை செய்தார். பிறகு இருவருமாக சேர்ந்து இசைத்தோம். மறக்க முடியாத நிகழ்ச்சி'' பூரிக்கிறார் கவிதா.

இசைக் குடும்பம்... இசை அங்கே இழையோடிக் கொண்டிருக்கிறது. அவர்கள் பேச்சு, சிரிப்பு, சுவாசிக்கும் மூச்சு எல்லாமே இசை தான்! இவர்களின் செல்ல மகள் சீதா சுப்ரமண்யம், 'பியாண்ட் பார்டர்ஸ்' என்ற ஸோலோ ஆல்பத்தை விரைவில் வெளியிட இருக்கிறார்.



• சீதா சுப்ரமண்யம்

- லதா சேகர்

உள்ளங்கையில் உலகம் -13

பாலு சொன்ன

பாலு என் ஒன்றுவிட்ட சகோதரன். பெரிய புத்திசாலி இல்லையென்றாலும் அவனை எனக்குப் பிடிக்கும். ஏனென்றால், எந்தச் சூழ்நிலையையும் எளிதாக எடுத்துக் கொள்வான்.

என் நண்பர் ஒருவர் வங்கியில் வேலை பார்த்து வந்தார். அவரை வனாந்தரப் பகுதிக்கு மாற்றல் செய்து விட்டார்கள். அவருக்குக் குடும்பம், குழந்தைகள், அவர்கள் கல்வி என்று ஒரே கவலையாகிவிட்டது. ஒரு நாள் அவர் எங்கள் வீட்டுக்கு வந்து இதையெல்லாம் சொல்லிக் கொண்டிருக்கும்போது, பாலு வந்து விட்டான். அவருடைய பிரச்னையைக் கேட்டுவிட்டு, சிரிக்கத் தொடங்கிவிட்டான்.

"நான் மட்டும் உங்கள் இடத்தில் இருந்திருந்தால், இதை மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டிருந்திருப்பேன். குழந்தைகளைத் தாத்தா பாட்டியிடம் விடலாம். நன்றாகப் பார்த்துக் கொள்ளுவார்கள். நன்றாகப் பாடம் சொல்லிக் கொடுப்பார்கள். நான் சொல்லுவது சரிதானே, சுதா?" என்றான் பாலு. தொடர்ந்து, "வரவர, ஊரில் இப்போது வாக்கிங் போவதே கஷ்டமாக இருக்கிறது. போக்குவரத்து நெரிசல். உங்கள் உடம்பு நன்றாகத் தேற வேண்டுமானால், தினசரி ஐந்து கி.மீ. தூரம் நீங்கள் நடக்க வேண்டும். இங்கே அது சாத்தியமில்லை. அதனால் கிராமம்தான் உங்களுக்கு ஏற்றது. சில சமயம் குடும்பத்தை விட்டுத் தள்ளியே இருக்கிறபோது, நமக்கு மதிப்பும் மரியாதையும் கூடக் கூடுகிறது. என்னுடைய சொந்த அனுபவம் இது!" என்றான் பாலு.

இதைக் கேட்ட பிறகு, நண்பருக்குக் கொஞ்சம் சமாதானம் உண்டாயிற்று. இப்படித்தான் பாலு பேசுவான்.

எனக்கு இன்னொரு ஒன்று விட்ட சகோதரன் உண்டு. பிரசாத் என்று பெயர். எதற்கெடுத்தாலும் புகார்தான். "என்னை எல்லாரும் ஏமாற்றுகிறார்கள். நான் எல்லாருக்கும் உதவ நினைக்கிறேன். ஆனால் என்னைக் காலை வாரு வதிலேயே எல்லாரும் இருக்கிறார்கள்" என்பான்.

பாலுவிடம் இதற்கு ஒரு பதில் இருந்தது.

"ஒருவன் நாள் பூரா தலைவலி, வயிற்றுவலி, கால்வலி என்று எப்போதும் சுட்டு விரலால் அங்கம் அங்கமாகக் காண்பித்துக் கொண்டே இருந்தான். 'உனக்கு எங்கே வலிக்கிறது?' என்று கேட்டேன். சுட்டுவிரலால் உடம்பு முழுவதும் இங்கே, இங்கே என்று காண்பித்தான். நான் உடனே, 'உன் விரலில்தான் வலி. உடம்பில் வேறு எங்கும் இல்லை' என்றேன். பிறகு, "பிரசாத், எல்லாரும் உன்னை ஏமாற்றுகிறார்கள், உன் மீது குதிரைச்சவாரி செய்கிறார்கள் என்றால், குற்றம் உன்னிடம்தான் இருக்கிறது. அவர்களிடம் இல்லை!" என்றான் பாலு.

இன்று வெளிநாடு போவது ஒரு பெரிய சமாசாரமே அல்ல. ஆனால் எங்கள் ஊரிலிருந்து அதிகம் பேர் போனதில்லை. அப்படிப் போய்விட்டு வந்தவர்களும், வந்தவுடன் தங்கள் அனுபவத்தை விலாவாரியாகச் சொன்னதில்லை. சும்மா, 'அது வேறு நாடு. அவர்கள் மதிப்பீடுகளும் வேறு' என்று சொன்னதோடு சரி.

ஆனால் பாலு அப்படிப்பட்டவன் அல்ல. போய்ச் சேர்ந்த முதல்



நாளிலிருந்து, ஒரு தகவல்கூட விடாமல் சொல்லித் தீர்த்தான். 'ஜாக்கிரதை, பாலு. நீ பாட்டுக்கு எதையாவது சொல்லி வைப்பாய். அது பாதியும் கதையாக இருக்கும். எல்லாவற்றுக்கும் ஓர் அளவு இருக்கிறது. ஆறடி உயரமான ஒருவன் இருந்தால், நீ பத்தடி என்பாய். கேட்பவர்கள் சிரிப்பார்கள். ஊர்க்காரர்களைக் குறைத்து மதிப்பிடாதே! அவர்களுக்கும் அமெரிக்கா பற்றித் தெரியும். டீ.வியில் பார்த்திருக்கிறார்கள்'' என்று எச்சரித்தேன்.

''சரி. எனக்குப் பேச ஆரம்பித்தால் நிறுத்தத் தெரியாதுதான். பெரிசு பண்ணிச் சொல்லுவது எனக்குப் பழக்கமாகி விட்டது. ஒரு காரியம் பண்ணேன்? நான் மிகைப்படுத்திச் சொல்லும் போது, என் சட்டையைப் பிடித்து இழு. உடனே நான் உஷாராகி விடு

பாடம்!

சுதா மூர்த்தி

வேன்!"

நான் ஒப்புக் கொண்டேன். பாலு, நியூயார்க் நகரைப் பற்றி வர்ணிக்கத் தொடங்கினான். "அவர்கள் வயல்களை எல்லாம் பார்த்தேன். புல் எல்லாம் பயங்கர உயரம். ஐந்தடி இருக்கும் போல" என்றான்.


நான் அவன் சட்டையைப் பிடித்து இழுத்தேன். உடனே, "இல்லை இல்லை... புற்கள் எல்லாம் மெல்லிசாக இருக்கிறது அங்கே" என்றான்.

"நம்ம ஊர் ஸ்கூல் டீச்சர் தார்மிகப் பொறுப்பேற்று பதவி விலகணும்னு தலைவர் அறிக்கை விட்டிருக்காரு."

"ஏன், எதுக்கு...?"

"அவரோட பையன் பிளஸ் டூவில் ஃபெயிலாம்!"

- வி. கிருஷ்ணகுமார்



நான் பாலுவின் சட்டையைத் திரும்பவும் இழுத்தேன். இழுத்த இழுப்பில் சட்டை கிழிந்து விட்டது. பாலுவுக்கு என்ன சொல்லுவது என்றே தெரியவில்லை. 'இது பாலு சார் பார்த்த அமெரிக்கா போல் இருக்கிறது. நிஜ அமெரிக்கா வேறு மாதிரி இருக்கும்' என்று வந்தவர்கள் பேசிக் கொண்டார்கள்!

ஒரு தடவை வீட்டில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தோம். அறிமுகமில்லாத புதியவர் ஒருவர் வந்தார். இன்ஃபோஸிஸ் ஃபவுண்டேஷன் வாயிலாக, மேற்படிப்புப் படிக்க முடியாதவர்களுக்கு நிதி உதவி செய்கிறோம் என்று பலருக்கும் தெரியும். புதியவர் ஓர் உதவிக்காகத்தான் வந்திருக்கிறார்.

நான் அவருடன் நீண்ட உரையாடல் நடத்திய பிறகு, அவர் பையனுக்கு உண்மையிலேயே உதவி தேவை என்று தெரிந்து கொண்டேன்.

"நான் அலுவலகம் சென்ற உடனே உங்களுக்கு செக் அனுப்பி வைக்கிறேன்" என்றேன்.

பாலு என்னைக் கூப்பிட்டு, "ஏன் அப்படிச் சொல்லுகிறாய்? நாளை என்ன நடக்கும் என்று யாருக்குத் தெரியும்? உன் வாக்கே உனக்கு நினைவிருக்குமா? இன்று மாலைக்கும், நாளைக் காலைக்கும் இடையே நிறைய இடைவெளி இருக்கிறது. வாழ்க்கை அநித்யமானது. எது வேண்டுமானாலும் நடக்கலாம். ஏதாவது கொடுக்க விரும்பினால், உடனே கொடுத்து விடு. காலம் உன் கையில் இல்லை. காலத்தின் தயவில் தான் நாம் வாழ்கிறோம்!" என்றான்.

"பாலு, என்னிடம் இங்கு செக் புத்தகம் இல்லையே!"

"அது உன் குற்றம். எப்போதும் செக் புத்தகமும், பணமும் நீ வைத்திருக்க வேண்டும். எத்தனையோ ஏழை மக்கள் வங்கியில் அக்கவுண்ட் கூட வைத்திருக்க மாட்டார்கள். தபால் ஆபீசில் கூட அவர்களுக்கு சேமிப்புக் கணக்கு இருக்காது."

பாலுவை தமாஷ் பேர்வழி, அதிகம் படிக்காதவன், எதையும் கிண்டலடிப்பவன் என்றுதான் நான் நினைத்தேன். ஆனால் அது தவறு. அவன் ஒரு பாடமே சொல்லித் தந்து விட்டான் எனக்கு. 'கொடுக்கிறபட்சம், இரண்டாவது முறை யோசிக்காதே. அடுத்த நாளைக்குத் தள்ளிப் போடாதே. காலத்தை யாரும் வென்றதில்லை. காலம் நம் கையிலும் இல்லை!' என்று புரிந்து கொண்டேன்.

(முற்றும்)

தொடர் - மொழிபெயர்ப்பு : சாருகேசி

Wanted


Your Old Furniture

DEAD OR ALIVE


Reward

Get the best market value for your Old Sofas, Cots, Dining Sets & Almirahs, irrespective of whatever might be the condition and have it exchanged for Brand New Furniture. At unimaginable prices. And that's not all. Choose from our wide range of Furniture Collections (Indian & Imported) at our mega furniture showrooms at Mylapore, Padi & Velachery, measuring more than 20,000 sq.ft.

Cloud 9



Sofa Sets
Rs. 9,000/- Onwards



Dining Sets
Rs. 8,500/- Onwards


Sathya

Furniture World


Sunday Open

Ample Car Parking — Easy Instalment Scheme *

Free Delivery * — Major Credit Cards Accepted *



Cots
Rs. 7,800/- Onwards



Almirahs Rs. 4,500/- Onwards

* Prices mentioned may not correspond to the product shown.

One of India's Biggest Furniture Showroom

Mylapore : **(20,000 sq.ft)** New # 139, R H Road, (Near Sanskrit College), (Entrance Brindavan Street), Ch - 4. **Ph : 2498 2930 / 31 / 2498 3929**

Padi (Anna Nagar) : 6, MTH Rd, DABC Bldg., (Opp.to TVS, Padi), Ch-50. **Ph : 26544929 / 5029**

Velachery : Paramount Park, 358, Velachery -Tambaram Main Road, (Next to VijayanagarBus Terminus), Ch - 42. **Ph : 98410 29293**

* Conditions Apply



ஜுராஸிக் ஆல்பம்!

யானை வரும் பின்னே, மணியோசை வரும் முன்னே! இந்தப் பழமொழி யாருக்குப் பொருந்துகிறதோ இல்லையோ, நடிகை சார்மிக்குச் சர்வநிச்சயமாய்ப் பொருந்தும். 'காதல் அழிவதில்லை' படத்தில் சிம்புவுடன் காதல் சிலம்பு ஆடியவர். அடுத்து நடிகர் பாலாவுடன் 'காதல் கிசு கிசு' படத்தில் கபடி. ஆனால் கடைசியாக நடித்த 'ஆஹா எத்தனை அழகு!' படத்தின் இயக்குனர் கண்மணியோடு காதல் என்று கிசுகிசுக்கப்பட்டவர். இந்த பஞ்சாபிக் கவிதையின் தந்தை திருவாளர் தீப்சிங், தாடியும் தலைப்பாகையுமாக முன்னே வந்தால், அடுத்த ஐந்தாவது நிமிடம் அங்கே சார்மியைச் சந்திக்கலாம். நாம் சமீபத்தில் அவரைச் சந்தித்தது, ராயல் மெரிடியன் லாபியில்.



"தமிழ்ப்பட உலகம் உங்கள் திறமையை பயன்படுத்திக் கொள்ளாததில் உங்களை விட எங்களுக்குத்தான் வருத்தம்" என்றபடி பேச்சுக் கொடுத்தோம். "துக்கம் விசாரிக்கிறீர்களா? இல்லை வருத்தப்படுகிறீர்களா?'' எனக் கொஞ்சம் குழம்பிய படியே, பனிக்குழைவு குரலில் (அதாங்க! ஐஸ்க்ரீம்) கேட்டவர், தொடர்ந்தார்.

"தெலுங்கு ஃபீல்டில் நான் இப்போ பிஸி கதாநாயகி தெரியுமா? லேட்டஸ்டா கிருஷ்ண வம்சி டைரக்ஷனில், 'ஸ்ரீ ஆஞ்ச நேயம்' என்ற மெகா பட்ஜெட் படத்துலே பட்டையைக் கிளப்பி இருக்கேன். அந்தப் படம் ரிலீஸ் ஆனதும், இங்கேயிருந்து மறுபடியும் அழைப்பு வரும் பாருங்க!" என்றார். அடுத்த நொடி அவரது லேட்டஸ்ட் ஃபோட்டோ ஆல்பத்தை என் மூக்கிற்கு நேராக நீட்டி, "இதைப் பாருங்களேன். அசந்து போயிடுவீங்க" என்றார். ஆல்பத்தைப் புரட்ட ஆரம்பித்த பிறகுதான் தெரிந்தது, ஃபோட்டோ செஷனுக்கு புறப்பட்டு வரும் முன்பு, அனிமல் பிளானெட் சானலை, சார்மி லயித்துப் பார்த்து விட்டு வந்திருக்கிறார் என்பது. அத்தனை சேஷ்டைகள். அதிலும் சைவ டைனோசர் வகையான பிராச்சியோசரஸ், தனது ஒட்டகச்சிவிங்கி தலையைத் தூக்கி நிற்பது போல தமது ஒற்றைக் காலைத் தூக்கி, ஸ்டைலாக அவர் தந்திருக்கும் போஸ்கள், கலர்ஃபுல் 'ஜுராஸிக் பார்க்' முதல் பாகம் பார்த்த மாதிரி இருந்தது. (ஆசிரியர் அந்தப் படங்களுக்குப் போட்டத் தடைக்கு நான் காரணமல்ல.) "உங்களுக்கும் இயக்குனர் கண்மணிக்கும் காதல் என்ற கிசுகிசுவுக்குப் பதில் சொல்லாமலேயே ஹைதராபாத்திற்குப் போய் விட்டீர்களே?" என்று ஜூட் விடும் முன் சின்ன 'பிட்'டைப் போட்டோம். "கண்மணி இப்போது தெலுங்கில் ஒரு படத்தை டைரக்ட் செய்து கொண்டிருக்கிறார். காதல் உண்மையென்றால், என்னைத் தானே அவரது படத்தில் கதாநாயகியாகப் போட்டிருக்க வேண்டும்?" சார்மியின் பதில் நமக்கு குட்டி சாமியாரிடம் தீட்சை கிடைத்தத் தெளிவைத் தர, ஆசிர்வதித்து விட்டு வந்தோம்.

- ஸ்ரீ

படங்கள் : சங்கர் சத்யமூர்த்தி



பூனைகள் ருசியானவை!

வலை
பாயுதே

காமெடி, பட்டிமன்றம், தமிழ், ஹிந்தி பாடல்கள், கர்னாடிக் இசை, பக்திப் பாடல்கள், கானா பாடல்கள், கிரோகி, பழைய பாடல்கள், புதுப் பாடல்கள், நாடகங்கள் என எல்லாவற்றையும் உங்கள் காதுக்குள் நுழைக்கக் காத்திருக்கும் தளம் mohankumars.com சினிமா சம்பந்தப்பட்ட புகைப்படங்கள் எக்கச்சக்கமாய் ஜொலி ஜொலிக்கும் இத்தளத்தில் இருக்கும் ஜாலி போட்டோக்கள் சில, உங்கள் பார்வைக்கு.



(நேயர் விருப்பம்கூட இருக்குது. வலைத் தளத்திலும் விடமாட்டாங்க போல!)


Google, 1000 MB-ல் g-mail ஆரம்பிக்கப்போகிறது என்றதும் yahoo-வும் வாரிக்கட்டிக் கொண்டு, ஒரு Mail Account-க்கு 100MB என ஒதுக்கியுள்ளது. விடுமா rediff? தனது users-க்கு 1 GB ஸ்பேசை வாரி வழங்கி மகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. 10 MB வரை ஃபைல்களை அட்டாச் செய்து அனுப்பலாமாம்.

(என்ன hotmail, indiatimes பக்கமிருந்து சத்தத்தையே காணோம்?)

'ஜீரோ டிகிரி' என்ற சர்ச்சைக்குரிய நாவலுக்குச் சொந்தக்காரரான சாரு நிவேதிதாவின் தளம் charuonline.com "பூனைக் குட்டிகளை யாராவது வெறுக்க முடியுமா? கறுப்பு, வெள்ளை, பழுப்பு என பூனைக்குட்டிகளை நான் ஆராதிக்கிறேன். அவற்றை முத்தமிடுகிறேன்" என்ற வரிகளைத் தொடர்ந்து நாவலில் வரும் அடுத்த வரி "பூனைகள் ருசியானவை." "நாவலில் சொல்லப் பட்டுள்ள பாலியல் விஷயங்கள் வாசகருக்குப் பேரதிர்ச்சி கொடுக்குமென்றாலும், அவை சொல்லப்படும் விதத்தில் இயல்பானவை, அவற்றுக்கு மாறுபட்டவை அனைத்தும் இயல்பானவை அல்ல என்ற கருத்து தோன்றவாம்" என்கிறார் ஜீரோ டிகிரி பற்றி இந்திரா பார்த்தசாரதி.

(தளம் முழுவதுமே பல சர்ச்சைகளுக்குத் தீனி போடும்படியே உள்ளது.)

- முகில்



* சாரு நிவேதிதா

ஜாலி எஸ்.எம்.எஸ்.

ஒரு காதல் மாலையில் சர்தார்ஜியின் காதலி அவரிடம், "டார்லிங், நம் நிச்சயதார்த்தத்தில் நீங்கள் எனக்கு 'ரிங்' தருவீர்களா?" என்று கேட்க, சர்தார்ஜி பதிலளித்தார். "நிச்சயமாக! அதற்கு உன் ஃபோன் நம்பரைக் கொடு!"

வாடகை வீடு

"வாடகையைக் கொஞ்சம் குறைச்சுக்கலாம்" என்றான் பாபு.

தண்ணீரைக் காரணம் காட்டி வாடகையைக் குறைக்கும் முயற்சி பலிக்கவில்லை.

"நோ சான்ஸ். நல்லா யோசிச்சுட்டு வாங்க. அவசரமில்லே"

"இன்னிக்கு மழை வரும் போலிருக்குண்ணே" என்றான் பாபு. சிக்னல் வந்தது. எந்தப் பக்கம் போவதென்ற குழப்பம், கொஞ்சம் யோசிக்க வைத்தது.

அருகில் நின்ற ஆட்டோ டிரைவரிடம் கேட்டான் ராகவன். "சிண்டிகேட் பேங்க் எக்கட உந்தி?"

"நேராகப் போய் இடது பக்கம் திரும்புங்க. பஸ் ஸ்டாண்ட் வரும். அது பக்கத்துலதான்" என்றான் தெலுங்கில். கொஞ்சம் புரியும்படியாகத்தான் இருந்தது. சாயங்கால வேளையின் மிதமான வெயிலில் நடப்பது சுகமாக இருந்தது. சென்னையில் நெருக்கடியான போக்குவரத்தையும், பரபரப்பானச் சூழல்களையும் பார்த்துப் பழகியவர்களுக்கு, கடப்பாவின் அமைதியான சூழ்நிலை ஆச்சரியமளித்தது.

"சீனிவாசலு அங்க இருப்பாரா இந் நேரம்?" என்றான் பாபு.

"இருப்பாருன்னுதான் நினைக்கிறேன். வீடு பார்த்தியே எப்படியிருக்கு?"

"நல்லாத்தானிருக்கு. வாடகைதான் அதிகம்னு நினைக்கிறேன்."

"மெயின்ரோட்டை ஒட்டியிருக்கு. ஆள் நெருக்கடியில்லாத தனி வீடு. அதுவும் போக, பேச்சிலர்களுக்கு மத்த இடத்துல வீடு கிடைக்கிறது கஷ்டம்."

"தண்ணி வசதி கிடையாது. அதுதான் கொஞ்சம் யோசனையாயிருக்கு."

சிண்டிகேட் பேங்கில் சீனிவாசலு இருந்தார்.

"ஏமண்டி.... மீரு எவரு?"

"எங்களுக்கு வாடகைக்கு வீடு வேண்டியிருக்கு.. உங்க வீட்டைப் பார்த்தோம்."

"வாடகை செவன் பிஃப்டி. டு மன்த்ஸ் அட்வான்ஸ்."

"வாட்டர் ஃபெசிலிட்டி லேது."



இவர்களை லட்சியம் செய்யாமல், உள்ளே சென்று விட்டார் சீனுவாசலு.

"இவர் வீடே வேணாம்ணே" என்றான் பாபு வெறுப்பாக.

"நானும் அதையேதான் நினைச்சேன்."

அந்த வீட்டின் நீள அகலம், சூழல் பற்றிய கற்பனைகள் சட்டென்று விலகி நிறமிழந்து போயின. கொஞ்ச நேரம் இருவரும் மௌனமாக நடந்தார்கள்.

"ஆட்டோவுல போயிடலாமாண்ணே? ஆளுக்கு மூணு ரூபாதான் ஆகும்" மௌனத்தைக் கலைத்தான் பாபு.

"இப்ப அவசரமாப் போயி அங்க என்ன



செய்யப் போறே? மெஷினையும் பேப்பர் பண்டல்களையும் பார்த்துட்டிருக்கப் போறியா? பேசாம நடந்தே போயிடலாம் வா!"

சம்மதித்து நடந்தாலும், பாபுவின் பார்வை வானத்தைத் தொட்டுத் திரும்பியது.

வேலை பார்க்கும் பிரஸ்ஸிலேயே தங்கிக் கொள்வதில் அசௌகரியமிருந்தாலும், மிகவும் கஷ்டமாகத் தோன்றவில்லை ராகவனுக்கு. அவர்கள் தனித் தனியாக நடந்தாலும், எண்ண ஓட்டங்கள் ஒரே மாதிரியாக இருந்தன. அதை நிரூபிப்பது போல,

"அண்ணே தனியா ரூம் பார்த்து சமையல் பண்ணினால்தான் கட்டுப்படியாகும்ணே. இல்லேன்னா, இந்த ஓட்டல்ல போடுற காரமான குழம்பைச் சாப்பிட்டு, சீக்கிரமே ஒரு வழியா ஆயிடும்" என்றான் பாபு தீர்மானமாக.

"நீ சொல்றது உண்மைதான். நல்ல வீடு கிடைக்கணுமே."

மறுநாள் காலை சாப்பிடக் கிளம்பும்

ஸ்வரமஞ்சரி

போது ஞாபகத்திற்கு வந்தது.

"நாம காலையிலே டிபன் சாப்பிட்டோமே அந்த ஓட்டல்காரம்மாகூட இடம் சொன்னாங்க, நினைவிருக்கா?"

"ஓ... அந்த ஓட்டு வீட்டைச் சொல்றீங்களா? மழைக் காலம் இது. பார்த்துக்குங்க.."

"அதையும் பார்த்துட்டு ஒரு முடிவுக்கு வரலாமே."

அன்று சாயங்காலம் அந்த வீட்டைப் பார்க்கப் போனார்கள்.

அடர்த்தியான குடியிருப்புகளிலிருந்து கொஞ்சம் விலகி, இரண்டு ஓட்டு வீடுகள் தெரிந்தன. வீட்டுக்காரம்மா வயதானவராக இருந்தாள். கட்டிலில் படுத்திருந்தவள், மெதுவாக எழுந்து உட்கார்ந்தாள்.

"பாவம்... இவங்களுக்கு உடம்பு சரியில்லே..." என்று தெரிவித்த ஓட்டல்காரம்மாள் "வீட்டுக்கு ஆள் வருவாங்கன்னு சொன்னேனே, அது இவங்கதான்" என்று அறிமுகப்படுத்தினாள்.



"பயணிகள் எல்லாம் ரயில்ல ஏற மறுக்குறாங்களே. விபத்து நடந்துடும்னு பயப்படறாங்களா...?"

"ம்ஹூம்... பிஸ்கட், முறுக்கு, சுண்டலுக்குப் பதிலா மாட்டுத் தீவனம் தான் சாப்பிடணும்னு அமைச்சர் உத்தரவு போட்டுட்டாராம்!" - வே. ஆறுமுகம்

சிரமத்தைப் பாராமல், தடுமாறியவாறு எழுந்தாள் அந்த அம்மாள். வீட்டைத் திறந்து காண்பித்தாள்.

"ஓட்டு வீடு ஓவராக் குளிரும்ணே" என்றான் பாபு மெதுவாக.

கார்ப்பரேஷன் தண்ணி வருமென்று ஒரு குழாயைக் காண்பித்தாள்.

"வாடகை சொல்லிட்டியா...?" என்றாள் அந்த அம்மா, ஓட்டல்காரம்மாவைப் பார்த்து.

"ம்... சொல்லிட்டேன். ஐந்நூறு ரூபா வாடகை, ஒரு மாதம் அட்வான்ஸ்.." என்றாள் மறுபடி.

"பாத்ரூம்.." இழுத்தான் பாபு.

"குளிக்கிறது உள்ளேயே குளிச்சுக்கலாம். லெட்ரின் வசதியில்லே. பக்கத்துல பொதுக் கழிப்பிடம் இருக்கு."

"என்னண்ணே, இப்படிச் சொல்றாங்க?"

ராகவன் வீட்டுக்காரம்மாவின் நைந்து போன உடம்பையும், அந்தக் குடும்பச் சூழ்நிலையையும் பார்த்தான்.

"இவங்களை யார் கவனிச்சுக்குறாங்க?"

"இந்தம்மாவோட கணவர் இருக்காரு. அவருக்கும் வயசாயிடுச்சு. மருந்துக்கடை வரை போயிருக்காரு."

"இவங்க உடம்புக்கு என்ன?"

"எல்லாம் பற்றாக்குறைதான்... வறுமைதான். இந்த வீட்டு வாடகைதான் வருமானம். அதிலயும் கொஞ்ச நாளா ஆளில்லே."

"அண்ணே... நானூறுக்குக் கேளுங்கண்ணே..." என்றான் பாபு மெதுவாக. பின், "எனக்கு இந்த வீடு பிடிக்கலே" என்றான்.

அவர்களுக்குத் தமிழ் தெரியாததால், இதைப் புரிந்து கொள்ள முடியவில்லை. யோசனை செய்து மறுநாள் கூறுவதாகச் சொல்லிவிட்டு வந்தார்கள்.

திரும்பும்போது மௌனமாய் வந்தான் ராகவன்.

"என்னண்ணே, ரொம்ப யோசனை பண்றீங்க? எந்த வீடு செலக்ட் பண்ணப் போறீங்க?"

"முதல்ல குழப்பமாத்தானிருந்தது. இப்போ பார்த்த வீட்டையே முடிச்சுடலாம். நாளைக்கு அட்வான்ஸ் கொடுத்துடுவோம்."

"ஏண்ணே? நல்ல வீட்டையெல்லாம் விட்டுட்டு.."

"இல்லே பாபு. நாம கொடுக்குற வாடகை, இவங்களுக்கு ரொம்ப உதவியா இருக்கும். நம்மாலகூட மத்தவங்களுக்கு உதவ முடியுதேன்னு நினைக்கும்போது நிம்மதியாயிருக்கு. சந்தோஷமாயிருக்கு. மத்த அசௌகரியங்களெல்லாம் பெரிசாத் தோணலே பாபு." ○





டெல்லியில் ராதிகா செல்வி!

நாடாளுமன்றத்துக்குள் முதல்முறையாக காலடி வைத்திருக்கும் ராதிகா செல்வி, எம்.பி.யிடம் முதல் அனுபவத்தைக் கேட்டோம்.

“டெல்லியில் கால் வச்சதுமே மனசுக்குள்ள மழை! சாதாரணமா சொந்தக்காரங்களைப் பார்க்க, இல்லைனா டூர் போறது மாதிரி இல்லையே இது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட எம்.பி.யா நான் வந்தது புதிய அனுபவம்தான். இதுக்குக் காரணமா இருந்த என் கணவரையும், என்னைத் தேர்ந்தெடுத்த தொகுதி மக்களையும், தலைவர் கலைஞரையும், தளபதியையும் நினைச்சுக்கிட்டேன்.

நாடாளுமன்றத்துக்குள்ள நுழைஞ்சதுமே இனம் புரியாத உணர்வு. அதை எப்படிச் சொல்றதுன்னு தெரியலை. அங்க மொத்த இந்தியாவையும் ஒரே இடத்துல பார்த்த திருப்தி. வரலாற்றுப் புத்தகத்துல படிச்ச தலைவர்களெல்லாம் மனசுக்குள்ள வந்து போனாங்க. நேரு, அண்ணா, இந்திரான்னு பெரிய ஆட்கள் இருந்த மன்றம். நாம வந்திருக்கிறது சாதாரண இடமில்லைங்கறது புரிஞ்சுது. இந்த இடத்துல கொண்டு வச்சிருக்கிற தொகுதி மக்களுக்கு, நிறைய நல்லது பண்ணணும்னு உறுதி எடுத்துக்கிட்டேன்.

எனக்கு இந்தி பேசத் தெரியுங்கறதால, மொழிப் பிரச்னை இல்லை. முதன்முதலா போனதால கொஞ்சம் தடுமாற்றம் இருந்தது. கொஞ்சம் விசாரிச்சா, ஊர், பெயர் தொகுதி தெரியாத எம்.பி.க்கள் எல்லாம் நல்லா உதவறாங்க. என்னோட அம்மாவும் வந்திருந்ததால, குழந்தையை அவங்க கவனிச்சுக்கிட்டாங்க. மாலை நேரத்துல பவானி ராஜேந்திரன் எம்.பி. அவங்களுக்கு இந்தி தெரியாததால, என்னைக் கூட்டிட்டுப் பர்சேஸ் பண்ணப் போனாங்க. புது மனிதர்கள், புது இடம், கண்ணியமான பதவி, அதிகப் பொறுப்பு. மக்களுக்கு நிறையச் செய்யணும். அது மட்டும்தான் இப்ப மனசுல நிறைஞ்சு இருக்கு.

-ஜி

படம்: நன்றி: நக்கீரன்

அம்மை என்கிற உளி!

சிரித்து வாழ வேண்டும்-47

நாகேஷ்

ஒருமுறை தெலுங்குப்பட ஷூட்டிங்கிற்காக, ஆந்திராவின் கிராமப்புறப் பகுதியில் இருந்தேன். வேடிக்கை பார்க்க வந்த ஒருவர் என்னிடம் எதையோ சொல்ல விரும்புகிறார் என்று புரிந்து கொண்டேன்.

அருகில் அழைத்தேன். வந்தவர், என் கைகளைப் பிடித்துக் கொண்டு, "உங்களுக்கு ஹீரோ மாதிரி பர்சனாலிடி எல்லாம் இல்லை. ஆனா, நடிப்பு, டான்ஸ் எல்லாத்திலேயும் பிரமாதப்படுத்தறீங்களே! எப்படி சார் உங்களால இப்படி நடிக்க முடியுது?" என்றார்.



* மேஜர் சந்திரகாந்த் படத்தில் ...

நான் சிரித்தபடி சொன்னேன்.

"உங்க வீட்ல ஆட்டுக்கல் இருக்குமில்லையா? அதுல இட்லி, தோசைக்கு மாவு அரைச்சுப் பார்த்திருக்கீங்களா? ஆறு மாசம், ஒரு வருஷத்துக்கு ஒரு தடவை அந்த ஆட்டுக் கல்லைப் பொளிவாங்க. எதுக்குத் தெரியுமா? ஆட்டுக்கல்லைப் பொளிஞ்சா, மாவு நன்றாக அரைபடும். இட்லி நன்றாக வரும். ருசி உசத்தியாக இருக்கும். என் முகமும் ஆட்டுக் கல்லைப் போலத்தான். ஆண்டவன் 'அம்மை' என்கிற உளியை வெச்சு முகம் முழுக்க நல்லா பொளிஞ்சிட்டாரு. அதனாலதான் நடிப்புங்கிற இட்லி நல்லா வருது" என்றேன்.

எனது பதில் அந்த ரசிகரை நெகிழ வைத்தது.

தெலுங்குப் பட உலகின் முன்னணி இயக்குனர்களில் ஒருவர் தாசரி நாராயணராவ். விஷயம் தெரிந்தவர். மக்களின் டேஸ்ட் புரிந்தவர். பேசிக் கொண்டே இருப்பார். நாம் ஏதாவது ஒரு விஷயம் சொல்லி, அது அவரைக் கவர்ந்து விட்டால், அதை எப்படியாவது, எங்கேயாவது, தன்னுடைய படத்தில் இடம் பெறச் செய்துவிடுவார். அந்த விஷயத்தில் மனுஷர் கில்லாடி!



* சங்கரதாஸ் சுவாமிகள்

ஒருநாள், படப்பிடிப்பு நடந்த இடத்துக்கு முக்கால் மணி நேரம் காரில் போகும்படி இருந்தது. தாசரி, நான், இன்னும்

ஓரிருவர் காரில் இருந்தோம். தாசரி, "நாகேஷ்காரு! நான் ஒரு கதை வைத்திருக்கிறேன். கணவன் - மனைவி சப்ஜெக்ட். திருமணமான ஒரு கணவன், தன் மனைவியால் எப்படியெல்லாம் சித்ரவதை அனுபவிக்க வேண்டி இருக்கிறது. அதேசமயம் கல்யாணம் என்கிற பந்தத்திலிருந்து அவரால் எப்படி வெளியேற முடியாமல், பாரம்பரியம், கலாசாரம் போன்ற கயிறுகள் அவனைக் கட்டிப் போட்டிருக்கின்றன என்பதுதான் கதையின் சாரம். மனைவி, கணவன் மீது செலுத்தும் அன்பு, கணவன் மனைவி மீது செலுத்தும் அன்பு, அதே நேரம், கணவன் மீதான மனைவியின் ஆதிக்கம். எதிர்க்க வேண்டும் என்று உள்ளூர நினைத்தாலும், அதைச் செய்ய முடியாமல் அடங்கிப் போகும் குணம்" என்று ஒவ்வொன்றுக்கும் தான் உருவாக்கி இருக்கும் சென்டிமெண்ட்டான சம்பவங்களை வெகு சுவாரசியமாக சொல்லிக் கொண்டே வந்தார்.

"இப்படி ஒரு படம் எடுத்தா, சுத்தமா ஓடாது!" என்றேன்.

அவருடைய முகத்தில் இலேசான அதிர்ச்சி. "ஒரு மனைவி, கணவனை டார்ச்சர் பண்ணுவது போலக் கதை இருந்தால், படம் எப்படி பெண்கள் மத்தியில் எடுபடும்?" என்று கேட்டேன்.

"சங்கரதாஸ் ஸ்வாமிகள் என்கிற அந்தக் காலத்து நாடக ஆசிரியர் பற்றிக் கேள்விப்பட்டு இருக்கிறீர்களா? அவர் எத்தனை



• தாசரி நாராயணராவ்

சூப்பர் டூப்பர் சக்ஸஸ் நாடகங்கள் எழுதி இருக்கிறார் தெரியுமா? அவர் எழுதி இருக்கிற அற்புதமான விஷயம் ஒன்று எனக்கு நினைவுக்கு வருகிறது. அதை இந்தப் படத்தில் ஒரு பாடல் காட்சியாக சரியான இடத்தில் வையுங்கள். கதையின் போக்கையே மாற்றி, ஒரு புதுப்பொலிவு கிடைக்கும். மக்கள் நிச்சயம் ரசிப்பார்கள்" என்று சொன்னேன்.

அவர் நான் சொல்லுவதைக் கேட்க ஆர்வமாக இருந்தார். நான் நினைவு கூர்ந்த சங்கரதாஸ் ஸ்வாமிகள் சொன்ன விஷயம் இதுதான்: பசும்பால், மாட்டினுடைய மடியில் வெகு பத்திரமாக இருக்கிறது. மடியில் இருக்கும் காம்பிலே துவாரம் இருந்த போதிலும், ஒரு சொட்டுப் பால்கூட வெளியே வராது. பால்காரர், அதன் மடியிலே கொஞ்சம் தண்ணீரைத் தெளித்து, கன்றுக்குட்டியை பால் குடிக்கவிட்டதும், மடியில் உள்ள பால் கறப்பதற்கு ரெடியாகி விடுகிறது.

பாலைக் கறக்கிறபோது, மடியில் இருந்த பால், பாத்திரத்துக்கு ஏற்ப தன்னை மாற்றி, அங்கே தன்னை ஐக்கியப்படுத்திக் கொள்ளுகிறது.

அடுப்பில் வைத்துக் காய்ச்சத் தொடங்கியவுடன், சூடு தாங்காமல் பதைபதைக்கிறது. சூட்டில் தண்ணீர் மட்டும் பாலிலிருந்து தனியே பிரிந்து, ஆவியாகிற போது, 'நம் நண்பனை எங்கே காணோம்?' என்று தேடியபடி, பொங்கி, பாத்திரத்துக்கு வெளியே எட்டிப் பார்க்கத் துடிக்கிறது.

கொஞ்சம் தண்ணீரை எடுத்து பாலில் தெளித்தவுடன், 'அட! நம்ம நண்பர் வந்துவிட்டார்!' என்று சந்தோஷமாய் பாத்திரத்துக்குள்ளே அடங்கிப் போகிறது. வாழ்க்கையில், பாலைப் போன்றவள் மனைவி. பசுவின் மடியில் இருக்கிற பாலைப் போல, பெற்றோர்களுடன் பத்திரமாக பெண் இருக்கிறாள் என்று ஆரம்பித்து, பால் - தண்ணீர் உறவையும், கணவன் - மனைவி உறவையும் ஒப்பிட்டுச் சொன்னேன்.

தாசரி, அந்தக் கதையைப் படமாக

எடுத்தார். 'சொர்க்கம் நரகம்' என்ற அந்தப் படத்தில், நான் சொன்ன விஷயத்தைப் பாட்டாக இடம் பெறச் செய்தார். அந்தப் படம் ஹிட்.

காஞ்சனாம்மா என்று ஒரு தெலுங்குப் படத் தயாரிப்பாளர் இருந்தார். அவருடைய படங்களுக்கு புரொடக்ஷன் மானேஜராக ராதா இருந்து வந்தார். அவர், காஞ்சனாம்மாவின் பெண்ணையே காதலித்து, திருமணம் செய்து கொண்டு விட்டார்.

திருமணத்துக்குப் பின், ராதாவை நான் சந்தித்தபோது, "என்ன செய்வதாக திட்டம்?" என்று நான் கேட்க, நான் ஒரு தமிழ்ப்படம் தயாரிக்கப் போறேன். நீங்க ஹீரோவா நடிக்கணும்."

படத்தின் கதையையும் சொன்னார்.

ஒரு பள்ளிக்கூட வாத்தியார். அவருக்கு கல்யாண வயசில் ஒரு பெண். அவளுக்கு, தன்னிடம் படித்த மாணவர்களில் நாலு பேரில் ஒருவரைக் கல்யாணம் பண்ணி வைக்கலாம் என நினைத்து, அதற்கான முயற்சியில் இறங்கினார். நாலு பேரையும் சந்திக்கிற அனுபவம், அவருக்கு ஏற்படுகிற ஏமாற்றம்... இப்படியாக கதை போகும். சென்டிமெண்ட் காட்சிகள் நிறைய உண்டு. படத்தின் டைரக்டர் துரை.

நான் அந்த வயசான பள்ளிக்கூட வாத்தியார் கேரக்டரில் நடித்திருந்தேன். முழுப் படத்தையும் போட்டுப் பார்த்துவிட்டு, ரொம்ப உணர்ச்சி வசப்பட்டு, என்னைப் பாராட்டினார் தயாரிப்பாளரான ராதா.

படம் முடிந்தவுடன், விநியோகஸ்தர்களை அழைத்து போட்டுக் காட்டினார். படத்தைப் பார்த்த, விநியோகஸ்தர்கள் ஆர்வத்துடன் படத்தை வாங்க முன்வரவில்லை என்பது மட்டுமில்லை, ஒரு விநியோகஸ்தர், தயாரிப்பாளரிடம், ரொம்ப வெளிப்படையாக, "சிவாஜி பண்ணி இருக்க வேண்டிய படம். நாகேஷைப் போட்டுட்டீங்களே!" என்றார்.

அதைக் கேட்டபோது எனக்கு சந்தோஷமும், வருத்தமும்.

'எங்க வாத்தியார்' படத்தை பத்திரிகைகள் பாராட்டி எழுதினார்கள். அந்தப் படத்துக்குத் தமிழக அரசாங்கத்தின் பரிசு கிடைத்தது என்பதெல்லாம் சற்று ஆறுதல் அளித்த விஷயங்கள்.

என்னுடைய திரைப்பட உலக வாழ்க்கையில் நான் பழகிய, சந்தித்த மனிதர்கள் ஏராளம். அவர்களில் இன்றளவும் எனக்கு நண்பர்களாக இருக்கிறவர்களும் உண்டு. ரயில் சிநேகம் போல இடையிலே வந்து, வழியிலே விடை பெற்றவர்களும் உண்டு. ஆனால் நான் சில நேரங்களில் சந்தித்த சில மனிதர்களை, என்னால் என்றைக்குமே மறக்க முடியாது. அப்படிப்பட்டவர்களில் ரொம்ப முக்கியமானவர் ஜெயகாந்தன்.

(சிரிப்பு தொடரும்)



"மாப்பிள்ளை வெளிநாட்டுல எண்ணெய் வயலுல வேலை பார்க்கிறதா பொய் சொல்லுறாருன்னு நினைக்கிறேன்..."

"எதனால அப்படித் தோணுது?

"என்ன வேலைன்னு கேட்டேன்... எண்ணெய் வயலுக்கு பூச்சி மருந்தடிக்கிற வேலைங்கிறாரே!"

- தூத்துக்குடி வி. சகிதா முருகன்

பறவை

அந்தப் புறா, கூட்டிலிருந்து விடுபட்டுப் பறக்கிறது. கூண்டு பூட்டியிருக்கிறது. கூண்டின் ஒரு பக்கம் கம்பிகள் உடைந்து, வெளிப்பக்கமாய் வளைந்து நீண்டிருக்கின்றன. அந்தப் புறா கம்பிகளை முட்டித் தள்ளி வெளியே வந்திருக்க வேண்டும். அதன் கழுத்துக்குக் கீழே சின்ன ரத்தக் கோடு தெரிகிறது. அறையில் இருக்கும் ஜன்னல் வழியே தூரத்தில் மலைச் சாரல் தெரிகிறது. அதன் தலையில் வகிடாய் சின்ன நீர்வீழ்ச்சி. காலடியில் பசுமைக் காடு. அந்த அற்புதக் காட்சியால் ஈர்க்கப்பட்டு, அந்தத் திசையை நோக்கி அந்தப் புறா...

''என்னப்பா செய்யற...?'' பின்னால் வந்து நின்ற அப்பாவின் நிழல் புறாவின் மேல் விழுந்தது... "கம்ப்யூட்டர் கோர்ஸுக்கு விசாரிச்சியா?'' அவர் குரலில் இலேசாகக் கோபம் எட்டிப் பார்த்தது.. செல்வம் மௌனமாய் ஓவியத்திலிருந்து கையை எடுத்தான்.

"ஒரு இன்ஜினீயரிங் டிகிரி இருந்தா நல்லதுங்கறாங்க."

"அப்ப கம்ப்யூட்டர் கோர்ஸும் சேரப் போறதில்லையா?'' ''என்ன பண்றதா உத்தேசம், செல்வா? பி.ஏ. முடிச்சி ஆறு மாசம் ஆச்சு. சி.ஏ ஆர்டிகின்ஷிப் பண்ண, ஆடிட்டர் ரங்கராஜன் கிட்ட போன்னா போக மாட்டங்கற... காஸ்டிங் வேணாம்னுட்ட..."

"இதெல்லாம் பாஸ் பண்ண முடியும்னு எனக்கு நம்பிக்கை இல்லைப்பா... இரண்டாவது வருஷ மேனேஜ்மெண்ட் அக்கவுண்டிங் பேப்பர்லயே ஐம்பத்திரண்டு பர்சன்ட்தான் வந்தது..."

"சீதாராமனைப் பாரு, சி.ஏ படிச்சிகிட்டே கார்த்தால காஸ்டிங் கிளாஸ் போறான். பாலு, ஐ.ஐ.டி என்ட்ரன்ஸ் பாஸ் பண்ணிட்டான். நீ பி.ஏ கார்ப் பரேட்டையே தட்டுத் தடுமாறி பாஸ் பண்ணியிருக்க. வெறும் பி.ஏவை வச்சிகிட்டு என்ன செய்யறது?''

ஏமாற்றத்தின் எதிரொலியாய் வார்த்தைகள். அவரின் இயல்பு கொஞ்சம் மாறிப் போய்விட்டது. செல்வத்துக்குத் தெரியும். எல்லாவற்றுக்கும் உபதேசிக்கிறார். வீடு திரும்பியதும் ஈசி சேரில் சாய்ந்து கொண்டு பின்னணியில் சங்கீதம் ஓட, புத்தகத்தில் ஆழ்ந்து போய்க் கிடக்கிறவர், அடிக்கடி அவனை விசாரித்து கோபிக்கிறார்.

அவருக்கு இன்னும் ஐந்து வருடங்கள் உத்தியோகம் பாக்கியிருக்க, செல்வத்துக்கு வேலை கிடைக்க வேண்டிய அவசியத்தில் இருந்தார்.

செல்வம், அவர் சொல்லப் போகும் தீர்வை எதிர்பார்த்து, மௌனமாய் இருந்தான்.

"மேலயும் படிக்காம, கம்ப்யூட்டர் கோர்ஸும் சேராம, வெட்டியா இருக்கறதுக்குப் பேசாம வேலைக்குப் போ. சந்தானம், சீஃப் அக்கவுண்ட்டண்டா இருக்காருல்ல. அவருகிட்ட உன்னைப் பத்திச் சொல்லியிருக்கேன். வரச் சொல்லியிருக்காரு. அவங்க கம்பெனியில அக்கௌண்ட்ஸ் டிபார்ட்மெண்ட்ல ஒரு வேகன்ஸி இருக்காம். அவரைப் பார்த்துப் பேசு. அவர் கேக்கற கேள்விக்கெல்லாம் நல்லா பதில் சொல்லு. வேலை போட்டுத் தருவாரு. சர்டிஃபிகேட்ஸ், மார்க் ஷீட் எல்லாம் எடுத்துக்கிட்டு போ..."

மேஜையில் பரப்பிய காகிதங்களிடையே, அவை பறக்காமல் இருக்க வைத்த ஒரு பெரிய பேப்பர் வெயிட் போல சந்தானம் இருந்தார். சொக்காய்ப் பித்தான் இரண்டை அவிழ்த்து விட்டுக்கொண்டு, சின்ன பொத்தல் விழுந்த பனியன் தெரிய, மூக்குக்கண்ணாடி வியர்வை வழுக்கலில் மூக்கு முனையில் நழுவுவதைச் சரி செய்துகொண்டு, ஸ்ரீசூர்ணம் பாதி அழிந்து, அவசர கதியில் அவனது காகிதங்களை ஆராய்ந்தார். அவன் கொடுத்த மார்க் விவரங்களை கையில் வைத்துப் புரட்டிவிட்டு, கேலண்டர் பார்த்து விரலில் கணக்குப் பண்ணி, "நாலாம் தேதி



ஆனந்த் ராகவ்

ஜாயின் பண்ணிடு— நல்ல நாளு" என்று அனுப்பிவிட்டார். வெளியே வரும்போது அவர் "உங்க அப்பாவும் நானும் கிளாஸ் மேட்டு" என்று சொன்னது ஞாபகம் இருந்தது.

செல்வம் திரும்பி வரும்போது வேலை கிடைத்த உற்சாகம் இல்லாமல், கொஞ்சம் சோகமாய்த் தெரிந்தது. இந்த ஐந்து மணி இலேசான வெயில் விடைபெறும் வேளையை, இனி தினமும் பார்க்க முடியாது. அடுத்த வாரத்திலிருந்து அப்பாவைப் போல சாவி கொடுத்த பொம்மை மாதிரி இயங்க வேண்டும்.

பிரதான சாலைக்கு அருகே அடர்த்தியான மரங்களுக்கு அடியில், சின்னச்சின்னதாய் உருவாகியிருந்த தற்காலிகக் கடைகள் அருகே ஜனங்கள்

உலவிக் கொண்டிருந்தார்கள். ஓரிடத்தில் நான்கைந்து பேர் நின்று கொண்டு வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்கள். செல்வம் அந்தக் கும்பலில் ஒருவனாய் போய் நின்றான். சின்னதாய் மரத்தினால் ஆன ஒரு ஸ்டாண்டு வைத்து, அதன் மேல் பலகை ஒன்றும், அதன் மேல் வெள்ளைத் தாளும் ஒரு கிளிப் போட்டு வைத்திருக்க, அதன் எதிரில் அமர்ந்து கொண்டு, எதிரே ஸ்டூலில் அமர்ந்திருந்த அந்த ஆளை வரைந்து கொண்டிருந்தான். செல்வம் பின்னால் நின்று பார்த்தான். காகிதத்தில் கறுப்புக் கோடுகளாய் எதிரில் அமர்ந்திருந்தவனின் முகம் அவன் அசல் முகத்தைவிட அழகாய் எதிரொலித்தது. ஓவியன் வரைந்து முடித்திருந்தான். அந்த ஆள் எழுந்து ஓவியத்தைப் பார்த்தான். திருப்தியாய்ப் புன்னகைத்தான். அந்த ஆள் ஓவியனுக்குப் பணத்தைக் கொடுத்துவிட்டுப் போனவுடன், வேடிக்கைப் பார்த்து முடித்திருந்த கூட்டம் கலைந்து போய், அந்த இடம் வெறுமையாய் இருந்தது. செல்வம் இன்னும் நின்றிருந்தான். மரத்தில் கட்டியிருந்த சின்னப் பலகை, காகித அளவுக்கு ஏற்றாற்போல் கட்டணம் காண்பித்தது.

"...எனக்குக்கூட ஸ்கெட்சிங் தெரியும்."

"அப்படியா" என்றான் சுவாரசியமில்லாமல். அவன் ஓவியங்களை ஒவ்வொன்றாய் எடுத்து, காகிதத்தால் சுற்றி வைத்தபடி கிளம்பத் தயாரானான்.

"உக்காருங்களேன். ஒரு மாறுதலுக்கு உங்களை வரைஞ்சிக்கங்களேன். நான் வரையறேன்."

ஓவியன் அவனை சுவாரசியமாய்ப் பார்த்தான்.

"உங்க கழுகுக் கண்ணும், அந்தக் குறுந்தாடியும் ஸ்கெட்சிங் பண்ணா பிரமாதமா வருமில்ல..."

செல்வத்தின் கண்களில் தெரிந்த ஆர்வம் அவனுக்கு உற்சாகம் தந்தது. சிரித்தபடி உட்கார்ந்தான். சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டான். செல்வம் அவனை பக்கவாட்டில் பார்த்தபடி உட்காரச் சொல்லிவிட்டு, காகிதத்தை எடுத்து கிளிப்பில் பொருத்திக் கொண்டு இருக்கையில் அமர்ந்து, அவனை நீர்க்கமாய் ஒரு பார்வை பார்த்துவிட்டு, கறுப்புப் பென்சிலை எடுத்து காகிதத்தில் ஒற்ற ஆரம்பித்தான். கண்கள் அளப்பதும், விரல்கள் விரைவதுமாய் ஓவியத் திட்டல் தொடர்ந்தது.

"சிகரெட்டு பிடிக்கறது வேணாம்னா எடுத்துடறேன்."

"இல்ல, இருக்கட்டும். படம் நல்லா வரும்."

"படிக்கறியா...?"

சொன்னான்.

செல்வம் வரையத் தொடங்கினான். அவன் திலீப்குமார். ஓவியப் பள்ளியில் படித்தவன். சில பத்திரிகைகளில் திலீப் என்கிற பெயரில் அவன் ஓவியங்கள் வந்திருக்கின்றன. அவ்வப்போது தன் ஓவியங்களை வைத்து கண்காட்சி வைக்கிறான். பொழுதுபோக்காய் வீதியில் ஸ்கெட்சிங் செய்கிறவன்.

செல்வத்துக்கு அவன் முகம் பிடித்திருந்தது. அவன் கண்கள் கூர்மையாய் இருந்தன. முன் பக்க வழுக்கைக்குத் தயாரான நெற்றி, விசாலமாய், கோடுகள் இல்லாமல்... அவனை வரைவது எளிதாகவே இருந்தது. அவன் ஓவியங்களைப் பற்றி தன்னை மறந்து பேசினான். 'ஓவியம் போல் தனித்தன்மையான ஒரு கலை வேறு இல்லை' என்றான். ஜாக்சன் போலாக்கின் ஆக்ஷன் பெயின்டிங் முறையைப் பற்றி சிலாகித்தான். 'ஓவியங்கள் தாங்களே உயிரூட்டிக் கொள்கின்றன. வரைபவன் ஒரு கருவிதான்' என்றான்.

நடைபாதையில் அவ்வப்போது சிலர் நின்று பார்த்தார்கள். செல்வத்துக்குப் பின்னால் ஒரு சிறிய கூட்டம் நின்று பார்த்துக் கொண்டிருந்தது. ஓவியனை வரையும் அவன் கை வேகத்தைப் பார்த்து, அவர்களுக்குள் சன்னமாய் பேசிக் கொண்டார்கள்.

கொஞ்சம் சரி பார்த்து, சின்னச் சின்னதாய் அங்கங்கே தொட்டு... விரலால் கறுமையைத் தீட்டி... கொஞ்ச நேரத்தில் செல்வம், அவனை அச்செடுத்து முடித்

''எதிர்வீட்டுப் பெண்ணைக் காதலிக்கிறாயா— எப்படி?''
''ஒற்றைச் சாளர முறையில்தான்...''
- எஸ். மோகன்



திருந்தான். "முடிஞ்சிருச்சுங்க" என்றான்.

அவன் எழுந்து வந்தான். தன் உருவத்தை இலேசான பிரமிப் போடு பார்த்தான். நாசியின் வடிவ அமைப்பையும், கண்களின் கூர்மை யையும் அச்சாய் பிரதிபலித்ததை யும், சிகரெட்டு பற்றிய உதடுகளின் அழுத்தத்தையும், பரவும் புகை மூட்டத்தையும், கண்களில் இலே சான இடுங்கலையும், சிகரெட்டின் நெருப்பு முனையின் நுணுக்கத்



பயணிக்கும் புட்டு!

திருச்சி மாவட்டத்தில் (முசிறி தாலுக்கா) உள்ள புலிவலம் என்ற ஊரில் பிரபலமான ஒரு பொருள் தயாராகிறது. குழாய்ப் புட்டு!

பச்சரிசி, குருணை, உருண்டை வெல்லம், தேங்காய் ஆகியவற்றின் கலவைதான் இந்தப் புட்டு. ஒரு கிராமமே இந்தப் புட்டுத் தயாரிப்பில் ஈடுபட்டுள்ளது. இங்கிருந்து ஆறேழு மாவட்டங்களுக்குத் தினமும் அதிகாலையில் புட்டு விற்பனைக்காகப் பயணிக்கிறது.

- ராஜி ராதா

தையும், தீர்க்கமான கோடுகளினால் வரையப் பட்ட அவன் ஓவிய நேர்த்தியைப் பார்த்து, "ப்ரில்லி யண்ட்" என்றான் வியப்பு மேலோங்க.

"கலாக்ஷேத்ரால ஒரு ஒர்க் ஷாப் போனேன். அங்க கத்துகிட்டேன். லாண்ட் ஸ்கேப் பெயிண்டிங் நிறைய ஆயில் பெயிண்டிங்ல பண்ணியிருக்கேன். வாட்டர் கலர்ல கூட செஞ்சிருக்கேன் சார்". செல் வம் தன் ஓவியத்துக்குக் கிடைத்த அங்கீ காரத்தில் பெருமிதமாய்ச் சொன்னான்.

செல்வத்தை அரைத் தழுவலாக தோளில் அணைத்துக் கொண்டான். "இன்னும் கொஞ்சம் பழகினா, பர்ஃபெக்ஷன் வந்துரும்" என்றான். செல்வம் எதிர்பார்க்காமல் சட் டைப் பாக்கெட்டிலிருந்து நூறு ரூபாயை எடுத்து நீட்டினான்.

மறுத்தான்.

"என் படம் வரைஞ்சதுக்கு. என் போர்ட்ரெயிட்டே எங்கிட்ட இல்ல. இது தான் முதல். இருநூறு தரலாம். ஆனால் மூக் கைக் கொஞ்சம் சப்பையாக்கிட்ட, அதனால குறைச்சிட்டேன்" என்று சிரித்தான்.

செல்வம் தயங்கியபடி பின் வாங்க... "உன் மொத சம்பளம்னு வச்சிக்கயேன்...!" செல்வத்தின் கையிலே திணித்து விட்டு, அவன் முதுகில் தட்டிக் கொடுத்து விட்டுக் கிளம்பினான்.

அவன் போவதைப் பார்த்துக் கொண்டு, யாரோ தன் பெயர் சொல்லி அழைத்தபடி மோட் டார் சைக்கிளில் விரைவது கவனத்துக்கு எட்டாமல், நின்றான். வீட்டை நோக்கி நடக் கும்போது, நூறு ரூபாயின் மொடமொடப்பு கையில் சந்தோஷச் சுமையாய்க் கனத் தது. பாக்கெட்டில் போட மனமில்லாமல், பொக்கை வாய் கிழவரின் சிரிப்பு உற் சாகம் தர, கையில் வைத்தபடியே நடந்தான்.

வீடு அமைதியாய் இருந்தது. அடுக்களை யில் பாத்திரம் உருளும் சத்தம், பக்கத்து வீட்டு ரேடியோவின் பாட்டு, நாள் முற்றுப் பெறும் ஆயுத்தத்தில் காகங்களின் கரை சல் --- அந்த சாயந்திர நேரத்து ஓசைகள் அத்தனையும் மனத்தின் பிரதிபலிப்பாய் ரம்மியமாய் ஒலித்தன. காகிதமும் பென்சில், பிரஷ்ஷுமாய் இறைந்திருந்த அறையை, யாரோ சுத்தம் செய்து வைத்திருந்தார்கள். மேஜை மேல் அந்த ஓவியம் இன்னும் இருந் தது. புறா, கூண்டிலிருந்து விடுபட்டு, தூரத்து மலையைத் தேடிப் போகும் காட்சி காற்றில் படபடத்துக் கொண்டிருந்தது. ○

கண்ணாடிக் கல்வெட்டுகள்

கம்பீரம் என்பது
எழுவதில் மட்டுமா
விழுவதிலும் இருக்கிறது!

அலை எழும்போது
கம்பீரமாகிறது!
அருவி விழும்போதும்
கம்பீரமாகிறது!

மரம் எழும்போது
கம்பீரமடைகிறது!
மழை விழும்போதும்
கம்பீரமடைகிறது!

கம்பீரம் என்பது
ஒப்பனை அல்ல
தோலின் நிறம்...!
கம்பீரம் என்பது
உண்டாக்குவதல்ல
உருவாவது...!

காற்றின் கம்பீரம் புயல்!
நீரின் கம்பீரம் கடல்!
மனிதனின் கம்பீரம் உணர்ச்சி!

கம்பீரம் இல்லாதவனுக்குக்
கண்கள் இரண்டும்
காகிதம்!
கம்பீரம் உடையவனுக்கோ
கண்கள் என்பதே
ஆயுதம்!

யாருமில்லாத கோட்டை

இதோ ஒரு கம்பீரவாதியின்
தலைமறைவுச் சம்பவம்!

திருவாரூர் மாவட்டம்!
மண்ணில் நெய் மணக்கும்
மன்னார்குடி பகுதி!

தென்னை இளந்தோப்புகளும்
பனைமர வரிசைகளும்
எங்கோ ஒரு திண்ணையில்
வட்ட வட்ட நிலாக்களாய்
ஆச்சிஒருத்தி அப்பம் சுட்டு
அடுக்கும் மேலைநாகை ஊர்!

அன்று கிழக்கு
கறுப்புக் குளத்தில் சூரியனைக்
கழுவிக் கொண்டிருந்த இரவு!

இலைகள் சருகுகளோடு
வெட்டிக்கதை பேசி
வெடவெடக்கும் சத்தம்!

காற்றுக்குள் கிலி பரப்பின
உள்ளூர் நரிகளின் ஊளை!
கிணற்றடிகளில்
தவளைகளின் நட்டுவாங்கம்!

அந்த ஊரே
ராத்திரி முகாமிற்குள் ஒதுங்கிய
அந்தகாரப் பொழுது!

ஓர் உருவம்
குபுகுபுவென ஓடி வந்தது!
அதன் கண்களில் மட்டும் ஒரு
கற்பூர ஒளி!

குமரிப் பெண்ணைப் பார்த்த
கோபக்கார இளைஞனைப் போல்
அந்த உருவத்தைக் கண்ட நாய்கள்
அமைதியடைந்து நடந்தன.

அந்த உருவம் ஒரு
கறுப்பு சால்வைக்குள் தன்னை
பொதித்து வைத்திருந்தது!

ஒரு சிறுவிளக்கு எரிந்தது
அந்தக் காளி கோயிலில்...

4



உருவம் அந்தக் காளிக்கு
உடல் வணக்கம் போட்டது!

இன்னும் ஓடியது!
தூரத்தே ஒரு ராட்சஸ பல்லக்காய்
ஒரு பாழடைந்த கோட்டை
மேட்டுப் பகுதியில் ஓடும்
நதியைப் போல்
மெல்ல நடந்த அந்த மனிதன்
கோட்டைக்குள் நுழைந்தான்!

தொப்பென்று விழுந்தான்!
தூங்கி விட்டான்!

மறுநாள் பொழுது
சூரியன் சுள்ளென தன்
வெளிச்சத் தண்ணீரை
வீதியெங்கும் விசிறிவிட்டது!

பறவைகளும் எறும்புகளும்
வெளியே புறப்பட்டன!
மனிதர்கள் சோம்பல் முறித்துக்
கொண்டிருந்தார்கள்!


வெளிச்சத்தைக் கண்டதும்
அஃறிணைகள் மலர்கின்றன...
உயர்திணைகள் ஒதுங்குகின்றன...

பாழடைந்த கோட்டைக்குள்
படுத்துறங்கிய அந்த மனிதன்
ஒளிஊசி விழிதைக்க
இமை உதறி கண் திறந்தான்!

அவன் பாதங்களில்
இரவுப் பயணத்தால் கல்முள்
தந்த காயக் கசிவுகள்.

பா.விஜய்





உடையில் ஆங்காங்கே கிழிசல்!
முகத்தில் முழுக்க தாடி!
விழியுள் ஒளி உருண்டை!
எழுந்தான்!
கோட்டை ஒரு சின்ன
ஆயுதச்சாலை போலிருந்தது!
உள்ளே ஏகப்பட்ட உடைசல்கள்!
பெரிய மனிதர்களின்
சின்ன உள்ளங்களைப் போல
உள்ளே தரைவெடித்து
தலை காட்டிய கருவேல
முள் மரங்கள்!
பறப்பன இறைத்த
எச்சங்கள்!
நடப்பன போட்ட
மிச்சங்கள்!
வாழ்வன செய்த
ஒச்சங்கள் என கோட்டை
பாழாய்க் கிடந்தது!

அந்த மனிதன் வெளிவந்தான்
அது ஒரு நிலப்பரப்பும்
மிகுந்த காடுமுடைய இடம்!
பின்புறம் ஒரு சிக்கலான
குழம்பல் குளம்!
விரிசல் விழுந்த மதில்களின்
முதுகில் தொங்கும் விழுதுகள்!
அந்த மனிதனின் விழிகள்
குளத்தோரம் நின்ற
மாமரத்தை ருசித்தது - பிறகு
ஒடிப்பறித்துப் புசித்தது!
உலகம் பெரியது!
மக்கள் சிறியவர்கள்!

இயற்கை பெரியது!
இருப்பவர்கள் சிறியவர்கள்!

வா! காற்றே வா!
வா இலையே! வா
வா! குரங்கே வா!
அந்தச் சால்வை மனிதன்
அங்குமிங்கும் ஆடி ஓடினான்!
கோட்டையின் முகப்பிற்கு வந்து
எட்டிப் பார்த்தான்!
செம்மண் பூத்த செங்காட்டு
வயல்பகுதியின் தோற்றம்!
சில நாட்கள் உருண்டன!
எதுவும் பழகும் வரையே
கசக்கும்!
அருந்த ஏதுமில்லை என்றால்
தாகத்தில் பாகற்காய் சாறும்
இனிக்கும்!

அவன் பழகிக் கொண்டான்!
அந்தக் கோட்டை என்பது
மனித வாசமற்ற பகுதி!
தலைமறைவு வாழ்க்கைக்குப்
பொருத்தமான தொகுதி!
அங்கே உச்சிப் பொழுதில்
ஓய்வுகிறங்க வரும்
ஆடுமேய்ப்பு சிறுவர்களோடு
கல்லாட்டம் விளையாடினான்!
தோன்றும் போதெல்லாம்
ஏதேதோ எழுதினான்
கோட்டையின் சுவர்களில்
விறகுக் கரியால்...
சிந்திக்காதவன் எழுதினால்
அது ஆபத்து
எழுதுபவன் சிந்திக்காதிருந்தால்
அது விபத்து!

காற்றோடு பேசுவான்!
மரத்தோடு பாடுவான்!
நினைத்தபோது தூங்குவான்!
இரவில் அழுவான்!
ஆடு மேய்க்கும் சிறுவரிடம்
அணாபைசாக்கள் தந்து
பண்டம் வாங்கி உண்பான்
பழம் பறித்துத் தின்பான்!
குளத்தில் குளிப்பான்!
மரமேறிக் களிப்பான்!
ஆடு மேய்ப்பாளருக்கு அன்றாடம்
ஆனா ஆவன்னா ஆசிரியனானான்!
தினசரி ஆட்டுப்பால் தருவார்கள்
சிறுவர்கள்!
ஆட்டுப்பால்தான்!

அவன் உயிர் காத்தத
தாய்ப்பால் அப்பொழுது!

ஒரு சிறுவன் கேட்டான்!
"உன் பேரென்ன ஆளு?"
சுயப்பெயர் சொல்ல வந்தவன்
சுதாரித்துச் சொன்னான்
"சுப்ரமணி" என்று!
அந்தப் பாழடைந்த கோட்டைக்கு
அவனே ராஜா!
அவனே பல்லக்குத் தூக்கி
அவனே படைவீரன்!
ஆடுகளும்
ஆடு மேய்க்கும் சிறுவர்களும்
ஆள் அம்பு சேனையாக
அரசாண்டான் அந்த சுப்ரமணி!
"ஏன்யா! இதென்ன
கோட்டைச் சுவர் முழுக்க
கொட்ட கொட்டையா ஏதோ
கிறுக்கி வச்சிருக்கியே!"
கடகடவெனச் சிரித்தான் சுப்ரமணி
கல்கல் உரசுவதாய்...

"டேய்! சரியாக எழுதடா
அ-இது ஈ யடா முட்டாள்!
எங்கே அந்த
மொட்டைத்தலை பேடி!
என் பிரம்புக்கு பயந்து
வரவில்லையோ?"
சுப்ரமணியின் தர்பார்
வெகுஜோராய் நடந்தது
கொடியிழந்த கோட்டையில்...
சில வாரங்கள் உருண்டன...!
ஆடு மேய்க்கும் சிறார்கள்
மாணவர்கள் ஆனார்கள்!
ஊர் சுற்றுவதும்
ஆடு மேய்ப்பதும் போல
ஒரு ஞானக் கல்வி இல்லை
பல்கலைக் கழகங்களிலும்...
மனிதன் இல்லாத பகுதி
அந்த மனிதனுக்கு மிகப்
பிடித்துப் போனது!
விறகு பொறுக்கி
அடுப்பு மூட்டி
சோளம் வாட்டினான்!
சிறார்கள் ஈந்த
உடைந்த பாண்டங்களில்
அரிசி பொங்கினான்!
வெல்லம் கலந்து அதை
பொங்கலாக்கி பகிர்ந்துண்டான்
ஆடு மேய்ப்பவர்களோடு!
துரோகம் செய்த மனிதன்
வெறுமையை விரும்புவான்!
துரோகப்பட்ட மனிதன்
தனிமையை விரும்புவான்!
சுப்ரமணி என்ற
சுயம் கொண்ட அந்த நெருப்பு!
உள்ளே கனன்று
வெளியே சிரித்தது!
மனதுள் குமுறி
புறத்தே மலர்ந்தது!

உதிரம் சில சமயம்
முதுகுத் தண்டில் நெருப்பாய் ஓடும்!
கண்கள் சில சமயம்
புகைக் கூண்டாய் வெப்பம் காட்டும்
இதயம் சில சமயம்
பீறி உடைந்து எழுத்து கக்கும்!
ஆடு மேய்க்கும் சிறுவர்கள்
அரிச்சுவடி பயின்றார்கள்!
எழுத்துக் கூட்ட அறிந்தவர்கள்!
எழுதியது புரிந்தார்கள்!
கோட்டைச் சுவர்களில் - அவன்
கொட்டை கொட்டையாய் எழுதியதை
சத்தமிட்டுப் படித்தார்கள்!
எழுதியதன் கீழே அவன்
பெயர் இருந்தது!
ஒரு சிறுவன் கேட்டான்!
"இது என்ன ஆளே!
உம்பேரு சுப்ரமணிதானே!
அது என்ன இன்னொரு பேர்!"
இறுக்கமாய் அந்த மனிதன்
இப்படிச் சொன்னான்!
"அது என் பெயரின் மறுபாதி"

"அப்ப உன் முழுப்பேரென்ன?"
ஆகாயத்தை அளந்தபடி
அட்டகாசமாய் அதிரச் சொனனான் அவன்!
"என் முழுப் பெயர்
சுப்ரமணிய பாரதி" என்று!


(வருவாம்)



ரசனை மாறிப்போச்சு!



• சீனிவாசன்





• ராகவன்

"சிறு பத்திரிகைகளைப் பொறுத்தவரை, ஒரு விஷயத்தில் கவலையில்லை. எப்போது வேண்டுமானாலும் ஆரம்பிக்கலாம். எப்போது வேண்டுமானாலும் மூடலாம்!"

- ஒரு விழாவில் கவிஞர் மீரா இப்படிச் சொல்லியிருந்தார். இது பொய்யில்லை என்றாலும், சமீப காலமாக சிறு பத்திரிகைகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

புதிது புதிதாக வெளி வரும் இந்தப் பத்திரிகைகளுக்கான தேவை அதிகரித்துள்ளதா? தீவிர இலக்கியத்துக்கான வாசகர்கள் அதிகரித்து விட்டார்களா?

"வாசக தளம் விரிவாகியிருக்கிறது என்பது உண்மைதான். ஆரம்ப காலத்தில் சிறு பத்திரிகைகள் இலக்கியத்துக்காக மாத்திரம் தான் இயங்கிக் கொண்டிருந்தன. ஆனால் இன்று சினிமா, ஓவியம், அரசியல், சமூகப் பிரச்னைகள் என்று அதிக தளங்களைக் கொண்டு இயங்குகின்றன. தற்கால வாசகனுக்குத் தேவை அதிகரித்திருக்கிறது. வணிக பத்திரிகைகள் வேறொரு தளத்தில் இயங்க, அந்த வாசகனின் தேவையை சிறு பத்திரிகைகள் மட்டுமே பூர்த்தி செய்கின்றன. இதில் வெளியாகும் நேர்காணல்கள், மொழி பெயர்ப்புகள், கட்டுரைகள் முக்கியத்துவம் பெறுகின்றன" என்கிறார் எழுத்தாளர் நாஞ்சில் நாடன்.

இதே கருத்தைச் சொல்லும் கலைவிமர்சகர் இந்திரன், சிறு பத்திரிகைகளின் வரவுக்குப் பின்னால், மறைமுகமானச் செயல்திட்டம் ஒன்று இருக்கிறதென குண்டு வீசுகிறார்.

"தனித்தனியாகவும், தங்கள் குழுக்களையும் வளர்த்துக் கொள்ள, இம் மாதிரியான பத்திரிகைகளால் முடியும். ஒவ்வொரு வீட்டுக்கும் ஒரு கோயில் கட்டிக் கொள்வது மாதிரிதான் இதுவும். பொருளாதாரச் சக்தி இல்லாதவர்களுக்கும், இலக்கிய வெளியீட்டுக்கான அதிகாரமாகவும் சிறு பத்திரிகைகள் இருக்கின்றன" என்கிற இந்திரன், விரைவில் 'படுகை' என்ற சிறு பத்திரிகையொன்றைக் கொண்டு வர இருக்கிறார்.

வண்ண நிலவனின் கருத்து வேறுவிதமாக இருக்கிறது.

"எழுபதுகளில் ஏராளமான சிறு பத்திரிகைகள், திடீரென்று வெளி வந்தன. சில ஆண்டுகளிலேயே அவை நின்று போயின. இவ்வாறு தோன்றும் பத்திரிகைகள், ஒரு





• நாஞ்சில் நாடன்



• இந்திரன்



• வண்ண நிலவன்

சில கால கட்டங்களில் நாற்றங்கால் மாதிரியாக இருக்கிறது. இதில் எழுதிய, எழுதும் பல எழுத்தாளர்கள் வணிக இதழ்களில் புகழ் பெற்றிருக்கிறார்கள். வேறொரு விதமாகச் சொன்னால், நடுத்தர வர்க்கத்தின் வாங்கும் சக்தி இப்போது அதிகரித்திருக்கிறது. இது அதிகரிக்கும்போது, கருத்து உற்பத்தியும் பொதுவாகவே அதிகரிக்கும். இதன் காரணமாகக் கூட சிறு பத்திரிகைகளின் எண்ணிக்கை அதிகரித்திருக்கலாம்'' என்கிறார் வண்ணநிலவன்.

''கேளிக்கைக்கு அப்பாற்பட்ட, கனமான விஷயங்களை அறியும் ஆர்வம் தமிழ் வாசகர்களிடையே அதிகரித்திருக்கிறது என்பது உண்மை. பெரும்பாலும் தனி நபர்களின் ஆர்வத்தினால் பிறக்கும் இச் சிற்றிதழ்கள், இருப்பியல் பிரச்னைகள் இலக்கியத்தை விழுங்கி விடும்போது, முடங்கிப் போகின்றன'' என்கிறார் எழுத்தாளரும், கிழக்கு பதிப்பக ஆசிரியருமான பா. ராகவன்.

வாசகர்களும் இதழ்களும் அதிகரித்துள்ள அளவுக்கு விற்பனை அதிகரித்துள்ளதா என்பது சந்தேகம்தான் என்கிறார் அவர்.

ஆனால் நியூ புக்லேண்ட்ஸ் நிர்வாகி சீனிவாசன், ''முன்பைவிட சிறு பத்திரிகைகளின் விற்பனை அதிகரித்திருக்கிறது'' என்கிறார்.

''சிறு பத்திரிகைகளின் உயிர், அந்தந்த மாத, காலாண்டிதழ்களோடு முடிந்து விடுவதில்லை. பழைய இதழ்களையும் சேர்த்து வாங்கும் வாசகர்கள் அதிகரித்திருக்கிறார்கள். ஆன்மிக, வரலாறு புத்தகங்களைத் தேடிச் செல்லும் வாசகர்கள்கூட, இந்தப் பக்கம் திரும்பியிருப்பதை நித்தமும் பார்க்கிறேன். வாசக ரசனை மாறியிருப்பது ஆரோக்கியமானதுதானே?'' என்கிறார் சீனிவாசன்.

- ஏக்நாத்

படங்கள் : ஸ்ரீஹரி

புக் ஷெல்ப்



முகங்கள் - ஆர்.வைதேகி

பெண்ணும் பூவும் ஒன்றைச் சார்ந்திருப்பதே அழகு என்ற நூற்றாண்டு மூளைச்சலவையை உடைத்து, வீட்டிலோர் பொந்தில் வளர்வதை விரைப் பெண்கள் விரைவில் ஒழிப்பராம்' என்ற பாரதியின் கனவை மெய்ப்பித்த பெண் சாதனையாளர் வரிசை. இன்னும் கூட்டில் அடைபட்டுக் கிடக்கும் பல குயில்களின் குரல்களை ஒலிக்க வைக்கும் வேகம் தரும் வாழ்க்கைக் குறிப்புகள்.

போதி, ஜி2, வி. ஜாவி அபார்ட்மெண்ட்ஸ், 38, காவேரி தெரு, சாலிகிராமம், சென்னை - 93. விலை ரூ.60/-

சமையலறைக் கலயங்கள் - சுப்ரபாரதி மணியன்

ஆயத்த ஆடைத் தொழில், சாயம் தோய்ந்த பாசம், வெட்டி அளந்த நேசம், தையல் போடாத உறவு, விற்பனையாகும் மனிதம் என்று திருப்பூர்வாசிகளின் வாழ்வுகளைத் தளமாகக் கொண்ட நாவல். ஆடைத் தொழிலில் இருப்போர் எல்லாம், தம் பிரதிகளை இதில் காணலாம்.

காவ்யா 14, முதல் குறுக்குத் தெரு, டிரஸ்ட்புரம், கோடம்பாக்கம், சென்னை - 24. விலை ரூ.45/-

அருள் மலர்கள் - கௌதம நீலாம்பரன்

வந்தனையோ, நிந்தனையோ, புராணங்களும் இதிகாசங்களும் பொய்யோ, மெய்யோ, மூட நம்பிக்கையோ, கற்பனையோ என்ற வாதங்களும் சர்ச்சைகளும் தேவையும் அர்த்தமும் அற்றவை. அவை மனித வாழ்வை நெறிப்படுத்தவே படைக்கப் பெற்றவை என்பதை சாதாரணனுக்கும் எளிதாகப் புரிய, விளக்கம் தரும் நூல்.

கங்கை புத்தக நிலையம், 23, தீனதயாளு தெரு, தி.நகர், சென்னை-17. விலை ரூ.35/-

தேடித்தேடி - தகழி சிவசங்கரன் பிள்ளை - தமிழில் சுரா

வாழ்க்கை வேறு, இலக்கியம் வேறு என்றில்லாமல், இரண்டையும் ஒன்றாய், வாழ்க்கையே எழுத்தாக வாழ்ந்த படைப்பாளியின் அரை நூற்றாண்டுக்கு முந்தைய படைப்பு. மொழியின் சாரமும், சொல்லின் வேகமும் குறையாமல் செய்த மொழி பெயர்ப்பு.


சாருபிரபா பப்ளிகேஷன்ஸ், 105, ஜானி ஜான்கான் சாலை, ராயப்பேட்டை, சென்னை - 14. விலை ரூ.30/-

வாழ்க்கையின் கவிதைகள் - கவிஞர் மதுபாலிகா

எந்த நிமிடமும் முடிந்து போகக் கூடியது வாழ்வு என்று உணர்வோடு, இருக்கும் காலத்தில் எழும் உணர்வுக் குமுறல்களை, கோபதாபங்களை, ஆனந்தக் களிப்புகளை, சுய விமர்சனங்களாகவும், சமூக விமர்சனங்களாகவும் வரைந்த உரை நடைக் கவிதைகளின் சிதறல்.

சுந்தரா பதிப்பகம், 7, ஜட்ஜ் பரமசிவம் தெரு, பெரம்பூர், சென்னை. விலை ரூ.30

- விஷ்வக்



ஸ்ரீ சாரதா சக்தி பீடம்



72, காமராஜ் சாலை, பழைய பெருங்களத்தூர்,
(வழி) தாம்பரம், சென்னை – 63. போன் : 22760612.
City Office No.7,முதல் மாடி, வேலு தெரு, மேற்கு மாம்பலம்,
(அயோத்யா மண்டபம் அருகில்) சென்னை – 33.போன் 23714942.
எமது புதிய கிளை நிறுவனம் : எண். 7, 30வது தெரு, தில்லைகங்கா நகர்,
நங்கநல்லூர், சென்னை – 600 061. போன் : 22333214

ஏழை மாணவர்களுக்கு உதவுங்கள்

பேரன்புடையீர், வணக்கம்!

நம் சக்தி பீடத்தின் சார்பில் கடந்த 16 ஆண்டுகளாக நடைபெற்று வரும் "ஸ்ரீ ராமகிருஷ்ண சேவா குருகுலத்தில்" தாய், தந்தையற்ற, திக்கற்ற மற்றும் வறுமை கோட்டின் கீழ் வாழும் 200 மாணவ மாணவிகளும் தங்கி படித்து வருகின்றனர்.

நாள்தோறும் இறைவழிபாடு, கூட்டு பிரார்த்தனை, பகவத்கீதை பாராயணம் ஆகியவைகளுடன், நல்ல கல்வி, காலை மாலை உடற்பயிற்சி ஆகியவைகள் அளிப்பதுடன், உணவு, உடை, தங்குமிடம் ஆகியவைகளும் இலவசமாக வழங்கப்பட்டு நல்ல முறையில் வளர்ந்து வருகிறார்கள்.

மேலும் பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர் ஆகியோர்களின் உயர்ந்த லட்சியங்கள் போதிக்கப்படுவதுடன், சமுதாய சேவை பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

இக்குருகுலத்தின் பராமரிப்பு செலவு முழுவதும் நன்கொடையாளர்கள் அளிக்கும் உதவிகள் மூலம் மட்டுமே நடைபெற்று வருகிறது. ஆகவே தாங்கள் இப்புனிதப் பணிக்கு தங்களால் இயன்ற உதவியைச் செய்யும்படி பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

• காலை சிற்றுண்டி (200 பேருக்கு)	ரூ.	1,000/-
• மதிய உணவு	ரூ.	2,000/-
• இரவு சிற்றுண்டி	ரூ.	1,000/-
• இனிப்பு மற்றும் பால் வழங்குதல்	ரூ.	1,000/-
• ஒரு மாணவனுக்கு ஓராண்டிற்கு கல்வி உதவித்தொகை	ரூ.	1,000/-
• ஒரு மாணவனுக்கு பராமரிப்பு செலவு ஓராண்டிற்கு (உணவு, உடை, கல்வி)	ரூ.	12,000/-
• குருகுலத்தின் ஒரு மாதத்திற்கான பராமரிப்பு செலவு	ரூ.	2,00,000/-

மேலும் தங்களின் பிறந்த நாள், திருமண நாள், குழந்தைகளின் பிறந்த நாள், தொழில்/வியாபாரம் தொடங்கிய நாள், மற்றும் இதர பண்டிகை நாட்களான தீபாவளி, பொங்கல், கிறிஸ்துமஸ், ரம்ஜான் போன்றவைகளில் மாணவர்களுக்கு சிறப்பு விருந்து ஒன்றை அளித்து அவர்களுடன் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்ளலாம்.

தாங்கள் அளிக்கும் தொகை எவ்வளவு சிறியதாக இருந்தாலும் அன்புடன் ஏற்றுக்கொள்கிறோம். தங்கள் நன்கொடைகளை ஸ்ரீ சாரதா சக்தி பீடம் என்ற பெயருக்கு Cheque / DD / MO மூலம் அனுப்பி வைக்கும்படி பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

இறைவன் தொண்டில்
சுவாமி ஸ்ரீ ஸர்வாத்மானந்தர்

சுவாமி ஸ்ரீ அம்பிகானந்தா நல்லாசியுடன் A.ராஜபக்கிரிசாமி MSc., MEd.,

நன்கொடைகளுக்கு 80G பிரிவின்படி வருமானவரி விலக்கு உண்டு.

மழையில் நனையும் மேகம்!



தமிழகத்தின் பார்பி பொம்மை மோனிகா! பேசுவதெல்லாம் வானளவு பெரும் பேச்சு! இவர் பேச்சைக் கேட்டுத் தான் சிலர் பயணத் திட்டத்தை அமைக்கிறார்கள். "நாளை பார்க்கலாமா?" என்றால், "அடுத்த இருபத்தி நான்கு மணி நேரத்துக்கு மிதமான குளிர்தான்; பார்க்கலாமே" என்றார்.

நல்ல வெயில் அடித்துக் கொண்டிருந்தபோது சந்தித்தோம். மேகமூட்டமும், கவலை மூட்டமுமின்றிப் பேசினார். இது மோனிகாவின் இன்றைய பருவநிலை அறிக்கை.

"இவ்ளோ குட்டிப் பொண்ணா இருக்கீங்களே...?"

"இதே தாம்பா. நான் நியூஸ் ரீடரா ஆகணும்னு தான் சன் டீவிக்கு வந்தேன். 'ரொம்பச் சின்னப் பொண்ணா இருக்கியே. கொஞ்ச நாள் ஆகட்டும்'னு வானிலை வாசிக்கச் சொன்னாங்க. என் வானிலையே மாறிப் போச்சு!"

"நீங்க சில நேரம் மழை வரும்னா, வெயில் வருது. வெயிலடிக்கும்னு சொன்னா, மழை பெய்யுது... இப்படி ஆச்சேன்னு வருத்தப்பட்டிருக்கீங்களா?"

'வானிலை அதிகாரிகள் சொல்றதை எழுதிக் கொடுக்கறாங்க. நான் வாசிக்கறேன். மழையோ வெயிலுடன் கூடிய மழையோ, பெய்ய வாய்ப்பில்லைன்னு சொல்லிட்டு, ஒருநாள் நானே மழையில நனைஞ்ச கதை (மேகம் மழையில் நனையுமா?) யாருக்குத் தெரியும்?''

''நீங்க சேலை கட்ட மாட்டீங்களாமே...?''

''அப்படியெல்லாம் இல்லையே... நான் சேலை கட்டினா, ஸ்கூல்ல ஃபேன்ஸி ட்ரெஸ் போட்டிக்குப் போற குழந்தை மாதிரி இருக்குன்னு எல்லாரும் கிண்டல் பண்றாங்க! அதான் சேலையைக் கொஞ்ச நாள் ஓரங்கட்டிட்டேன்!''

''படிக்கும்போது உங்க தோழிகள்லாம் 'வாலி'ன்னு உங்களைக் கூப்பிடுவாங்களாமே! என்ன அர்த்தம்?''

''இதுகூட தெரிஞ்சுப் போச்சா... ம்ஹூம், அதை மட்டும் சொல்ல மாட்டேன்!''




★ சினிமா சம்பந்தப்பட்ட விழா, பூஜை போன்ற நிகழ்ச்சிகளை 'கோலிவுட் டைரி' என்ற பெயரில் தந்து கொண்டிருந்த ஜெயா டீ.வி. திடீரென்று நிறுத்திவிட்டது. இப்போது மீண்டும் அதற்கு உயிர் கொடுத்திருக்கிறார்கள். விஜய் டீ.வியிலும் 'சினிமா காரம் காபி'யை வித்தியாசமான முறையில் மீண்டும் ஆரம்பிக்கப் போகிறார்களாம்.

★ மின் பிம்பங்கள் 'நிலவைப் பிடிப்போம்' என்ற பெயரிலும், ராடன் 'சிவமயம்' என்ற பெயரிலும், புதிய தொடர்களைத் தயாரித்துக் கொண்டிருக்கின்றன.

'**வொ**ய்ஃப்' தொடரில் நடிக்கும் 'கௌ' நடிகையை ஆறு மணிக்கு மேல் நடிக்கச் சொன்னாராம் இயக்குனர். ''நான் சொன்னா சொன்னதுதான். அப்படியெல்லாம் நடிக்க மாட்டேன்'' என்று சொல்லிவிட்டு வேகமாக வெளியேறிவிட்டாராம் நடிகை! மொத்த யூனிட்டும் ஆச்சர்யத்தில்!


—மொக்கராசு

கந்தர்வனின் கடிதங்களைத் தொகுக்கும் முயற்சியில் இருக்கிறார் கவிஞர் முருகேஷ். அவரது கடிதங்களை வைத்திருப்பவர்கள் தொடர்பு கொள்ளலாமாம்.



* கந்தர்வன்

பிட்டு படிங்க!



* சுந்தர ராமசாமி



* பிரபஞ்சன்



* பா. செயப்பிரகாசம்

- 'காதலோடு கூடிய போர்க்காலம்' என்ற தலைப்பில் நாவல் எழுதிவருகிறார் தமிழவன்.
- 'Philm' என்ற விளம்பர நிறுவனத்தை ஆரம்பித்திருக்கிறார் கவிஞர் கனிமொழி.
- தற்போது அமெரிக்காவிலிருக்கிறார் சுந்தர ராமசாமி.
- அமெரிக்கத் தமிழ்ச் சங்கக் கூட்டமைப்பின் அழைப்பின் பேரில், பிரபஞ்சன் அமெரிக்காவுக்குச் செல்ல இருக்கிறார்.
- நகுலனின் மொத்த நாவல்களுமடங்கிய தொகுப்பு, விரைவில் வர இருக்கிறது.
- 'ஈழக் கனவுகள்' என்ற கட்டுரைத் தொகுப்பைக் கொண்டு வர இருக்கிறார் பா. செயப் பிரகாசம்.



* கனிமொழி

ஹோம தரிசனம் ! ஆத்ம நிம்மதி !!

ஒவ்வொரு மாதமும் பௌர்ணமி நாளில் "ஆன்மீகம்" தெய்வீக மாதஇதழும்

ஸ்வாமி கண்ணன் பட்டாச்சார்யா அவர்களும் இணைந்து நடத்தும்,

அன்பர்கள் இஷ்டப்படும் ஹோம பூஜையில், நேரிலேயே கலந்து கொள்ளும் வாய்ப்பு!

நேயர்களே, வணக்கம்! எடுத்த முயற்சிகள் வெற்றியடையவும், சகோதரர்களின்றி சந்தோஷமாக வாழவும், செய்தொழிலில் லாபம் பெறவும், மகப்பேறு பெற்று மகிழவும், திருமணத்தடைகள் நீங்கி, குதூகலம் பெறவும், கடன் தொல்லையிலிருந்து விடுபடவும், பிள்ளைகள் கல்வியில் முதல் நிலை பெறவும், தீராத நோய்களிலிருந்து நிவாரணம் பெறவும், நவகிரஹ தோஷங்களிலிருந்து விலகி நலம் பெறவும், பிரிந்த குடும்பத்தினரும், தம்பதியினரும் ஒன்று சேரவும், உத்தியோகம் மற்றும் அயல்நாடு செல்லவும் நினைக்கும் ஒவ்வொரு வருக்காகவும், மாதா மாதம் பௌர்ணமி அன்று திருவல்லிக்கேணியில் சகல நல்வாய்ப்புகளும் கிடைக்க வேண்டி காலை 06.00 மணி முதல் 10.00 மணி வரை "ஆன்மீகம்" தெய்வீக மாத இதழ் சார்பாக கீழ் கண்ட விவரப்படி சிறப்பான ஹோமங்களை நடத்தவிருக்கிறோம்.

01.07.04. வியாழன் - தடைகள் அனைத்தும் விலக - ஸ்ரீ ராஜ கணபதி மஹாமந்த்ர ஹோமம்

[illegible]

ஆனி	01.07.04	வியாழன்	தடைகள் அனைத்தும் விலக	ஸ்ரீ ராஜ கணபதி மஹாமந்த்ர ஹோமம்
ஆடி	29.08.04	ஞாயிறு	நினைத்தகாரியங்கள் சித்தியாக	ஸ்ரீ துர்கா ஸூக்த - பஞ்ச ஸூக்த ஹோமம்
ஆவணி	28.09.04	செவ்வாய்	தீராத வியாதிகள் விலக	ஸ்ரீ தன்வந்திரி ஹோமம்
புரட்டாசி	27.10.04	புதன்	சத்ரு பயம் விலக	ஸ்ரீ நரஸிம்ம ஸுதர்சன ஹோமம்
ஐப்பசி	26.11.04	வெள்ளி	செல்வம் பெருக	ஸ்ரீ லக்ஷ்மி குபேர ஹோமம்
கார்த்திகை	26.12.04	ஞாயிறு	நவகிரஹ ப்ரீதி உண்டாக	ஸ்ரீ நவகிரஹ ஜெயாதி ஹோமம்
மார்கழி	07.01.05	புதன்	சகல காரியம் ஜெயப்ரதம் உண்டாக	ஸ்ரீ மஹாபீம பூஜையும், வாயு ஸூக்த ஹோமமும்
தை	06.02.05	வெள்ளி	திருமண பாக்கியம் கை கூடி வர	ஸ்ரீ ஸ்வயம்வரகலா பார்வதி ஹோமம்
மாசி	06.03.05	சனி	சர்வதோஷ நிவர்த்தி அடைய	ஸ்ரீ வாஸ்து நவக்கிரக ஹோமம்
பங்குனி	05.04.05	திங்கள்	வழக்கு விவாஜங்களில் வெற்றிகிட்ட	ஸ்ரீ ஸூக்த ஜெயாதி ஹோமம்
சித்திரை	04.05.05	செவ்வாய்	செய்வினை விலக	ஸ்ரீ ஸுதர்ஸன ஹோமம்
வைகாசி	02.06.05	புதன்	கல்வி செல்வம் உண்டாக	ஸ்ரீ நீல சரஸ்வதி ஹோமம்

ஜோதிட சாஸ்த்திரசிம்மம், வாஸ்து சாஸ்த்திர விற்பன்னர், யோக ஆஞ்சநேய சக்தி பீடாதிபதி பூஜ்யஸ்ரீ ஸ்வாமி கண்ணன் பட்டாச்சார்யா அவர்களின் தலைமையில், வேத சாஸ்திரங்களில் பாண்டித்யம் பெற்ற வித்வான்களைக்கொண்டு, ஸ்ரீ யோக ஆஞ்சநேய சக்தி பீடம், 177/84, வெங்கட்ரங்கம் பிள்ளைத்தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-5 ல் சிறப்பு ஹோமங்கள் மேற்கண்ட விவரப்படி ஒவ்வொரு மாதங்களிலும் நடைபெற இருக்கின்றன.

மேலே குறிப்பிட்டுள்ள ஒவ்வொரு மாதங்களில் நடைபெறும் ஒரு ஹோமத்தில் பங்குபெற கட்டணம் ரூ.500/- எல்லா ஹோமங்களிலும் பங்கு பெறவும், முன்பதிவு செய்யவும் கட்டணம் ரூ.4500, செலுத்தி, நேரில் கலந்து கொள்ளலாம். நேரில் கலந்துகொள்ள இயலாதவர்கள் பெயர், நட்சத்திரம், இராசி, கோத்ரம் முதலியவைகளைக் குறிப்பிட்டு, என்ன பரிகாரத்திற்காக ஹோமம் செய்ய வேண்டும் என்பதையும், தங்களது விலாசத்தையும் எழுதி அனுப்பவும். பிரசாதங்கள் தபால்மூலம் அனுப்பப்படும்.

வைகானச தர்ம சாஸ்திரம், ஜோதிடம், வாஸ்து என ஒரு கோடியே 25 லட்சம் கிரந்தங்களை எழுதியவரும் ப்ருகு, அத்ரி, காஸ்யபர், மரீசீ ஆகிய மகரிஷிகளுக்கும் குருவானவருமான ஸ்ரீ விகநஸ மஹரிஷியின் அபூர்வ புகைப்படத்துடன் ஹோமத்தில் வைத்து பூஜிக்கப்பட்ட அட்சதை, மஞ்சள் ரட்சை, குங்குமம், ஹோம பஸ்பம், 3x3 கனத்த செம்புத் தகட்டினாலான மந்திரத்துடன் வெள்ளியால் செய்யப்பட்ட லக்ஷ்மி டாலரும் மஹாஹோமத்தில் பங்குபெறுபவர்களுக்கு பிரசாதமாக வழங்கப்படும்.

ஸ்ரீ விகநஸ மஹரிஷியின் பூஜிக்கப்பட்ட படம், இருக்கும் வீடுகளிலோ, அலுவலகங்களிலோ எந்த விதமான தோஷங்களும் அண்டாது என்பது உறுதி.




எடுத்த முயற்சிகளில் வெற்றியினை உண்டாக்கும் ஹோமத்திற்காக 'Homadharisanam' எனும் பெயரில் ரூ. 500/ அல்லது ரூ. 4500, - Cheque/D.D./M.O. மூலம் அனுப்ப வேண்டிய முகவரி

ஹோம தரிசனம்

68, நடுத்தெரு. (ஸ்ரீ காபாலீசுவரர் கோயில் அருகில்) மயிலாப்பூர், சென்னை - 4.

Tel : 52067068, Fax : 044 - 5206 6525. E-mail:sivasiva@vsnl.net



ஹோமத்தின் மூலம் தெய்வத்தை ப்ரீதி செய்து வேண்டியதை நிறைவேற்றிக் கொள்வதும் ஒரு சிறந்த வழி!

ஹீரோவுக்கு


பிள்ளையார் பட்டி ஹீரோ கற்பக விநாயகர் கோயிலில், ஜூலை எட்டாம் தேதி குடமுழுக்கு விழா!

நகரத்தார் இன மக்களின் நேரடி நிர்வாகத்தில் இருக்கும் இக்கோயிலின் குடமுழுக்கு விழாவை, நேரடியாக ஒளிபரப்ப பல் வேறு சேனல்கள் போட்டி போட்டுக் கொண்டிருக்கின்றன. கல்கி வாசகர்களுக்காக நாமும் பிள்ளையார்பட்டிக்குச் சென்றோம்.

"1992ஆம் ஆண்டு நடந்த குடமுழுக்கு விழாவிற்குப் பிறகு 'சாண்ட் பிளாஸ்ட்' என்ற முறையில் கோவில் சுத்தம் செய்யப்பட்டு கோவிலின் உட்புறம் தெளிவாகத் தெரியும் வகையில் நவீன மின் விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன. கோவிலுக்கு வரும் கூட்டத்தைக் கண்காணிக்க அதி நவீன வீடியோ கேமராக்களும் பொருத்தப்பட்டுள்ளன. "கோவிலின் முன் புதிய மண்டபம், காலணி பாதுகாப்பிற்கு புதிய கட்டடம், தார்ச்சாலைகள், திருக்குளத்தை தூய்மை செய்து வேலியும், மின்விளக்கு அமைத்தல் போன்ற புதிய பணிகளும் செய்துள்ளோம்" என்கிறார் அறங்காவலர்களில் ஒருவரான ஆர்.எம்.சக்தி செட்டியார்.

"குடமுழுக்கு விழாவையொட்டி ஜூலை ஆறாம் தேதி முதல் எட்டாம் தேதி வரை, இருபத்தைந்தாயிரம் பேருக்கு இலவச உணவு வசதியும், விழாவிற்கு வரும் வாகனங்களை நிறுத்த மூவாயிரம் கார்கள் நிற்குமளவிற்கு இடமும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இரண்டு லட்சத்திற்கும் அதிகமான பக்தர்கள் வரலாம் என்று எதிர்பார்க்கிறோம்" என்கிறார் மற்றொரு அறங்காவலரான பி.எல்.பழனியப்ப செட்டியார்.

"எட்டுக்கால யாக சாலை பூஜைகள், ஜூலை நான்காம் தேதி மாலை தொடங்கி, எட்டாம் தேதி காலை நிறைவு பெறுகின்றன. தொண்ணூறு யாக குண்டங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இருநூறு சிவாச்சாரியார்கள் யாக சாலை பூஜைகளில் பங்கேற்கிறார்கள்.



• ஆர்.எம்.சக்தி செட்டியார்



• பழனியப்ப செட்டியார்





குடமுழுக்கு!



• புதிய முகப்பு மண்டபம்

இதில் லண்டன், கனடா, இலங்கை, சிங்கப்பூர், மலேசியா நாடுகளைச் சேர்ந்த முப்பது சிவாச்சாரியார்களும் இடம் பெறுகிறார்கள்'' என்கின்றனர் தலைமைக் குருக்களான டாக்டர் பிச்சை குருக்களும், சோமசுந்தர குருக்களும்.

உலகின் பல்வேறு நாடுகளிலிருந்து, சுமார் மூவாயிரம் பேர் பார்வையாளர்களாகக் கலந்து கொள்ள இருக்கிறார்களாம்.

யாகசாலை கட்டுமானப் பணிகளில் வேத பாடசாலை மாணவர்கள் கலந்து கொண்டு மண் சுமப்பதும் தனி அழகு! ''கோயில் பணிக்கென்றால் எந்த வேலையையும் செய்யலாம். கற்பக விநாயகருக்காக வேலை செய்வது நாங்கள் பெற்ற வரம்'' என்கின்றனர் வேத பாடசாலை மாணவர்கள்!

1976ஆம் ஆண்டு குடமுழுக்கு விழாவின் அழைப்பிதழை எழுதிய கம்பன் அடிப்பொடி சா.கணேசனின் வரைவை, அப்படியே இன்று வரை அழைப்பிதழில் கடைப்பிடிக்கப்பட்டிருப்பதும் வித்தியாசமான சிறப்பு!



• வேதபாடசாலை மாணவர்கள்

- குன்றக்குடி சிங்கார வடிவேல்

• பிச்சை சிவாச்சார்யார்



• சோம்சுந்தர குருக்கள்







நல்ல டேஸ்ட்!



✉ 'கட்சியையும் ஆட்சியையும் குழப்பாதீர்கள்!' தலையங்கம் படித்தேன். சோனியா காந்தியின் அதிகார எல்லை குறித்து சட்ட அமைச்சர் பரத்வாஜ், காங்கிரஸ் செய்தித் தொடர்பாளர் ஆனந்த் ஷர்மா ஆகியோரின் பேச்சுக்கள் தேவையற்றவை. இது விஷயத்தில் காங்கிரஸ்காரர்கள் அமைதி காப்பது நல்லது. அது, பா.ஜ.கவினரையும், எதிரி நாடுகளையும் வாயை அடக்க உதவும். சோனியா, மன்மோகன்சிங்கிடம் முழுமையாக ஆட்சிப் பொறுப்பை ஒப்படைத்து விட்டு, நாடு முழுவதும் காங்கிரஸில் உள்ள உட்கட்சி சண்டைகளைத் தீர்த்து வைக்கப் புறப்படுவது காங்கிரஸின் எதிர்காலத்துக்கு நன்மை பயக்கும்.

மொரட்டுப்பாளையம்,
இரா.வி. சௌந்தர்யா விசாலினி

✉ 'மாயப்பெண்; மயக்கும் வேலை; வலை விரிக்கும் போலீஸ்..' அப்பாவிகள் விழித்துக் கொள்வதற்கான எச்சரிக்கை மணியாகவே அமைந்திருந்தது.

திருவாரூர், வாணி மகாலட்சுமி

✉ சுதாமூர்த்தி எழுதியிருப்பது போல் பெரும்பாலான பெற்றோர்கள், தங்கள் பிள்ளைகளை, சிந்தனை சுதந்திரம், பேச்சு சுதந்திரம், செயல் சுதந்திரமின்றி, தங்கள் கட்டுப்பாட்டில் வைத்தே வளர்ப்பதைக் காண்கிறோம். முக்கியமாக படிப்பு விஷயத்தில், பெற்றோர்கள் பிடிவாதமாக, தாங்கள் சொல்வதைத்தான் பிள்ளைகள் படிக்க வேண்டும் என்று சொல்லி, அவர்கள் விருப்பத்துக்கு எதிராக, இன்ஜினியரிங், மருத்துவம் என்று பணத்தைக் கொட்டி, சேர்த்து, பிள்ளைகளின் எதிர்காலத்தையே இருளடையச் செய்து விடுகிறார்கள். இம் மாதிரியான பிள்ளைகளை போன்சாய் மரத்திற்கு ஒப்பிட்டு எழுதியிருப்பது மிகவும் பொருத்தமே!

கோயம்புத்தூர், என். ரங்கநாயகி

✉ கம்யூனிஸ்ட் - அ.தி.மு.க - ம.தி.மு.க தி.மு.க - பிரமுகர்கள் பதில்களும், யார் யாரிடம் எந்தெந்தக் கேள்வியைப் பரிமாற வேண்டும் என்று நிர்ணயம் செய்த விதமும் நல்ல டேஸ்ட்!

திசையன்விளை, ஆர்.ஜி. ராமன்

✉ 'சர்க்கரையில் அக்கறை' மினி கல்கி போற்றிப் பாதுகாக்கப்பட வேண்டிய அரிய பொக்கிஷம். சர்க்கரை நோய் பற்றி இவ்வளவு விரிவாக இதுவரை படித்ததில்லை.

சிதம்பரம் - 2, ஸ்ரீவித்யா காளிதாஸ்

✉ பாசத்தின் எல்லையை எதிரொலித்த 'வெச்ச செடி முள்ளானா..' சிறுகதையின் நிகழ்வுகளும், முடிவும் உள்ளத்தை நெருடியது.

போடி, எஸ்.எம். பாலசுப்ரமணியன்

✉ ஆங்கில மருத்துவமும், மினி கல்கியில் கூறப் பட்ட ஆலோசனைகளையும் கடைப்பிடித்து, உணவு முறையில் கட்டுப்பாட்டுடன் இருந்தால், எந்த உபத்திரவமுமின்றி சர்க்கரை நோயாளிகள் நீண்ட நாட்கள் வாழலாம் என்ற நம்பிக்கை பிறந்திருக்கிறது.

சென்னை - 99, ஏ. மோகனசுவாமி


வட்டமேஜை

நெற்றி நிறையப் பட்டை, நடுவில் குங்குமத் தீற்று. கண்களுக்குப் பெரிய சைஸ் கறுப்புக் கண்ணாடி. இடுப்புக்கு காவி வேஷ்டி என்றால், உடம்புக்கு ராமராஜன் ஸ்டைல் சட்டை! பொன்வண்ணன் தோற்றத்தைப் பார்த்த மாத்திரத்தில், ஏதோ ஏடாகூடத்தில் இறங்கி இருக்கிறார் என்பது தெளிவாகவே தெரிந்தது. என்ன சேதியாம்?

'''அன்னைவயல்', 'ஜமீலா' ஆகிய இரு கலைப் படங்களின் இயக்குனர் என்ற வகையில், என்னை ஒரு சீரியஸ் சினிமாக்காரனாகத்தான் தெரியும். அதுவும் இது போன்ற படங்கள் மேல்தட்டு ரசிகர்களை மட்டுமே போய்ச் சேர்ந்தது. ஆனால் அண்ணாமலை தொடரில், 'கோமதி நாயகம்' பாத்திரத்தில் நல்ல காமெடியனாக, கடைக்கோடி ரசிகர்கள் வரை அறியப்பட்டிருக்கிறேன். இது பொன்வண்ணன் என்கிற நடிகனுக்குக் கிடைத்த வெற்றி. அவனை முழு நீள நகைச்சுவை நடிகனாக, சின்னத் திரையிலிருந்து பெரிய திரைக்குப் புலம் பெயர்க்கும் முயற்சியாக, இப்போது 'கோமதி நாயகம்' படத்தை எடுத்து முடித்திருக்கிறேன். பாடல் காட்சிகள் மட்டுமே பாக்கி'' என்றவர், ''தற்போதைய டிரெண்

'கமலைக்

• பொன்னம்பலம்





• இளவரசு

• ஹரிப்ரியா, ரம்யா

டுக்குக் காமெடிப் படங்கள் மூலம் நான்ஸ்டாப்பாக சிரிக்க வைப்பதில், கமல் கெட்டிக்காரராக இருக்கிறார். அவரது அவ்வை சண்முகி, பஞ்சதந்திரம், பம்மல் கே. சம்பந்தம் படங்களின் வெற்றி ஃபார்முலாவே இதற்குச் சாட்சி. எனவே, கமலின் காமெடி ஃபார்முலாவை அப்படியே காப்பியடித்து, கோமதிநாயகத்தை உருவாக்கி இருக்கிறேன்'' என்று தைரியமாக ஒப்புக் கொள்கிறார்.

படத்தில் ஹீரோ என்று யாரும் கிடையாதாம். ஆனால் ஒவ்வொரு பாத்திரத்திற்கும் சமமான முக்கியத்துவம் உண்டு என்கிறார்கள். குறிப்பாக, வில்லன் பொன்னம்பலத்தை, காமெடிப் பாத்திரத்தில் படம் முழுவதும் வலம் வர வைத்திருக்கிறேன் என்கிறார் இயக்குனர். திருமணமே வேண்டாம் என்று பிரம்மச்சாரிய விரதமிருக்கும் ஒரு ஆஞ்சநேய பக்தனுக்குத் திடீர் கல்யாணம் செய்து வைத்தால் என்ன ஆகும், என்பதுதான் கோமதிநாயகத்தின் கதை!

• பொன்வண்ணன்



காப்பியடிக்கிறேன்...!'

''எப்படியோ மீண்டும் ஜெயித்து, 'ஜமீலா' மாதிரி ஒரு சீரியஸ் படம் எடுப்பீர்கள் தானே?'' என்று கேட்டால், ''அய்யோ! ஆளைவிடுங்க, நான் பெட்டிக்கடை வைச்சாவது பிழைச்சுக்குறேன்'' என்று கையெடுத்துக் கும்பிடுகிறார். அனுபவம் தந்த பாடம்!

- ஜெய்

படங்கள்: 'கோமதி நாயகம்' படத்திலிருந்து

• சரண்யா - வினிதா



பிரதமர் அலுவலகம்

டெல்லியில் சௌத் பிளாக்கில் இருக்கிறது பிரதமரின் அலுவலகம். வாஜ்பாய் பிரதமராக இருந்தபோது கோலோச்சியவர்கள் காலி செய்ய, புது டீம் வந்துவிட்டது இப்போது. இந்த டீமில் யார் யார் இருக்கிறார்கள்? ஒரு குளோஸ் அப் லுக்!

டி.கே. அய்யப்பன்குட்டி நாயர் :

அறுபத்தி நான்கு வயதாகும் இவர்தான் பிரதமரின் முதன்மைச் செயலாளர். பி.எம்.ஓ. அதிகாரிகளைப் பொறுத்தவரை இவர்தான் பாஸ். பஞ்சாபில் தலைமைச் செயலாளராகப் பணியாற்றியவர். குஜ்ரால் பிரதமராக இருந்தபோது, பி.எம்.ஓ.வில் பணி புரிந்த அனுபவம் உண்டு. முப்பதாண்டுகளாக, மன்மோகன் சிங்கிற்குப் பரிச்சய மானவர்.

ஜே.என். தீட்சித் :

எழுபது வயதாகும் தீட்சித்துக்கு, தேசிய பாதுகாப்பு ஆலோசகர் என்கிற சென்சிடிவ் வான பொறுப்பு. 'ரா' என்கிற ரிசர்ச் அண்டு அனாலிசிஸ் விங், ஐ.பி. என்கிற இன்டலிஜென்ஸ் பீரோ, ராணுவம் குறித்த டிஃபென்ஸ் இன்டலிஜென்ஸ் ஏஜென்ஸி மூன்றின் பணிகளையும் மேற்பார்வையிடுவது இவர் பொறுப்பு. இந்தியாவில் மட்டுமின்றி அயல்நாடுகளிலும், விவரமறிந்த பலர் இவரது நட்பு வட்டத்தில் இருப்பது, பிளஸ் பாயிண்ட் என்கிறார்கள்.

பிருதிவிராஜ் சவான் :

பிரதமரின் அலுவலகத்தில் இருக்கும் மத்திய இணை அமைச்சர். வயது ஐம்பத்தி ஏழு. சுத்த மானவர் என்ற இமேஜ் கொண்டவர். கடந்த பொதுத் தேர்தலில் காங்கிரஸ்



-ஒரு குளோசப் லுக்!



• எம்.கே. நாராயணன்

• பிருதிவிராஜ்





• சஞ்சய் பருவா

கட்சி சார்பில், குஜராத்தில் பிரசாரம் மற்றும் தேர்தல் பணிகளுக்கு வியூகம் வகுத்தவர். தற்போது ராஜ்ய சபா எம்.பி. இந்திய அரசியலில் திரைமறைவில் நடக்கும் அத்தனை நல்லது, கெட்டதுகளையும் அவ்வப்போது தமது நெட்ஒர்க் மூலம் சேகரித்து, பிரதமரின் காதில் போடுகிற முக்கியமான பணி இவருடையது.

எம்.கே. நாராயணன் :

உள்நாட்டுப் பாதுகாப்பு சம்பந்தமான அனைத்தையும் கவனிக்கும் பொறுப்பு, தமிழ்நாட்டுக்காரரான எம்.கே. நாராயணனுக்கு. ஐ.பி.யின் இயக்குனராக இருந்து ரிடையர் ஆனவர். காஷ்மீர், வடகிழக்கு மாநிலங்களை உற்றுக் கவனித்து, பிரதமருக்கு ஆலோசனை கூறுவது இவரது தலையாய பணி.

புலாக் சாட்டர்ஜி :

பிரதமரின் அலுவலகம் சௌத் பிளாக்கில் இயங்கினாலும், இன்றுள்ள சூழ்நிலையில் ஜன்பத் பத்தாம் எண் வாசிக்கு, எல்லா விஷயங்களையும் தெரிவிப்பதும், கலந்தாலோசிப்பதும் வெகு முக்கியமாயிற்றே! அந்த இரண்டுக்கும் இடையே இணைப்புப் பாலமாய் பணியாற்றுவது தான் சாட்டர்ஜியின் வேலை.

சஞ்சய் பருவா :

இவர்தான் பிரதமர் அலுவலகத்தின் மீடியா ஆலோசகர். நரசிம்மராவுக்கு நெருக்கமானவர். மன்மோகன் சிங்கிற்கு பல வருடங்களாகத் தெரிந்தவர். பிரதமரின் உரைகளைத் தயாரிக்கும் பணியும் இவருக்குத்தான். ஃபைனான்சியல் எக்ஸ்பிரஸ் பத்திரிகையின் ஆசிரியராக இருந்தவர். இந்தப் பொருளாதார நிபுணரின் வயது ஐம்பது.


- மெள்லி

• புலாக் சாட்டர்ஜி



• ஜே.என். தீட்சித்





மறைந்த

சுப்ரபாரதி மணியன்

வண்டுகளின் இரைச்சல் தூரத்தில் புறப்படும் விமானத்தின் ஆயத்தம் போல் இருந்தது. பசுமையின் ஈரம் எங்கும் வியாபித்து குளிரைக் கிளப்பியிருந்தது. படபடவென்று பறந்து போகும் பறவையின் வினோதச் சத்தம் முதலில் சரோஜினிக்கு ஒரு வகை பயத்தைக் கிளப்பியிருந்தது. ஆனால் இரண்டாம் நாளில் அதன் விநோதச் சத்தத்தில் அமிழ்ந்து போனவள் மாதிரி அதைக் கூர்ந்து கேட்க ஆரம்பித்திருந்தாள். எங்கு உட்கார்ந்தாலும் ஈரம் அப்பிவிட்டிருந்தது.

இப்படி ஒரு வனாந்திரத்தில் மின்சாரம் மட்டும் ஒளிர்ந்து கொண்டிருப்பது அவளுக்கு அதிசயமாகவே பட்டது. ஈரத்துடனான இருட்டை அதுதான் துரத்துவதாக இருந்தது. ஹீட்டர்களும் குளியலறை கீஸ்சர்களும் இல்லாவிட்டால், ஈரத்தில் முக்கி எடுத்த மாதிரி விறைத்துப் போக வேண்டி இருந்திருக்கும்.

தூணில் சாய்ந்து கொண்டே தூங்கிப் போனது அதிசயமாகத்தான் பட்டது அவளுக்கு. ஈரம் உடம்பை உலுக்கி விழிப்பு வந்து விட்டது. ஊரில் இருந்தால் முன் கேட், கட்டடக் கதவு என்று ஒவ்வொரு தடுப்பையும் அடைத்து விட்டுத்தான் வீட்டினுள் உட்கார்ந்திருக்க வேண்டியிருந்திருக்கும். எல்லாவற்றையும் அடைக்காத பட்சத்தில், ஒரு நிமிடத் தூக்கம் கூட சாத்தியமில்லை. ஆனால் இங்கு எல்லாம் வெட்ட வெளியாய், சூரிய வெளிச்சத்திற்காய் விரிந்திருக்கிறது. ஒற்றை ஆளாய், தொட்டிலில் தூங்கிக் கொண்டிருக்கும் குழந்தையின் அடுத்த வீறிடலுக்காய் காத்துக் கொண்டிருப்பவளாய் மாறிப் போயிருந்தாள். சூரிய வெளிச்சத்திற்காய் காத்திருந்து ஓய்ந்து போனது போலத்தான் தூக்கம் வந்து விட்டிருந்தது.

ஒரு வகையான வீறிடல் சத்தம் கேட்டது. சங்கீதாவின் உற்சாகக் குரலாகத்தான் இருக்கும் என நினைத்தாள். மூன்று நாட்களாய் அவளின் உற்சாகத்தை இப்படி வீறிடலாகத்தான் வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறாள். ஊரிலென்றால் இப்படியான வீறிடல் சத்தத்திற்கு பெரிய கூட்டம் கூடி விடும். விபரீதம் என்றே நினைத்துக் கொண்டு விடுவார்கள். காட்டின் ஒவ்வொரு திசைத் துணுக்கும் அதிர, எதிரொலிக்கும்படியான உற்சாகத்தை சங்கீதாவின் முகம் பிரதிபலிக்கிறபோது, சரவணனுக்கு உற்சாகம் வந்து விட்டது போல வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பது. இங்கு வந்த பின் அவனுக்கு வாடிக்கையாகிவிட்டது.

காட்டிலாகாவின் விருந்தினர் விடுதி அது. அடர்ந்த காட்டின் குளுமையையும் அமைதியையும் கொண்ட சொர்க்கபுரியாக அது இருந்து வந்தது. காட்டிலாகாவின் ஊழியர்களுக்கும், சில சமயங்களில் பிற அரசு ஊழியர்களுக்கும், சில நாட்கள் தங்குவதற்கான அனுமதி கிடைக்கும். ஐந்து வருடங்களுக்கு மேலாக இங்கு வருவதற்கு சரவணன் முயற்சித்துக் கொண்டிருந்தான். இப்போது தான் அனுமதி கிடைத்திருந்தது. விருந்தினர் விடுதியின் தனிமை, சரோஜினியை சற்று உலுக்கத்



பிரதேசம்

தான் செய்தது.

ஆனால் நகர இரைச்சலின் ஆயாசத்தில் தேவை என்றும் பட்டது.

சரிந்து வரும் பரப்பில் சங்கீதாவின் உருவம் சிறுத்துப் போய், பெரிய மரத்தின் ஓரத்தில் வளர்ந்திருக்கும் கன்றைப் போலத் தென்பட்டது. சரவணன் உடம்பை மண்ணுக்குள் புதைத்து விட்டது போன்று அவனின் தலை தெரிந்தது.

பள்ளத்தில் உருட்டிவிடப்பட்டவர்கள் போன்று அவர்களின் உருவங்கள் நிஜமாகின. சங்கீதாவின் முகம் வேர்வையில் புரட்டிவிடப்பட்டது போல் வியர்த்திருந்தது. தழுவிக் கொள்வதற்கு நாலு பேர் வேண்டும் என்று சவால் விடும் மரத்தைச் சார்ந்து நின்று கொண்

டான் சரவணன். "ஒரு மொசக்குட்டியை தொரத்தினம், அகப்படவேயில்லை". அவனது மூச்சிரைப்பில் முயல் தத்தளித்து ஓடியது. "இன்னைக்கு மொசக் கறிதான்னு நெனைச்சது தவறிப் போச்சு." அவர்களுக்கு பதில் சொல்லும் விதமாய் தலையை நீட்டியபடி சரோஜினி சற்றே உரக்கக் கத்தினாள். "தெனமும் உடும்பு, வான் கோழின்னு தின்னது பத்தாதா, மொசக்கறி வேற வேணுமாக்கும்." மரத்திலிருந்து முதுகைத் திருப்பி கொண்டவன், இரு கைகளாலும் தழுவினான். முத்தமிடுவது போல் முகத்தை உரசிக் கொண்டான். மூச்சை உள்ளிழுத்து முகத்தின் களைப்பை தூர விலக்கினான். "குளிர்ச்சையா இருக்குது. சொரசொரப்பும் வெதுவெதுப்பா பூமியையே கட்டித் தளுவிட்ட மாதிரி இருக்குது."

சங்கீதாவின் நெற்றியில் இருந்த சிவப்பு கரைந்து முகத்தைச் சிவப்பாக்கியிருந்தது. "என்னடி குங்குமமா? அசடு வழியறே" வழியில் தென்பட்ட பொச்சம்மா கோவில் பற்றிச் சொல்ல ஆரம்பித்தான். சிவப்பு வஸ்திரத்தில் தேஜஸாய் ஜொலிக்கிறாள். கெடாக்கறியும் கள்ளும், சாராயமும் விஸ்தாரமாய் படையலிடப்பட்டிருந்தன. 'போனாலு' பிரசாதமும் குவிந்திருந்தது. சாமியாட்டம் போட்ட சில சாதுக்களை பிரமிப்புடன் பார்த்துக் கொண்டிருந்தாள் சங்கிதா. நீண்ட தலை முடியை அவிழ்த்துப் போட்டு அவை தரையைத் தொட்டு விசிறும்படி நடனமாடினார்கள். பெரும் சக்தி வாய்ந்த மரங்கள் மற்றும் மூலிகைகளின் பெயர்களையும், அவற்றோடு சம்பந்தம் கொண்ட மூதாதையர்களின் பெயர்களையும் உரத்துக் கூவினார்கள். பொச்சம்மா சிலையை குளக்கரையில் வைத்திருந்தார்கள். குளம் குட்டை நிரம்புவதற்கு. அவளே பொறுப்பென்று தரையில் விழுந்து வணங்கினார்கள். விதைகள் முதல் நெற்கதிர்வரை எல்லாம் படையலாக்கப்பட்டிருந்தன.

"அந்தத் தாத்தாவைக்கூட பாத்தம்மா..."

'அது யாருடி புது உறவு தாத்தான்னு..."

"அதுதான் சரோ, ரெண்டு நாளா காலைலே வர்றாரே, அந்தப் பெரிய வராத்தா. வரணும்னார். ஆடுக, கோழி கன்னு நெறையா பலி கொடுப்பாங்களாம். அதுக ரத்தத்தெயெல்லாம் வயல்ல தெளிப்பாங்களாம். அந்தக் காணிக்கைக்கு அம்மா நல்ல பலன் தருவாளாம். பரகதிக்கு வரணும்ன்னு அவர் சொன்னதும் இவ பெரிசாத் தலையாட்டுனா, கண்டிப்பா வரணும்ன்னு, ஆமா அந்தத் தாத்தா பேரு என்னமோ ராஜானு வருமே."

"கட்டம்மராஜ், கொல்டராஜ், பூரப்பராஜ்..."


"பரவாயில்லே எல்லா ராஜ் பேரையும் சொல்லிட்டே. அவர் பேரு..."

"பெத்தராஜ்."

"ஆமாமா... அவர்தா.. டெய்லி தேனும், தெனமாவும் கொண்டாந்து குடுக்கறவரே அவ்வளவு சீக்கிரம் உன்னாலே மறந்திற முடியுமா?"

"நாம ஊருக்குப் போயிட்டாலும் தேனும் தெனமாவும் அனுப்புவாராமா?" சரவணனும் சரோஜினியும் சிரித்துக் கொண்டார்கள். சரிவில் பொத்தராஜ் இறங்கி வந்து கொண்டிருந்தார். அறையின் உள்ளே தொட்டிலில் கிடத்தியிருந்த குழந்தையின் வீறிட்ட அழுகைச் சப்தம் கேட்டு, சரோஜினி உள்ளே சென்றாள்.

பொத்தராஜின் நெற்றிக் குங்குமம், சந்தனத்தின் சீரில்லாத கலவையாக இருந்தது. புது வேட்டியை ஒரு விதமான தார்ப் பாய்ச்சலாய் கட்டியிருந்தார். வாழை இலையில் சேர்த்துக் கட்டிய தாய் பொச்சம்மா கோவில் பிரசாதம் இருந்தது. கால்களைத் தரையில் பதித்து குத்துக் காலிட்டார்! "என்னம்மா, கொழந்தை அழுது. இந்தக் குளிர் கொழைந்தைக்கு ஒத்துக் காமெ போயிருக்கலாம். பொச்



"சார், உங்க வீட்டு ரேடியோவை ரிப்பேர் பார்க்க வந்திருக்கேன்."

"யார் வரச் சொன்னது?"

"உங்க பக்கத்து வீட்டுக் காரர்."

- அரிச்சந்திரன்

சம்மா பிரசாதத்தை வாயிலே வைம்மா. எல்லா நோவும் பறந்து போயிரும். பெரியம்மிணிக்கு நாளைக்கு உடும்புக் கறி போட்டறலாம்."

"தேனும் தெனமாவும் இல்லாமயா தாத்தா."

"அது தவறாதும்மா அம்மிணி."

அவர் குத்துக்காலிட்டு உட்கார்ந்த



ABCDEFG எழுதுறியே, 'H' ஏன் எழுத மாட்டேங்கிற?"

"அதைத்தான் எடுத்துட்டாங்களே!"

- வே. முருகேசன்

தோற்றம், ஊர் கோடியில் சுடலை மாடன் கம்பீரமாய் இருப்பது போலிருந்தது. "சின்னக் கொழைந்தைக்கு எடம் ஒத்து வரலே. நைய் நைய்ன்னு அழுதுட்டே இருக்கா. நாலு நாள் லீவ் முடியப் போகுது. உடும்பெல்லாம் வேண்டா. வீணாயிரும்" சட்டென முகம் விழுந்து போக, தரையைக் கீறிக் கொண்டிருந்தார்.

"இந்த வருஷமாச்சும் எப்பிடியோ பர்மிஷன் வாங்கிருங்கப்பா. பாரஸ்ட் கஸ்ட்ஹவுசுக்குப் போகலாம். நான் சின்னவளா இருந்தப்போ போனது. இந்த சின்னக் குட்டிசாத்தான் அப்போ ரொம்பவும் குட்டி. இப்போ பிசாசு மாதிரி வளர்ந்துட்டா. இந்த தரம் காட்டுக்குள்ள ரொம்பவும் சுத்தணும். மரம், செடி, கொடிக்கெல்லாம் பொட்டானிக்கல் நேம் தெரிஞ்சுக்கணும். சாம்பிளா நெறையக் கலெக்ட் பண்ணணும். அந்த பொத்தராஜ் தாத்தாவைப் பாக்கணும். ரொம்பவும் வயசாயிருக்குமில்லையா அவருக்கு."

அங்கு போவதென்பதெல்லாம் இனி சாத்தியமில்லாதது என்பதை சொல்லி விட வேண்டும் என்றிருந்தது சரவணனுக்கு.

"பொத்தராஜ் தேனும் தெனமாவும் கொண்டுட்டு வருவாரா?"

பொத்தராஜ் போலீஸ் துப்பாக்கிச் சூட்டில் இறந்து போயிருந்தார். காட்டின் ஒரு பகுதியைச் சார்ந்திருந்ததை, பன்னாட்டு நிறுவனம் ஒன்று மாட்டிறைச்சித் தொழிற்சாலைக்காகவும் அதிலிருந்து கிடைக்கும் எலும்புகளைக் கொண்டு நடத்தும் உரத் தொழிற்சாலைக்காகவும் விலைக்கு வாங்கியிருந்தது. அப்பகுதியைச் சார்ந்த ஆதிவாசிகளும், பழங்குடியினரும் காலி செய்ய மறுத்துப் போராட்டம் நடத்தினர். போராட்டத்தின் போதான துப்பாக்கிச் சூட்டில் இறந்து போனவர்களின் ஒருவர், பொத்தராஜ்.

போராட்டங்களின் போதும், பின்னும், காட்டிலாகாவின் விருந்தினர் மாளிகை காவல் துறையினர் தங்குவதற்கான இடமாகி விட்டது. காவல் துறையினர் கையிலிருந்து தற்சமயம் இராணுவத்தினர் பாதுகாப்பு என்றான பிறகு, இராணுவத்தினர் தொடர்ந்து காவல் காத்து வருகிற இடமாகிவிட்டது. அந்த விருந்தினர் விடுதியைச் சுற்றியுள்ள பல நூறு ஏக்கர் நிலங்கள், பொது மக்கள் நுழைய முடியாத, தடை செய்யப்பட்ட பகுதியாகிவிட்டன. ஆதிவாசிகளும் பழங்குடியினரும் கும்பல் கும்பலாய் வெளியேறி விட்டனர். பல நகரங்களின் நடைபாதைகள் அவர்களுக்கு இருப்பிடங்களாகிவிட்டன.

பொச்சம்மா கோவில் தடை செய்யப்பட்ட பகுதியில் இருந்தது. பொச்சம்மா சிலை மழுங்கி, காரணமறியாத நோயால் சிதைந்து போய் ஆதிவாசிப் பெண்ணின் உடம்பு போல் சிதிலமடைந்து விட்டது.

"பொத்தராஜ் கிட்ட இருந்து தேனும் தெனமாவும் வாங்கிச் சாப்புட எனக்கும் ஆசைதான்" என்றான் சரவணன். ●





நாய்க்குட்டி தந்த வாய்ப்பு!

"ஒரு நாய்க்குட்டிதான் எனக்கு சினிமா சான்ஸ் வாங்கித் தந்ததுன்னா நம்புவீங்களா? நெசந்தாங்க. எனக்கு குட்டிநாய்னா உசுரு. கேமரா மேன் ராஜராஜன் அங்கிள் வீட்ல, ஒரு நாய்க்குட்டியைப் பார்க்கப் போனேன். போனேனா... அப்போ அந்த அங்கிள் என்னைப் பார்த்துட்டு, 'அசப்புல அப்படியே பழைய ஷோபா மாதிரி இருக்கியே'ன்னுட்டு, சினிமாவுல நடிக்கிறியான்னாரு. எனக்கு ரொம்ப வெட்கம். அப்பாவும் அம்மாவும் ஒத்துக்கலை. எனக்கும் ஸ்ரீதேவி, சிம்ரன், ஜோதிகா லெவல் கனவெல்லாம் வந்துபோக, ஒருமாதிரி அடம் புடிச்சு சம்மதிக்க வச்சுட்டேன். 'பிளஸ் டூ' படத்துல வாய்ப்புக் கிடைச்சது." - கண்கள் குவியச் சிரிக்கிறார் சுஜா!

"மலையாளத்துல 'பறையம்', கன்னடத்துல உடிஸ், பண்ணி முடிச்சிட்டேன் தெலுங்குல ஒரு புதுப் படம். தமிழ்ல பெயர் வைக்காத சில படங்கள்ல ஒப்பந்தம் ஆகியிருக்கேன்.

"நடிக்கணுங்க. நல்லா நடிக்கணும். அட, இந்தப் பொண்ணைப் பாருய்யா; கலக்கியிருக்கான்னு நாலு பேர் (போதுமா?) சொல்லணும்? பெயர் வாங்கணும். அதுக்கு நல்ல கேரக்டரும் வரணுமில்ல?"

ஆமா... பெறவு?

- மொ. ராசு



விண்மீன் உதிக்கும் சோலை

ஏதொன்றும் முடிவுக்கு வரவியலாத
வார்த்தைகளைப்
பூப்பறிப்பதுபோல் இலகுவாய் உதிர்க்கிறாய் நீ

முந்தானையை இழுத்துமூடும்
விரல்களின் பழக்கம்
உன் உதடுகளுக்கும் தொற்றிக் கொண்டது

நீரோட்டம் தெளியாதவன்
கிணறு வெட்டி பாறையில் முடிந்துபோகிற கதை
பலமுறை நிகழ்ந்திருக்கிறது உன்னிடம்

அங்குமிங்குமாய் நீருள் மூழ்கி
ஆட்டம் காட்டும் நீர்க்கோழிபோன்ற
வார்த்தையைத் தூர்த்தி
மூச்சுத்திணறி அமிழ்ந்து போகிறேன்
எச்சம் பழத்திற்காய்
என்றோ விட்டெறிந்த தெற்றுக்கல்
எதிர்பாரா பொழுதொன்றில்
தலைமீது விழுவதாய்
திரும்பிவரும் என் சொற்கள்
துடிதுடிக்க வைக்கின்றன.

வனாந்தரத்தில் விளைந்த
கம்பங்கொல்லையில் சுற்றிச் சுற்றி வந்தமரும்
சிட்டுக்குருவி மந்தையாய்
என் எல்லா நாட்களும்
உன் சொல்லுக்காகக் கூடி நிற்கின்றன.
நீயோ
தரைக்கு வந்து சேராத எரி நட்சத்திரத்தைப் போன்று
ஒரு சிரிப்பை மட்டும்
தொடுத்துப் போகிறாய், தினமும்.

பச்சியப்பன்



'கரகர' கவியரங்கம்!



கோலிவுட் நடிகர்களை 'கோலி' சோடா உடைத்துக் குடிப்பது போல் குடித்து, ''ஏப்பம்'' விட்டு விடுகிறார்கள் பாலிடிக்ஸ் புலிகள். வெகுண்டெழுந்த பெரும் நடிகர்கள், தங்களின் எதிர்ப்பை அஹிம்சா வழியில் காட்ட கவியரங்கம் நடத்துகின்றனர், 'கர கர' பாரதிராஜா தலைமையில்.

பாரதிராஜா :

என் இனிய தமிழ் மக்களே! உங்களின்
பாசத்திற்குரிய பாரதிராஜா - -
'வில்லன்'
வேஷம் கட்டாமல் வந்துள்ளேன்!

கள்ளிக் காட்டு மண்ணிலிருந்து வந்து,
காய்ந்துபோன 'பன்னை' தின்று
வளர்ந்து,
'அரிதாரம்' பூசி - அனைவரையும்
மயக்கி,
இன்று அரியணைக் கனவுகளோடு
நிற்கும்
என் இனிய கதாநாயகர்களே!
அரசியல்வாதிகளிடம்
அநியாயத்திற்கு
வாங்கிக்கட்டும் 'உதார்' நாயகர்களே!
இது 'துண்டு' போர்த்தும்
மேடையல்ல...
துண்டு போட்ட அரசியல்வாதிகளை
கவிதைகளால் 'பெண்டு' நிமிர்த்தும்
மேடை!
கொண்டு வாருங்கள் உங்கள்
கவிதைக் குண்டுகளை

காவிரிக் கரையோரம் தனியே
நின்றாலும்
கரை வேட்டிகளால் கறை பட்டுப்
போய்
நுரைக்க, நுரைக்க கவிதை பாட
வந்துள்ள
அன்பு ரஜினியை முறைக்காமல்
'முதலில்' அழைக்கிறேன்...

ரஜினி :

பாரதிராஜாஜி!
நான் வைச்சேன் பிரஸ்மீட்!
அதுல சொன்னேன் என் தாட்!
இருந்தும் போட்டாங்க எதிர் ஓட்டு!
இப்ப விவகாரம் ரொம்ப ஹாட்!

நான் சொல்ல வேண்டியதை,
சொல்லாததை, சொல்லணும்னா,
சொல்லாம, சொல்ல
வேண்டியவங்ககிட்ட
கட்டாயம் பிரஸ்மீட் வைச்சு
சொல்வேன்!

பா.ராஜா: (கடுப்பாகி) இப்ப என்ன சொல்லப் போறீங்க!

ரஜினி :

எதுவும் சொல்லல - ஏன்னா பாபாஜி
சிக்னல் கொடுக்கல -
மீதியை 'சத்தி' சொல்வான்..
(என்று விரைகிறார்)

சத்திய நாராயணா :

அடப் போங்கப்பா, அவரு மனசுல உள்ளது அவருக்கே புரியாது. நான்

என்னத்த சொல்ல...

(என்று மறைகிறார்)

பா.ராஜா : (மனத்திற்குள் - 'பஞ்ச்' டயலாக் விட்டு கவியரங்கத்தை 'பஞ்சர்' ஆக்கிட்டுப் போயிட்டாரே!)

அடுத்து,
அறிவிலே பழுத்து,
அரிவாளாய் எடுத்து,
கிருதா வளர்த்து நடித்து,
கிருஷ்ணசாமியால் நொந்த



விருமாண்டி, எம்.பி.பி.எஸ்ஐ
அழைக்கிறேன்.

கமல் :
அரிவாள்! ஒரு இரும்புத்துண்டு!
ஆனால் இரும்புத்
துண்டுகளெல்லாம் அரிவாளல்ல!
அரிவாளைக் கூர்மையானதுன்னு
சொல்ல முடியாது.
அதுக்காக 'மொக்கை'ன்னு ஒதுக்கவும்
முடியாது.
அதை வைச்சி சீர்திருத்தம்
பண்ணலாம்னு சொல்ல வரல...
அதுக்காக சிரச்சேதம் செய்யலாம்னு
நீங்க
நினைச்சா அது என் தப்பில்ல!

பாரதிராஜா :
ஏம்பா கமல்! 'உன்னை எண்ணிப் பார்க்கையில் 'கவித' கொட்டுது'ன்னு குணால பாடுவேல்ல... 'கவித', 'கவித' அதச் சொல்லுப்பா!

கமல் :
கவிதை - வார்த்தைகளின்
வெளிப்பாடு!
ஆனால் வெளிப்படுவதெல்லாம்
வார்த்தைகளல்ல!
வெளிவராமலிருக்கும் வார்த்தைக்கு
அர்த்தம் இல்லை,
அதுபோல் வெளிவந்தபின்
வார்த்தைக்கு
அர்த்தம் இல்லாமல் இல்லை!

பா.ராஜா : (டென்ஷனாகி, 'ஆய்த எழுத்து' ஸ்டைலில்) ஏம்ப்பா! நாம எங்க நிக்கிறோம்? இது பூகோளக் கோளாறா? இங்க புத்தி கெட்டு வந்தது என் கோளாறா? மிஸ்டர் தமிழ்ச்செல்வன் - நீங்களாவது வந்து கவிதையைக் காப்பாத்துங்க!

விஜயகாந்த் :
'அரை வேக்காடு' - தமிழ்ல எனக்குப்
பிடிக்காத வார்த்தை!
'டாக்டர்' - இங்கிலீஷ்ல எனக்குப்
பிடிக்காத வார்த்தை!
'அரசியல்' தமிழகத்துல என்னைப்
பிடிச்சுக்கிட்டிருக்கிற வார்த்தை!
திருக்குறள்ல 1330 - குறள் இருக்கு!
அகநானூறு 400 பாட்டு இருக்கு!
ஐங்குறுநூறுல 500 செய்யுள் இருக்கு!
கஜேந்திராவுல 5 பாட்டு இருக்கு!
அதுல 3 டூயட்!
இப்ப நான் போயட்!

பாரதிராஜா :
ராசாக்களா.. விட்டுடுங்க ராசா விட்டுடுங்க... என் மவன் மனோஜுக்கு நடிக்க வரல... அவன் விட்டுட்டான். கவித எழுத உங்களுக்கு வரல... தயவு செய்து விட்டுருங்க.... ராமதாசைத் தட்டி எழுப்பாதீங்க! (தலை தெறிக்க ஓடுகிறார்.)

- முகில்

விஜய் 'கில்லி' பதில்கள்

• புதிதாக நடிக்க வருபவர்களுக்கு உங்கள் அறிவுரை?

- கே. வெங்கடேசன், சேலம்

அறிவுரை சொல்லும் அளவுக்கு நான் இன்னும் வளரவில்லை. ஆனால் ஒரு விஷயம், தோல்வி பயம் இருந்தால் நடிக்க வராதீங்க.





• டைரி எழுதும் பழக்கமுண்டா?

- பி.எஸ். குமார், கோவை

இல்லை! சில விஷயங்கள் மறக்காமல் இருக்க, டைரியில் குறித்துக் கொள்வேன். செல்ஃபோன் ரிமைண்டரிலும் போட்டு வைப்பேன்.

• விஜயின் டபுள் ஆக்ட் பார்க்க இன்னும் எத்தனை வருடம் காத்திருக்க வேண்டும்?

- அ. பாபு, திருநகர், சென்னை

ஒரு வருடம் மட்டும்.



• 'ஒருநாள் முதல்வராகும்' வாய்ப்புக் கிடைத்தால், நீங்கள் செய்யும் முதல் வேலை?

- வடவள்ளி எஸ். யுவராஜ், கோவை.

'முதல்வன்' படத்தில் அர்ஜுன் என்ன செய்தாரோ, அதையெல்லாம் செய்ய முயற்சிப்பேன். ஆனால் அது சினிமா. நிஜத்தில் சாத்தியமா என்று தெரியவில்லை.



• தாயின் பாசம், மனைவியின் அன்பு ஒப்பிடுங்க?

- கோ. லட்சுமி, அசோக்நகர், சென்னை

தாயின் பாசம் நிபந்தனையற்றது. மனைவியின் அன்பு கண்டிப்பு கலந்தது என்று எதிலோ படித்திருக்கிறேன். எனது அம்மாவும், மனைவியும் ஒரே மாதிரியான பாசத்தையும், அன்பையும் காட்டுகிறார்கள். நான் அதிர்ஷ்டசாலி.





● திருமலை படத்தில் ஜோதிகாவை நீங்கள் காதலிப்பது போல, எனது நண்பன் (உங்க ரசிகன்), ஒரு பெண்ணிடம் தனது காதலை ஏற்றுக் கொள்ளும்படி கட்டாயப் படுத்துகிறான். அவனுக்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?



- மெக்கானிக் ஏ. நாகராஜ், சென்னை - 83.

காதல் உண்மையானதாக இருந்தால் அவரது அப்ரோச் தப்பில்லை. அந்தப் பெண்ணுக்கு விருப்பமில்லை என்றால், அடியோடு ஒதுங்கி விடுவதுதான் நாகரிகம்.

● மேக்-அப் போடாமல் நடிக்க தைரியமுண்டா விஜய்?

- லதா, பிரான்மலை

பொதுவாக நான் மேக்-அப் போட்டு நடிப்பதில்லை. டூயட் ஸாங் என்றால் கொஞ்சம் டச் செய்து கொள்வேன். தொடர்ந்து வெயிலில் நடித்தால், தோலின் நிறம் மாறி விடும். அப்போது மட்டும்தான் மேக்-அப்.

● விஜய், தமிழனா இந்தியனா?

- ஆடிட்டர் என். ரகுபதி கணபதி, கோவை

உலகமே ஒரு தேசம். விஜய் எல்லைக் கோடுகளை விரும்பாத தமிழன்.






பொறாமைப்படு!

ஒரு சமயம் நான் ரயில் ஏறினேன். வண்டியிலிருந்தவர்களில் ஒருவர் எனக்குக் கொஞ்சம் இடம் ஒழித்துக் கொடுத்தார். அவரை எனக்கு முன்பின் தெரியாது. அடுத்த ஸ்டேஷனில் நான் இறங்கியபோது அந்த மனிதர் பக்கத்திலிருந்தவரைப் பார்த்து, ''அவர் யார் தெரியுமா? அவர்தான் 'தமிழ்த்தேனீ''' என்று கூறியது என் காதில் விழுந்தது. 'தமிழ்த்தேனீ' என்ற பெயருடன் நான் சில காலம் எழுதியதுண்டு என்னும் குற்றத்தை ஒப்புக் கொண்டு விடுகிறேன். இராஜ நடையென்று நீங்கள் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? என் வாணாளில் நான் எப்போதேனும் போலி இராஜ நடை நடந்ததுண்டானால் அந்தச் சமயத்தில் தானிருக்க வேண்டும். அன்று முழுவதும் அந்த மனிதர் யாராயிருக்கலாமென்றும், அவருக்கு எப்படி என்னைத் தெரியுமென்றும் சிந்தித்துக் கொண்டிருந்தேன்.

இத்தகைய அனுபவங்கள் தம் வாணாளில் கிடையாதென்று உங்களில் யாரேனும் நெஞ்சில் கை வைத்துக் கொண்டு சொல்ல முடியுமா? ஒரு நாளும் முடியாது. நீங்கள் ரயில் பிரயாணம் செய்கிறீர்கள். டிக்கட் பரிசோதகர் வந்து பக்கத்திலுள்ள குடியானவர்களிடம் டிக்கட் கேட்கிறார். உங்களை மாத்திரம் கேட்காமல் போகிறார். அப்போது, உங்கள் கர்வம் ஓங்கி வளர்ந்து ரயில் கூரையைப் பெயர்த்துவிட்டு மேலே கிளம்புவதில்லையா? ''நம்மையெல்லாம் டிக்கட் கேட்க மாட்டார்கள், ஸார்! ஆசாமியைப் பார்த்தவுடன் தெரிந்து கொள்வார்கள்'' என்று எத்தனை சந்தோஷத்துடன் சொல்லுகிறீர்கள்? நம்முடைய சொந்தப் பெருமை மட்டுமல்ல. பிறருடைய சிறப்பைக் கூட நம்முடையதென நினைத்துக் கொண்டு சில சமயம் சந்தோஷமடைகிறோம். ''நான் நேரில் பார்த்திருக்கிறேன்'' என்ற பெருமைப் பேச்சைக் கேளாதவர் யார்? பார்த்தது மகாராஜாவின் தர்பாராயிருக்கலாம்; காங்கிரஸ் மகாசபையாயிருக்கலாம்; பெருங்கலகம் நடந்த இடமாயிருக்கலாம்; காசி நகரமாயிருக்கலாம்; தாஜ் மஹால் கட்டடமாய் இருக்கலாம்; குற்றவாளியைத் தூக்குப் போட்ட சம்பவமாயிருக்கலாம்; பெரிய பாம்பு அடித்த இடமாயிருக்கலாம்; ஆகாய விமானமாயிருக்கலாம்; மோட்டார் விபத்தாயிருக்கலாம்; குதிரைப் பந்தயமாக இருக்கலாம். எதுவாயிருந்தாலும், ''நான் நேரில் பார்த்தேன்'' என்று நீங்கள் பெருமையடித்துக் கொள்ளும்போது, மற்றவர்களுடைய பொறாமையைக் கிளப்பவே விரும்புகிறீர்களென்பதை ஒப்புக் கொள்ளுங்கள்.

நம்முடைய விஷயந்தான் இப்படியென்றால் நம்முடைய மனைவிமார், சகோதரிகள், குழந்தைகள் எல்லாரும் இதே நிலையில்தான் இருக்கிறார்கள். குழந்தை ராமு பள்ளிக்கூடத்திலிருந்து ஓடி வந்து, ''அப்பா! எனக்கு பன்னிரண்டு மார்க்கு, சீனுவுக்கு கோழி முட்டை!'' என்று உற்சாகம் ததும்பச் சொல்கிறான். தனக்குப் பன்னிரண்டு மார்க்குக் கிடைத்ததைவிடச் சீனு கோழி முட்டை (பூஜ்யம்) வாங்கியதில்தான் அவனுக்கு அதிக சந்தோஷம். வீட்டில் சாதாரணமாயிருக்கும் பெண்



கள் எங்கேயாவது வெளியில் போவதென்றால், ஒரு மணங்கு நிறையுள்ள பட்டுப் புடைவையும் (இரவல் வாங்கியாவது) அரை மணங்குக்குக் குறையாத நகைகளும் போட்டுக் கொண்டு கிளம்புவதேன்? மற்றப் பெண்களின் பொறாமையைக் கிளப்புவதற்குத் தான். உங்கள் சகோதரியாவது, மனைவியாவது அடுத்தமுறை உங்களிடம் வந்து 'கமலம் அசாத்திய ராங்கிக்காரி. அவளுடன் சகவாசமே உதவாது' என்று சொல்லும் போது அதை அப்படியே நம்பிவிட வேண்டாம். உங்கள் சகோதரி அல்லது மனைவியின் புடைவை, நகைகளைப் பற்றியோ, படிப்பு, பாட்டுத் திறமைகளைப் பற்றியோ ஸ்ரீமதி கமலம் பொறாமை காட்டவில்லையென்று தெரிந்து கொள்ளுங்கள். கோபத்திற்குக் காரணம் அது தான்.

கேவலம் மனிதர்களிடம் மட்டுமல்ல! இன்னும் உயரிய இலட்சியங்களுக்காகப் பிறந்த மிருகங்களிடத்தில் கூட இந்தக் குணம் காணப்படுகின்றது. ஒரு சமயம் பிராணிக் காட்சிச்சாலை ஒன்றுக்குப் போயிருந்தேன். அங்கே ஒரு குரங்கும் ஒரு யானையும் மிகவும் சிநேகிதமாயிருந்தன. மற்ற குரங்குகள் யானையின் அருகில் போகவும் துணிவதில்லை. ஆனால், அந்த ஒரு குரங்கு மட்டும் யானையின் மேலேறியும், இன்னும் பலவிதமாகவும் விளையாடிக் கொண்டிருந்தது. இதைப்பற்றி அந்தக் குரங்குக்கிருந்த கர்வத்தைப் பார்த்து நான் மிகவும் வெட்கமடைந்தேன். ஏன் தெரியுமா? நம்மிடந்தான் இந்தத் துர்க்குணமென்றால், நமது மூதாதைகளான குரங்குக் குலத்தினிடமுமா இது காணப்பட வேண்டுமென்ற எண்ணம். அந்தப் பொல்லாத குரங்கு, யானையின் முதுகில் நின்று கொண்டு, மற்ற குரங்குகளைப் பார்த்துக் கெக்கிலி கொட்டிச் சிரித்தபோது சாக்ஷாத் மனித அவதாரமே காணப்பட்டது. முதல் வகுப்பில் ரயில் பிரயாணம் செய்பவன் மூன்றாம் வகுப்புப் பிரயாணிகளைப் பார்ப்பது போலவும், சொந்த மோட்டாரில் போகிறவன் பாதசாரிகளை நோக்குவது போலவும், புதிதாய்த் திவான் பகதூர் பட்டம் பெற்றவன் மற்ற சாதாரண ஜனத்திரளைப் பார்ப்பது போலவும், அந்த மானங்கெட்ட குரங்கு தன் இனத்தைச் சேர்ந்த மற்றக் குரங்குகளைப் பார்த்தது. நிற்க.

இதுவரைக்கும் கூறியதிலிருந்து விளங்குவதென்ன? மனிதர்களுக்காகட்டும், மிருகங்களுக்காகட்டும், பிறருடைய பொறாமையைப் போல் மகிழ்ச்சி தருவது வேறொன்றுமில்லை. பிறருடைய பொறாமையைக் கிளப்ப முடியாவிடில், அதைப் போல் துயரந் தருவதும் வேறு கிடையாது! ஆகவே உங்களுக்குச் சிநேகிதர்கள் வேண்டுமானால், மற்றவர்களைக் கொண்டு உங்கள் காரியங்களை முடித்துக் கொள்ள வேண்டுமானால், பொதுவாக உலகில் நீங்கள் வெற்றி பெற வேண்டுமானால், "பொறாமைப் படுங்கள்!" என்று சொல்வேன்.

- கல்கி
கட்டுரைகள்
தொகுப்பிலிருந்து

அமரர் கல்கி



● கி. துரைசாமி, மங்கலப் பட்டி

? இன்றைய சூழ்நிலையில் உங்களைக் கவர்ந்த பேச்சாளர் யார்...?

! கர்ஜிக்கும் கஜேந்திரா! 'தலைவா, ஆணையிடு!' சி.டி. மேல சத்தியம், சத்தியம்!



● க. முத்துக்குமார், வேப்பம்பட்டி புதூர்


? நல்ல புத்தகங்களை நாடிப் படிப்பவர்கள் நாட்டில் இருக்கிறார்களா...?

! நாடிப் படிப்பவர்கள் இருந்தும் 'ஸ்டாக் இல்லை' என்று கை விரிக்கிறார்களாமே! (ஸாரி, கேள்விக்கு அரசியல் பூச்சு ஏறிவிட்டது)

● ஷியாமளா ஈசுவரன், தேவூர் மேட்டுக்கடை

? கர்னாடகாவிலிருந்து வரும் 'வடிகால் நீருக்கு' நமது தமிழகத் தலைவர்கள் 'நான் நீ' என்று போட்டி போட்டுக் கொண்டு பெருமை கொண்டாடுகிறார்களே...?

! மழை நின்ற பிறகு இந்த வடிகால் நீர்கூட வராது. மேட்டூர் கால்வாசிகூட நிரம்பாது போலிருக்கிறது. அந்த நிலையில் கர்னாடகாவை நீர் திறந்து விடச் செய்வதில் வெற்றி கண்டால் நிஜமாகவே தமிழகத் தலைவர்கள் கொண்டாடலாம். இப்போதைய கொண்டாட்டம் பசிக்கு அழும் குழந்தைக்குக் கிலுகிலுப்பை ஆட்டுவது போன்றது.



● மனங்குளிர் ஆணை!

● பி. ஜெயப்பிரகாஷ், சர்க்கார்பதி

? ஆண்டுக்கு 98 லட்சம் ரூபாயை, நெசவாளருக்கு, தமிழக அரசே காப்பீட்டுத் தொகையாகச் செலுத்தப் போகிறதாமே?

! நெசவாளர்களின் இன்றைய வாழ்க்கைத்தரம் உயர உதவுவதுதான் முக்கியம். அதைச் செய்தால், காப்பீட்டுத் தொகையை அவர்களே செலுத்திக் கொள்வார்கள். தமிழக அரசின் தற்போதைய முடிவு, எல்.ஐ.சி.க்குத் தான் ஆதாயம்.

● ஜி. சீதா, சென்னை - 20

? பத்திரிகைகளுடன் இணைப்புப் புத்தகம் என்று தனியாக ஏன் தருகிறார்கள். அதே விஷயங்களை ஒரே புத்தகமாகத் தந்துவிடலாமே...?

! விருந்துக்குப் பிறகு பான் பீடா; சம்பளக் கவருடன் வீட்டுக்கு வரும் ஸ்வீட், மல்லிப்பூ... இது மாதிரி இணைப்புகளுக்கென்றே தனி டேஸ்ட் உண்டு.

● திருச்சிற்றம்பலம் சுரேஷ், திருக் கண்டேஸ்வரம் ★

? ஒலிம்பிக் போட்டியில் நமக்குத் தங்கம் கிடைக்குமா...?

! கரணம் போட்டோ அல்லது மல்லுக் கட்டியோ, ஒரு பதக்கம் நிச்சயம், காப்பாத்து ஈஸ்வரியே!

● ஈ.டி. தயாளன், சென்னை - 12

? வியாபாரச் சந்தையில் நன்றாக விற்பனையாகும் பொருள்களுக்குக் கூட விளம்பரம் தேவையா..?

! பூக்கடைக்குக் கூட இன்று

'ஆல் பாஸ்' போட்டால் கல்வித்தரம் உயருமா...?

விளம்பரம் தேவைங்க; இல்லாட்டி பிளாஸ்டிக் பூ, விளம்பரம் செய்து மார்க்கெட்டைப் பிடித்து விடலாம்!

● கே. தெய்வசிகாமணி, சென்னை - 30

? மோடியைக் கொலை செய்ய வந்ததாகச் சொல்லப்படும் பெண் ஒரு தீவிரவாதியே அல்ல என்ற சர்ச்சை குறித்து...?

! அவள் தீவிரவாதியாகவே இருந்தாலும், சுட்டுக் கொல்ல வேண்டிய அளவுக்குக் காவல் துறைக்குக் காரணங்கள் இருந்தனவா.. என்பதுதான் முதல் பிரச்னை. அவள் தீவிரவாதி என்பதற்கான தடயங்கள் யாவுமே, அவள் கொல்லப் பட்ட பிறகுதான் 'திரட்டப்பட்டன' என்பது இரண்டாவது பிரச்னை. நிஜ, தீவிரவாதிகள் அவளை ஒரு கேடயமாகப் பயன் படுத்தியிருக்கக்கூடிய வாய்ப்பு உண்டு என்பது மூன்றாவது பிரச்னை. நடுநிலையான சி.பி.ஐ. விசாரணைக்கு குஜராத் அரசு ஒப்புக் கொள்ளுமா என்பது தலையாய பிரச்னை.

● க.நா. இராஜேஸ்வரன், மொரட்டுப் பாளையம்

? மணல் விலையை, (லோடு ஒன்றுக்கு) ஆயிரம் ரூபாயிலிருந்து அறுநூறு ரூபாயாக அரசு குறைத்து விட்டதே...?

! அரசுக் கட்டுப்பாட்டில் வருவதற்கு முன்னால் அந்த விலைக்குத்தான் மணல் (தனியாரால்) விற்கப்பட்டது. அரசு, மணல் விலையை உயர்த்தியதால் கள்ள மார்க்கெட்தான் கொழித்தது. ஆகவே, வேறு வழியின்றி அரசு விலை நிலைப்படுத்தப் பட்டிருக்கிறது. இப்போதும் அரசுக்கு லாபம் குறையுமே யொழிய, நஷ்டம் ஏற்பட்டு விடாது.

● கே.வி. ராமன், சென்னை - 73

? இந்திய கலாசாரத்தை இழிவுபடுத்தும் 'கர்ல் ஃப்ரெண்ட்' படத்துக்கு சங்பரிவார் அமைப்புகள் எதிர்ப்பு தெரிவிப்பது குறித்து...?

! எதிர்ப்பில் வன்முறை இருப்பது கோரம். படம் பண்பாட்டு விரோதமல்ல என்று சப்பைகட்டு கட்டுவோர், அதற்காக வைக்கும் வாதங்களும் அந்த வன்முறையைப் போலவே கோரம்!

● ஜி.ஜெயராமன், கூந்தலூர்

? தற்பொழுது உள்ள அரசியல்வாதிகளில் உங்களுக்கு நம்பிக்கை ஊட்டுபவர் யார்...?

! அரசு அலுவலகத்தில் காந்திஜி படமும், குடியரசுத்



● கஜேந்திரகாந்த்!



● டபுள் இன்ஸல்ட்!



● ஈசுவரி, காப்பாற்று!

நீங்கள் கேட்டவை -தராசு

தலைவர் படமும் மாட்டப்பட்டால் போதும் என்று ஆணை பிறப்பித்துள்ள மன்மோகன் சிங், ஒரு நல்ல எதிர் பார்ப்பை உருவாக்கியுள்ளார்.

● வீ. முத்தையா, திருநெல்வேலி

? "ஹார்வர்டு, ஆக்ஸ்ஃபோர்டு பல்கலைக் கழகங்களில் பயின்ற நவ நாகரிக மனிதர்களான ப. சிதம்பரம், மணி சங்கர் அய்யர் போன்றவர்களுக்குச் சாமான்ய மக்களின் பாதிப்புகள் எப்படித் தெரியும்?" என்று ஜெ. கேட்பது குறித்து...?

! அந்தப் பல்கலைக் கழகங்களையும் சேர்த்து அவமானப்படுத்தும் வாக்கியம்! மனித நேயமும், பொருளாதார ஞானமும் மிக்க பலரை உருவாக்கியுள்ளன இந்தப் பல்கலைக் கழகங்கள்.

● எஸ். முரளி, குறிஞ்சிப்பாடி

? பாலியல் வழக்கில் கைதாகும் பெண்கள் அதிக தண்டனை பெறுகிறார்கள்; ஆண் - பெண் இருவருக்கும் சமமான தண்டனை தர வேண்டும் என்று பெண்கள் அமைப்புகள் கோரியுள்ளதைப் பற்றி...?

! மிக நியாயமான கோரிக்கை.

● இரா. சக்கரபாணி, மதுரை - 7

? ஐந்தாம் வகுப்புவரை 'ஆல் பாஸ்' போடுவதால் கல்வியின் தரம் உயருமா...?

! குழந்தைகளின் மகிழ்ச்சி உயரும் அளவுக்குக் கல்வியின் தரம் உயராது. ஆசிரியர்களின் பொறுப்பு அதிகரிக்க வேண்டும்; ஆனால் அது நடக்கும் என்று நம்புவதற்கில்லை.

● எஸ். ஆசாதி, பெருமாள்தேவன் பட்டி

? உலகில் அதிக கடன் வாங்கியுள்ள நாடுகளின் பட்டியலில், மூன்றாம் இடத்திலிருந்து இந்தியா எட்டாம் இடத்துக்கு வந்திருப்பது முன்னேற்றம்தானே...?

! மகிழ்ச்சி தரும் முன்னேற்றம்.

❒ ரூ.100 பரிசு பெறுபவர் :
ஜி. சீதா, பி-41, முதல் மெயின் ரோடு, காந்தி நகர், சென்னை - 600 020.

★ ரூ. 50 பரிசு பெறுபவர் :
திருச்சிற்றம்பலம் சுரேஷ், தோப்புத் தெரு, திருக்கண்டேஸ்வரம், கடலூர் மாவட்டம்



கேன்சர் கண்காட்சி

சமீப காலத்தில், மருத்துவத் துறை பற்றிய எந்த ஒரு கண்காட்சியும் இப்படி அமைந்திருந்ததில்லை.

மிகுந்த அக்கறையுடன் புற்றுநோய் பற்றிய கண்காட்சியை 'இமேஜ்' அரங்கத்தில் உருவாக்கியிருந்தது, சென்னை அடையாறு புற்றுநோய் மருத்துவமனை!

★ புற்றுநோய் வரக் காரணிகள்

★ வராமல் தடுக்க யோசனைகள்

★ வந்தபின் கண்டுபிடிப்பது எவ்வாறு?

★ மாற்று மருத்துவமுறைகள் என்னென்ன? அவை எந்த அளவுக்கு உதவுகின்றன?

உணவுக் குழல் புற்றுநோய், வயிற்றில் புற்றுநோய், கருப்பைவாய்ப் புற்றுநோய், சிறுநீர்ப்பை முன்வாயில் (புராஸ்டேட்) புற்றுநோய், நுரையீரல் புற்றுநோய் என, ஒவ்வொரு பகுதியிலும் ஆங்கிலத்தில் விளக்கங்கள், படங்களுடன் வைக்கப்பட்டிருந்தன.

"ஒரே நோய்க்கு இத்தனை பரிமாணங்களா?" என்று ஒரு மாணவர் வியந்து போனார்.

பல பள்ளி - கல்லூரி மாணவ மாணவியர் கொத்துக்கொத்தாக வந்திருந்து விவரங்கள் தெரிந்து கொண்டார்கள்...

சிகரெட் பிடிப்பவர்களுக்கு எச்சரிக்கை செய்கிற பகுதியில் தரப்பட்ட தகவல்கள் சில :

புகையிலையில் உள்ள நாலாயிரம் வேதிப் பொருள்களில், ஐம்பத்தைந்து வேதிப் பொருள்கள், புற்றுநோயை உண்டாக்கக் கூடியவை.


• புகையிலை, புற்றுநோய், இதயநோய்கள் உட்பட ஐம்பத்து மூன்று வகையான முக்கிய நோய்கள் உருவாகக் காரணியாக இருக்கிறது.

• அறுபது மில்லிகிராம் நிகோடின் ஒரே நேரத்தில் உடலுக்குள் சென்றால், ஆரோக்கியமான மனிதனின் ஆயுளைக் கூடப் போக்கிவிடும்.

புற்றுநோய் மருத்துவமனையில் உள்ள 'புகையிலை தடுப்பு மையம்' இவர்களுக்கு உதவுவதற்கென்றே இயங்கி வருகிறது. இலவச ஆலோசனை பெறலாம்.

கண்காட்சியைச் சுற்றிப் பார்த்தபிறகு, புற்று நோய் பற்றிய டாகுமென்டரி படத்தை அரங்கில் திரையிட்டார்கள்.

இந்தச் செய்தி எல்லாம், படித்த மக்களுக்கு மட்டுமே சென்றடைகின்றன. குடிசைப் பகுதி மக்களுக்குப் போய்ச் சேருவதில்லை என்பதுதான் நம் வேதனை. அவர்களையும் ஈர்க்கும் வகையில் புற்றுநோய் விளக்கக் கண்காட்சி அமைந்திருந்தால், பலன் இன்னும் பல மடங்கு அதிகரிக்கும்.



படம், கட்டுரை : சாருகேசி

முளைப் பாலிகைக் கிண்ணங்களில் நெல், உளுந்து, துவரை முதலிய தானியங்களை எடுத்து, சுமங்கலிப் பெண்கள் கல்யாணம் எனும் ஆயிரங்காலத்துப் பயிரை மனமார வேண்டி, அரிமணம் இட்டுக் கொண்டிருந்தார்கள். கதிரேசனின் கண்கள் தாமரையின் பின்னால் அலைந்து கொண்டிருந்தன. அவன் பார்வை அவளைக் காவல் காத்தது.

முதலில் முத்துராமனின் திருமணத்திற்கு கதிரேசன் வருவதாகவே இல்லை. அவர்கள் வீட்டிலிருந்து கலியாணம் சொன்ன பொழுது பேர், பேராகக் கூப்பிட்டார்கள். தெய்வானை ஆச்சி, மிக நெருங்கிய வட்டத்தில் விசேஷம் என்றால் மட்டும் போய் வருவார். வீட்டையும், வள்ளி மெடிக்கல்ஸையும் பார்த்துக் கொள்வதாகச் சொன்னார். மணப்பெண் தேனம்மை, தாமரைக்குச் சொந்தம் எனத் தெரிந்ததும் பதறி அடித்துக் கொண்டு கிளம்பினான்.

"அரசல் புரசலா இந்தப் பய அந்தத் தாமரையைக் கட்டிக்கப் பிரியப்படுறதா சேதி விளுது. நாகப்பனுக்குப் பொண் பார்க்கிற கையோடு, இவனுக்கும் அந்தப் புள்ளையைப் பேசி தனிக்குடியா ஆக்கிப்புட்டா ஏச்சு, பேச்சு கேக்காம கதிரேசனும் பாவம் ஒரு குடியா வாழ்வான்''

வலம்புரி முத்து 9

என தெய்வானை ஆச்சி மனத்தில் முடி போட்டுக் கொண்டார்.

'ஸர்பத்'' என குரல் கேட்டு கதிரேசன் சிந்தை கலைந்தான்.

தாமரை கைகளில் வெளிச்சுவரில் பனி முத்துக்கள் கோத்திருந்த எவர்சில்வர் குவளை ஒன்றை ஏந்தியபடி நின்றிருந்தாள். எலுமிச்சை நிறத்தில் மின்னிய வாழைத்தண்டு கரங்களில் தங்க வளையங்கள் மின்னின.

"எதுக்கு?'' என்றான் கதிரேசன்.

''எங்க தேனம்மை வாக்கப்பட்டுப் போறா. அதைக் கொண்டாட.''

கதிரேசன் கரங்களைச் சேர்த்துக் குவளையைப் பிடித்தான். இளஞ்சூடு பரவியிருந்த கரங்கள். தாமரை பரவசத்தில் தடுமாறிப் போனாள். ஒரு நிமிடம் தான். இயல்பில் ஊறிப்போன கண்ணியத்தின் வேலியான நாணம், அவள் கைகளை உதறச் செய்தது. உதறியதில் குவளை சரிந்து அவன் மேல் சட்டையில் மஞ்சள் வண்ண சர்பத் வழிந்தது.



கதிரேசன் எழுந்திருந்து கை கழுவப் போனான். தாமரையும் பின்னாலேயே தொடர்ந்தாள்.


''மேலல்லாம் மஞ்சத் தண்ணி ஊத்திட்டியே'' என்றான்.

''அது மஞ்சத்தண்ணி இல்லை. ஷர்பத்து.''

"ஏன் படக்குன்னு கையை இழுத்துக்கிட்ட? தொட்டது பிடிக்கலியா?''

"ஆமா! நாம ரெண்டு பேர் மட்டும் தான் இருக்கோமாக்கும்? நல்ல தைரியம் தான் உங்களுக்கு. நாலு பேருக்கு நடுவில

சத்தியப்ரியன்



கையைப் புடிக்க படபடப்பா இல்லியா?"

"தனியா தொடலாங் கறியா?"

"என்ன, பேச்சு ஒரு மாதிரியாப் போவுது?"

"தேவகோட்டை மெய்யனா லேனா சம்சாரம் உமையா ஆச்சி பொண்ணு விசாலாட்சி பொண்ணு, தானே நீயி?" என முழுக்கியபடி ஒரு ஆச்சி கை கழுவும் இடத்திற்கு வரவே, கதிரேசன் குழாயடியில் கைகழுவுபவனைப் போல திரும்பிக் கொண்டான்.

"ஆமாம் ஆச்சி. நீங்க யாரு?"

"தேவகோட்டை வள்ளியப்பன் சம்சாரம் நானு. உங்க ஆத்தாளுக்கு என்னய நல்லாத் தெரியும். நீ இப்பம் என்ன பண்ணுற?"

"கம்ப்யூட்டர் ஸயின்ஸ் முடிச்சிருக்கேன். மேல் கொண்டு படிக்கப் போறேன்."

"கலியாணம் பேசலியா உனக்கு?"

தாமரை பதில் சொல்லாமல் நின்றாள்.

"எதுக்குக் கேட்கறேன்னா, என் அண்ணன் பையன் ஒருத்தன் மெட்ராசுல காலேஜ் லெக்சரரா இருக்கான். இருவத்தெட்டு வயசு ஆகுது. நீங்க என்ன கோவில்?"

"பிள்ளையார்பட்டி ஆச்சி! எனக்கு வெத்தலை பாக்க மாத்தலியே தவிர, வள்ளி மெடிக்கல்ஸ் சிதம்பரம் செட்டியார் மகனுக்கு சம்பந்தம் பேசப் போறாக."

"தெய்வானை ஆச்சி பையன் நாகப்பனுக்கா?"

"இல்லை கடைசிப் பையன் கதிரேசன்."

"லவ்வா?" என்றார் அந்த ஆச்சி விடாமல்.

"அப்படித்தான் வெச்சுக்குங்க."

ஆச்சி, "இந்தக் காலக் குட்டிகளுக்கு ஆனாலும் நெஞ்சுரம் சாஸ்தி அய்யா" என்றபடி நகர்ந்தார்.

"அம்மாடி" என வியந்தபடி கதிரேசன் வெளியில்

வந்தான்.

"எதுக்கு இப்படி ஆச்சரியப்படுறீங்க?"

''லவ்வுன்னு இப்படிப் போட்டு ஒடச்சுப்பிட்டியே.''

"பின்ன இந்த ஆச்சி போனா இன்னொரு ஆச்சி வருவாங்க. எங்க கோவில் வைரவன் கோவில், உங்க கோவில் என்னான்னு வந்து நிப்பாங்க. இப்ப ஆச்சி பிரமாதமா செய்தி பரப்பி, என் ஆத்தா காது வரைக்கும் போயி ஆத்தா வந்து, 'ஏட்டி, நீ வள்ளி மெடிக்கல்ஸ் சிதம்பரம் பையனை லவ்வு பண்றியா'ன்னு கேக்கும்."

"நீ என்ன சொல்லுவ?"

"ந்தா! இன்னொரு ஆச்சி வர்றாங்க" என அவள் சிரிக்காமல் பயமுறுத்தினாள். கதிரேசன் விருட்டென்று கைப்பிடி பக்கம் திரும்பினான். தாமரை முல்லை மொட்டுக்களை வாரிக் கொட்டியது போல ஒரு சிரிப்புச் சிரித்தாள். கதிரேசன் அவளது கேலிக்கு வெட்கப் பட்டான்.

''ஆத்தி! இப்படி ஒரு பயந்தாங் குளியைக் கட்டிக்க மாட்டேன்.''

"அது இல்லை. உங்க ஆத்தா என்னை நீ லவ் பண்றியான்னு கேட்டா, என்ன சொல்லுவ?" என்றான் கதிரேசன் ஆவலாக. அவன் முகம் பொலிவுடன் காணப்பட்டது. தான் காதலிக்கப்படுகிறோம் என்பதைப் போன்ற சந்தோஷம் வேறு எதுவும் இருக்க முடியாது.

"இங்கன சொல்ல மாட்டேன்."

"வேற எங்க?"

தாமரை ஓடிவிட்டாள்.

இசை பிடிமானம் எழுதிக் கொண்டிருந்தார்கள். பெரிய வரிசையில் மொய் எழுதுபவர்கள் காத்துக் கொண்டிருந்தார்கள். பந்தியிலும் கூட்டம் மிகுந்து காணப்பட்டது.

மீண்டும் தாமரையைத் தேடிக் கண்டுபிடித்தான்.

"தாமரை!"

''ம்!''

''கழனிவாசலில் ஒதுக்குப்புறமா ஊரணி ஒண்ணு இருக்குன்னு சொன்னேனே, நிறைய தாமரை பூத்திருக்கும். ஆடு, மாடு மேய்க்கும் இடையர்கள் கால்நடைகளை அழைத்து வரும் ஊரணி. பெரிய ஆலமரமுண்டு. அங்கன வர்றியா?''

"எதுக்கு?"

"என்னவோ சொல்லப் போறன்னு சொன்னியே."

"இங்கன தேடுவாகளே."

"இப்பத்தான் கும்பிட்டுக் கட்டிக்கிறாங்க. மஞ்சள் நீராட்டி, காப்பு கழட்டி, பிள்ளை எடுக்கிக் கொடுத்து, ஓங்க தேனம்மை மாப்பிள்ளை வீட்டுக்குப் போக, மதியம் மூணு மணி ஆயிரும். மணி இப்பம் பதினொண்ணுதான் வா! போயிட்டு வந்துரலாம்."

"ஒண்ணு செய்ங்க, நீங்க ரெண்டு எட்டு முன்னாடி போங்க. நான் ஒண்ணுந் தெரியாதவ மாதிரி பின்னாடி வாரேன்."

தாமரை சொல்லி முடிக்கவில்லை, ''தாமரை! சீக்கிரம் மாடிக்கு ஓடி வா தாமரை'' என உடல் முழுவதும் பதறியபடி, அவளது தோழி ஒருத்தி ஓடி வந்தாள்.


"ஏன் கமலா இப்படி ஓடி வர்ற?"

"நம்ம அரியக்குடி சித்ரா இல்ல, அவ பிள்ளை ரெண்டு வயசுப் பையன் மட,

''மன்னர் சதா ஜலதோசத்துல இருக்காரே... ஏன்?''

''மந்திரிக்கும் அவருக்கும் பனிப்போர் நீடிக்குதே!''

- அம்பை தேவா



"ப்ளஸ்டூவில் நல்ல மார்க் வாங்குற பசங்களோட மேற்படிப்புச் செலவை நம்ம தலைவரே ஏத்துக்கிறதா சொல்லியிருக்காரு."

"நல்ல விஷயமாச்சே. அப்போ ஃபெயிலான பசங்களுக்கு?"

"அவங்களை கட்சிப் பணிக்குச் சேர்த்துக்கறாராம்."

- வி. கிருஷ்ணகுமார்



மடன்னு ஓவர்ஹெட் டாங்க் மேல ஏறிக்கிட்டு, கீழே குதிச்சிடுவேன்னு பயம் காட்டுறான். எல்லாரும் கலங்கிப் போயி நிக்கிறாங்க" என்றாள்.

"பிறகு பார்க்கலாம்" என்று கதிரேசனைப் பார்த்துச் சொல்லிவிட்டு, மாடிக்கு ஓடினாள். கதிரேசனும் பின்னால் தொடர்ந்தான்.

நீர் வழிந்து ஓடும் சுவரின் வழியெல்லாம் பச்சைப் பாசியாய்ப் படர்ந்திருந்தது ஓவர் ஹெட் நீர்த் தொட்டி. வெளிச் சுவரோடு மேல் எழும்பியதும் சுற்றிப் பிடிமானம் இல்லாத தொட்டியின் மேல், அந்தச் சிறுவன் நின்று கொண்டிருந்தான். கார்ட்டூன் நெட்வொர்க் பார்க்கும் எல்லாச் சிறார்களுக்கும் உள்ள குறும்பும், பிடிவாதமும் நிறைந்த முகம். கீழே திருமணத்திற்கு வந்தவர்களில் பாதிப் பேர் பதை பதைப்புடன் நின்றிருந்தனர். தாமரையைத் தொடர்ந்து பின்னால் வந்த கதிரேசனும், நாகப்பனும், திருஞானமும் கூட முன்னால் இருந்தார்கள்.

தாமரை கூட்டத்தை விலக்கிக் கொண்டு முன்னால் போனாள்.

"முன்னப் போகாத தாமரை! கிட்டப் போனாலே கீள குதிச்சிடுவேன்னு பயங்காட்டுறான்."

எச்சரித்த குரலை மீறிக் கொண்டு தாமரை முன்னேறினாள்.

"அவன் தான்" என்றான் நாகப்பன். அவன்தான் என்றது கதிரேசனை.

"அவன்தான்" என்றான் திருஞானம். அவள்தான் என்றது தாமரையை.

தாமரை நீர்த்தொட்டியை நோக்கி நகர்ந்தாள்.

"நா குதிச்சிருவேன்" என்று சிறுவன் பயம் காட்டினான்.

"உன் பேரு என்ன?"

"ஸ்பைடர் மேன்" என்றது சிறு பிள்ளை.

தாமரை புரிந்து கொண்டாள். கார்ட்டூன் உருவங்கள் சிறுவர்களை எந்த அளவிற்கு பாதிக்கிறது என்பது தெரிய, ஆச்சரியப்பட்டுப் போனாள்.

"ஸ்பைடர் மேன் என்ன செய்யப் போறாரு?"

"இங்கேயிருந்து டைவ் அடிக்கட்டுமா?" என்றான் சிறுவன்.

'ஓ' என கூட்டம் மீண்டும் அலறியது. "கூறு கெட்டவ! பிள்ளை விளுந்தா இவளா பதில் சொல்லுவா" என பெரியவர்கள் சிடு சிடுத்தனர்.

"நீ எப்படி ஸ்பைடர்மேனா ஆன?" என்று தாமரை அவனைப் பார்த்துக் கேட்டாள்.

"என்னை ஒரு மாஜிக் சிலந்தி கடிச்சது."

"என்னையும் ஒரு மாஜிக் சிலந்தி கடிச்சது இன்னிக்கு" என தாமரை தன் வலது கையிலிருந்த மருவைக் காட்டினாள்.

"அப்ப நீயும் ஸ்பைடர் மேனா ஆயிடலாம்."

"முடியாதே" என ஒரு சிறுமியின் பாவனையுடன் தலையாட்டினாள்.

"ஏன்?" சிறுவன் குழம்பினான்.

"நான் ஸ்பைடர் வுமனாகத்தானே ஆக முடியும்?"

சிறுவன் இணக்கமானான். தாமரை சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு "நீ எப்படி வெப் வர வெச்ச?" என்றாள்.

சிறுவன் செய்து காட்டி "இப்படி" என்றான்.

அவள் வேண்டுமென்றே விரலை மாற்றிச் செய்து 'ஸ்ஸ்ஸ்' என்று சொல்லிக் காட்டி விட்டு, உதட்டைப் பிதுக்கியபடி "போ! எனக்கு வரவே மாட்டேங்குது" என்றாள்.

"அப்படி இல்லை. இப்படி" என்றான் சிறுவன் ஆர்வம் பொங்க.

"நான் மேல வந்தா சொல்லித் தர்றியா?"

"ஓ!" என்று சிறுவன் பலமாகத் தலையாட்டினான்.

தாமரை வெற்றிக் களிப்புடன் ஓவர் ஹெட் டாங்க் ஏணியில் ஏறி, கொத்தாக சிறுவனைத் தூக்கிக் கொண்டு கீழே இறங்கினாள். சிறுவனின் தாயார் ஓடி வந்து சிறுவனைப் பற்றி இழுத்து அடிக்கப் போனாள்.

"அடிக்காத சித்ரா! பிள்ளைங்கன்னா இப்படித்தான் இருக்கும். நாமதான் கண்பார்வையிலேயே வெச்சிருக்கணும்" என்றாள் தாமரை.

கூட்டம் முழுவதும் தாமரையின் சமயோசிதத்தைப் பாராட்டியது. ஓரிரண்டு விடலைப் பருவப் பையன்கள் ஓடி வந்து, தாமரையை நேருக்கு நேர் பாராட்டினார்கள். தன் காதலி புகழப்படுவதன் கர்வத்தில் கதிரேசன் மிதந்தான்.

உள்ளுக்குள் வியந்து போன இரு ஞானத்திற்கு, ஜில் என்று ரத்தம் உச்சி மண்டையில் பாய, 'மணந்தால் மகா தேவி' ரேஞ்சுக்குப் போய்விட்டான்.

பொறுக்க முடியாமல் "என் குடும்பத்திற்கேற்ற தைரியமான பெண்ணப்பா! என்ன கோவில்னு விசாரியேன்" என அவன் நாகப்பனிடம் கேட்ட கேள்வி, கீழே தாமரையை வழி மறித்த தேவகோட்டை ஆச்சியின் காதில் விழ, "புள்ள எந்தக் கோவிலா இருந்தாலும் பிரயோஜனம் இல்லை. வள்ளி மெடிக்கல்ஸ் சிதம்பரம் செட்டியார் பையனுக்கும், இவளுக்கும் லவ்வாம்" என்றாள்.

நாகப்பனின் மனதில் எந்நேரமும் உறங்காமல் விழித்திருக்கும் பொறாமை எனும் பாம்பு, மீண்டும் தலை தூக்கியது.

(தொடரும்)

ஐம்பது வயது ஹீரோ!



கோடம்பாக்கம் கண்டுகொள்ளாத திறமையாளர்களைத் தேடிப்பிடித்து பயன்படுத்துவதில் கெட்டிக்காரர் இயக்குனர் பாலா. தமது நந்தா படத்தில் ரீஎண்ட்ரி கொடுத்தும் தடுமாறிப் போன ராஜ்கிரண், 'செவ்வேல்' படம் மூலம் மீண்டும் வருகிறார். தெலுங்குப் பட ஹீரோ ஜெய் ஆகாஷ் இவருக்கு மகனாக நடிக்க, படத்தின் ஹீரோ ராஜ்கிரண்தான் என்கிறார் இயக்குனர் பிரிமூஸ். "ராஜ்கிர க்கும் விஜய்காந்துக்கும் ஒரே வயசுதான். ஆனால் விஜய்காந்தை போலவே சூப்பராக ஆக்ஷன் பண்ணக் கூடியவர். அவரை இதுவரை யாரும் முழுமையாக வெளிப்படுத்தவில்லை. அதற்காகவே செவ்வேல்" என்கிறார்.

ஜூன் 30 முதல் ஜூலை 6 வரை

நடக்குமென்பார், நடக்கும்!

அக்னிசர்மா பக்கம்



நடிகை விந்தியாவுக்கு (சிம்மம்) எதிர்ப்புகள் மறையுமாம்

இது நல்ல வாரம்...

கிழமை	தேதி	நட்சத்திரம்	திதி	மற்றவை
புதன்	ஜூன் 30 (ஆனி - 16)	அனுஷம்	திரயோதசி	பிரதோஷம்
வியாழன்	ஜூலை 1 (ஆனி - 17)	கேட்டை	சதுர்த்தசி	-
வெள்ளி	ஜூலை 2 (ஆனி - 18)	மூலம்	பௌர்ணமி	சாதுர்மாஸ்ய விரத ஆரம்பம் காரைக்கால் அம்மையார் மாங்கனி விழா
சனி	ஜூலை 3 (ஆனி - 19)	பூராடம்	பிரதமை	முழுவதும் சித்த யோகம்
ஞாயிறு	ஜூலை 4 (ஆனி - 20)	உத்திராடம்	துவிதியை	சுபமுகூர்த்தம் காலை 7 - 8.30 சுகப்பிரம்ம மகரிஷி ஜயந்தி
திங்கள்	ஜூலை 5 (ஆனி 21)	திருவோணம்	திருதியை	சங்கடஹர சதுர்த்தி சுபமுகூர்த்தம் காலை 9 - 10.30
செவ்வாய்	ஜூலை 6	அவிட்டம்	சதுர்த்தி	-

மேஷம்: பொதுவா, எல்லா கிரகங்களுமே சுப மான பலன்களைத் தரக் கூடியவங்களா இருக்கும் போது, ஒண்ணுல மட்டும் இலேசா தகராறு. 4ல் செவ்வாய் நீச்சம் என்பதால் சில பிரச்னைகள், குழப்பங்களைச் சந்திக்க நேரிடும். 'சுவாமி... நீயே துணை'னு மனமுருகி நில்லுங்க. சாந்தமான மன நிலையோட, விட்டுக் கொடுத்துப் போங்க. மலை யாக வந்த பிரச்னைகள், பனியாகக் கரைந்து போகும். அதேபோல, ஆரோக்கிய விஷயத்திலும் கவனம் தேவை. புதிய முயற்சினு எதையும் செஞ்சு வைக்காதீங்க.

ரிஷபம்: எதிர்பார்க்கிற அளவுக்கு ஏற்றமான வாரமா அமையலைன்னாலும், ஒட்டு மொத்தமா

"இப்படி மரம் மாதிரி வளர்ந்திருக்கியே!
உன்னால வீட்டுக்கு ஏதாவது பிரயோஜனம் உண்டா?"
"வீட்டுக்கு ஒரு மரம் வளர்ப்போம்னு
அரசாங்கமே சொல்லுதேப்பா! அரசு
வேண்டுகோளை நிறைவேத்தினதா
நினைச்சு சந்தோஷப்படுங்களேன்!"
- பாஸ்



ஓஹோ வாரம்தாங்க! எடுத்த காரியங்களில் எல்லாம் ஜொலிக்கிற ஜெயம் உண்டாகும். கூட்டுத் தொழிலில் அனுகூலமான திருப்பம் உண்டாகும். மனை, நிலம், வீடு, ரியல் எஸ்டேட் இனத்தில் லாப மழை பொழியும். சனியின் சஞ்சாரம் சற்று சங்கடம் தரும் என்பதால், பேச்சில் கடுமை கூடாது. எல்லோரிடமும் சுமுகமாகப் பழகுவது நல்லது.

மிதுனம்: உங்கள் ராசிநாதன், புதன், ஜூலை 1ம் தேதி முதல் கடக ராசிக்குப் பிரவேசம் என்பதால் எல்லா விதத்திலும் கவனமாக இருக்க வேண்டும். தெய்வ பலத்தை அபிவிருத்தி செய்து கொள்வது மிக நல்லது. சாண் ஏறினால் முழம் சறுக்கும். எல்லோரிடமும் சுமுகமாகப் பேசிப் பழகுவது நல்லது. தெய்வீக ஈடுபாடு, சத்சங்கம் மூலம் மன அமைதி பெறலாம். பொருளாதார ரீதியில் சிக்கல் ஏற்பட்டாலும், தகுந்த சமயத்தில் உதவி வந்து சேரும். கவலை வேண்டாம்.

புத்தகம், பத்திரிகை, எழுத்து துறைகளைச் சேர்ந்தவர்கள் அனுகூலம் அடைவார்கள்.

கடகம்: குருபலம் பூரணமாக இருக்கிறது. சுப முயற்சிகளில் குதூகலமாக ஈடுபடுங்கள். பெயர், புகழ், ஆதாயம் கூட்டவும் இதுதான் நல்ல சமயம். ஏற்றுமதி - இறக்குமதி தொழில்கள், அள்ளி அள்ளி லாபம் தரும். சினிமா, சங்கீதம், நாடகம் போன்ற கலைத் துறைகளைச் சேர்ந்தவர்கள் சுபிட்சம் அடைவார்கள். பெண்களுக்கு புதிய பொருள் சேர்க்கை, ஆரோக்கிய மேன்மை, சரளமான பணவசதி, தெய்வீக ஈடுபாடு உண்டாகும்.

சிம்மம்: உத்தியோகத்தில் அமைதியான சூழ்நிலை உண்டாகும். வியாபாரத்தில் அதற்கு நேர் எதிர். சிறு சிறு தடைகள் ஏற்பட்டு, டென்ஷன் ஏற்றும். என்றாலும் யாரோ கை கொடுத்துத் தூக்கிவிட, பிரச்னைகள் உடன் நிவர்த்தியாகும். சுய தொழில் வியாபாரத்தில் நல்ல முன்னேற்றம் உண்டாகி, வயிற்றில் நாலரை பால் வார்க்கும். பெண்களுக்கு எடுத்த காரியங்களில் வெற்றி ஏற்படும். எதிர்ப்புகள் மறைதல், புதியவர்கள் அறிமுகம், எதிர்பாராத பணவரவு, தெய்வீக ஈடுபாடு என நல்ல பலன்களே தொடரும். மனம் மகிழ்ச்சியில் ஒளிரும்.

கன்னி: அடடா! கன்னிராசி அன்பர்களுக்கு, ஜாலியான வாரமாக அமையப் போகுது. உறவினர் வருகை, விருந்து, உபசாரம், வேடிக்கை, கேளிக்கை என சுவாரசியமாகப் பொழுது போகும். பெண்களுக்கு புதிய பொருள் சேர்க்கை உண்டாகும். வியாபாரிகளுக்கு வசமான வாரம்! ரெடிமேடு, ஜவுளி, ஃபர்னிச்சர் வகையில் அனுகூலமான பலன்கள் ஏற்படும். கலைத்துறையைச் சேர்ந்தவங்களுக்கு, புதிய ஒப்பந்தம் தேடி வரும். காவல், இராணுவம், சட்டம் துறைக்காரர்களுக்கும் நேரம் பிரமாதமாக இருக்கும்.

துலாம் : உத்தியோகஸ்தர்களுக்கு ரொம்ப சிறப்பான வாரம்னு ஆரம்பத்திலேயே சொல்லிடறேன். பதவி உயர்வு கிடைக்கும்; வேண்

டிய இடத்துக்கு பணி மாற்றம் வரும்; மேலதிகாரிகள் பாராட்டும், சக ஊழியர்களின் ஒத்துழைப்பும் உங்களை உற்சாகக் கடலில் நீந்த வைக்கும். புதியவர்கள் அறிமுகமானால், ரொம்ப ஈஷிக்காதீங்க! குறிப்பாக, பணம் கொடுக்கல் - வாங்கல் விஷயத்தில் கொஞ்சம் எச்சரிக்கையாக இருப்பது ரொம்ப அவசியம். பெண்களுக்கு புனித ஸ்தல யாத்திரை, ஆரோக்கிய மேன்மை உண்டாகும். வியாபாரிகளுக்குக் கடன் தொல்லை மறையும். கையிருப்புக் கூடும்.

விருச்சிகம்: தள்ளிப் போய்க் கொண்டிருந்த சுப காரியங்கள், தற்போது சொடுக்குப் போடும் நேரத்தில் சௌகரியமாக நிறைவேறும். குரு பார்வை மிகவும் அழகுற உங்கள் மீது படுவதால் இனி 'ஏறு... முன்னேறு... வெற்றி என்பது கண்கூடு' என்று 'கில்லி' விஜய் மாதிரி பாடலாம். முடிந்தால் ஆடலாம்! உடன் பிறந்தவர்கள் அனுகூலமாக இருப்பார்கள். எதிர்பார்த்த நல்ல செய்தி வந்து சேரும். பெண்களுக்கு இதுவரை இருந்து வந்த மனக் குழப்பங்களும், பணக் கஷ்டங்களும் தீர்ந்து புன்னகை மன்னிகளாக வலம் வருவார்கள்.

தனுசு: ஒத்தையா இருக்கிறவங்க, இரட்டையா ஆவாங்க! ப்ளஸ் ஒன் ஆ இருக்கிறவங்க, ப்ளஸ் டூவா ஆவாங்க. புதிர் மாதிரி பலன் சொல்றதைவிட, திருமணம் ஆகாதவங்களுக்கு அதற்கான அருமையான வாய்ப்பு கிடைக்கும். திருமணம் ஆனவங்களுக்கு மக்கட்பேறு பாக்கியம் கிடைக்கும்னு விரிவாகச் சொல்லிடலாம். வீடு, வாகனம் வாங்க அருமையான சமயம். குரு, சுக்கிரன் சஞ்சார பலமிருக்கு. அதை நல்லபடியா பயன்படுத்திக்கோங்க. அலுவலகத்தில் கொஞ்சம் டென்ஷன் ஏற்றி, காதில் புகையை வரவழைப்பாங்க. அமைதியா இருந்து காரியம் முடிங்க.

மகரம்: "ஒண்டிக்கு ஒண்டி... இரண்டுலே ஒண்ணு பார்த்துடலாம்" என்று சண்டைக் கோழியாகச் சிலிர்த்துக்கிட்டு நின்ன, எதிரிங்கக்கூட, "ஸாரி பாஸ்.." என்று கை குலுக்கிவிட்டுப் போகிற ஸ்டேஜ் வந்தாச்சு! கோர்ட், வழக்கு என நீண்ட நெடிய நீதிமன்றப் படிகள் ஏறி களைத்துப் போனவர்களுக்கு, அனுகூலமான திருப்பம் உண்டாகும். ஏழில் செவ்வாய், புதன் சஞ்சாரம் என்பதால் கணவன் - மனைவி உறவில் இலேசான விரிசல் ஏற்படலாம். விட்டுக் கொடுத்து, அனுசரிச்சுப் போங்க. பெண்களுக்கு தெய்வீக ஈடுபாடு அதிகமாகும்.

கும்பம்: சனி பகவான் ஐந்தாம் இடத்தில் பூர்வ புண்ணிய ஸ்தானத்தில் சூரியனுடன் சஞ்சாரம் செய்கிறார்! இது நல்லதொரு அமைப்பு! உத்தியோகத்தில் மேலும் மேலும் உயர வழி பிறக்கும். உங்கள் திறமைகளை மற்றவர்கள் வியந்து பாராட்டுவார்கள். கூட்டுத் தொழில் செய்பவர்களுக்கும் கணிசமான முன்னேற்றம் காத்திருக்கு. கணவன் - மனைவி பாசத்துடன் இழைவார்கள். உறவினர்களிடையே இதுவரை இருந்து வந்த விரோத மனப்பான்மை மறையும். பெண்களுக்கு எல்லா வகையிலும், அனுகூலமான வாரமிது.

மீனம்: குடும்பஸ்தானத்தை, குரு பகவான் குறுநகை பூக்கப் பார்க்கிறார். வீட்டில் பூப்பந்தல் கட்டி, கெட்டி மேளம் கொட்டப் போறீங்க. குழந்தைப் பேறு இல்லாதவங்களுக்கு, 'ஸ்வீட் நியூஸ்' கிடைக்கப் போகுது. 2ல் ராகு, இருப்பதும் 2ம் இடத்து அதிபதி நீசம் ஆவதும், அவ்வளவு நல்ல விஷயமில்லை. கைப் பொருளுக்கு ஆபத்து வரலாம். இரவுப் பயணங்களில் கண்டிப்பாக கவனம் தேவை. நவக்கிரக சாந்தி, ஹோமம், குல தெய்வப் பிரார்த்தனை மன அமைதி தரும்.



''அடியே, ராசரத்னம்! எங்க சுருக்குப் பையை நீட்டு பார்ப்பம்; ஒரு தடவைக்கு வெற்றிலை எடுத்துக்கறேன்..''

''இன்னுமாடி நீ வெற்றிலை பழக்கத்தை விடல...? இந்தச் சுருக்குப் பைல செல்ஃபோன்ல வைச்சிருக்கேன்!''

- விருதை ராஜா


காணும் பொருளெல்லாம் கண்ணன்!

'அலிப்பூர் சிறைவாசத்தின்போது சக குற்றவாளிகளான விவசாயி, கருமான், குயவன், பள்ளன், பறையன் இவர்களுடன் கூடவே வாழ்ந்து, உணவருந்தி, அதே கஷ்டங்களையும் சலுகைகளையும் அனுபவித்து, அனைவர் உள்ளத்திலும் இறைவன் வசிக்கிறான் என்பதை அறிந்தேன். இந்த சோஷலிசமும், ஒற்றுமையும், தேச முழுதும் பரவிய சகோதரத்துவமும் எனது வாழ்வின் விரதத்தின் மீது தங்கள் முத்திரையைப் பொறித்தன... தேசத்தின் பல தரத்தினரும் சகோதரர்கள் என்ற உணர்ச்சியில் ஒரே மனத்தினராக தலை நிமிர்ந்து நிற்கும் நன்னாளின் வரவை, எனது சிறைவாசத்தின்போது உணர்ந்து மகிழ்ச்சியும் புளகாங்கிதமும் அடைந்தேன்.'

('எனது சிறைவாசம்' என்ற நூலில் ஸ்ரீ அரவிந்தர்)

காலையில் எழுந்தார் அரவிந்தர். பக்கத்தில் பார்த்தார். கண்ணனைக் காணோம். எங்கே போனான் மாயக் கண்ணன்? கண்ணா! கண்ணா! அழைத்தவாறே எதிரே பார்த்தார். ஆகா! சிறையின் கன்னங்கரிய இரும்புக்கம்பி ஒவ்வொன்றும் உருமாறி, நீல நிற வாசுதேவனாக ஒளிவீசிக் கொண்டிருந்தது. ஏராளமான வாசுதேவர்கள்... அவர் விழிகளில் ஆனந்தக் கண்ணீர்...

வெண்ணையுண்ட கண்ணன் மண்ணையுண்டானே!



அப்போது வாயைத் திற என அதட்டிய யசோதை, அவன் வாய்க்குள் தெரிந்த காட்சியைப் பார்த்து, தானும் ஆச்சரியத்தில் வாயைப் பிளந்தாள். அகிலம் முழுதும் அவன் வாய்க்குள்! அவன் வாய்க்குள்ளும் ஒரு கோகுலம். அங்கும் ஒரு கண்ணன். அவன் வாயைத் திறக்க, அதைப் பார்த்துக் கொண்டிருந்தாள் அங்கே இன்னொரு யசோதை! எங்கும் நிறை பரப்பிரம்மத்தை உரலில் கட்டி, வாய்பொத்தி, கெஞ்ச வைக்குமளவு தவம் செய்த யசோதைக்கு, மாயக் கண்ணனின் லீலை கண்டு தலை சுற்றியது.

குருவாயூரப்பன் மேல் பக்தி பூண்டு



106 வயது வரை வாழ்ந்தார் மேல் புத்தூர் நாராயண பட்டத்திரி. தம் குரு அச்யுத பிஷாரடியின் வாத நோயை யோக பலத்தால் தாம் வாங்கிக் கொண்டு அவரைக் குணமாக்கினார். குருவாயூரப்பன் சன்னிதியில் நாராயணனுடன் நேரில் பேசுவதாகவே அமைத்து, நாராயணனையே முன்னிலைப்படுத்தி, 1036 சுலோகங்களில் நாராயணீயம் பாடினார். வாத நோயை பக்தியால் குணப்படுத்திக் கொண்டார். அந்த நூலில் கண்ணனது ராசலீலையைக் கவி வர்ணிக்கும் அழகுக்கு உலக இலக்கியத்தில் ஒப்புமை காண இயலுமா! நாராயணீயத்தின் ஒவ்வொரு சுலோகமும் ஒரு கல்கண்டு அல்லவா! 'கேசபாச த்ருத பிஞ்ச்சிகா விததி ஸஞ்சலன் மகர குண்டலம்' என வரும் அந்த ராசலீலை உத்சவத்தில், ஒரே கண்ணன் நூற்றுக் கணக்கான கண்ணன்களாக யமுனைக் கரையில் உருக் கொள்கிறானே!

தன் மாயங்களைக் காட்ட அப்போது யசோதையையும் கோபிகைகளையும் தேர்ந்தெடுத்த கண்ணன், இப்போது அரவிந்தரைத் தேர்ந்தெடுத்தான். ஆணவத்திற்குப் பதில் சொல்ல தூணிலிருந்து நரசிம்மமாய் வெளிப்பட்டவனுக்கு, அன்புக்கு பதில் சொல்ல சிறைக்கம்பியில் வாசுதேவனாய் வெளிப்படுவதா பிரமாதம்!

தெய்வத்தை நேரில் பார்க்க முடியும் என்ற வேத உண்மையை நம்பிச் சாதனைகள் செய்த அரவிந்தரிடம், சிறையில் தெய்வம் தன்னை நேரடியாக வெளிப்படுத்திக் கொண்டது. அரவிந்தர் தம் உச்சந் தலையிலிருந்து உள்ளங்கால் வரை, உடலின் ஒவ்வொரு அணுவையும் மனத்தின்

திருப்பூர் கிருஷ்ணன்

ஒவ்வொரு துகளையும் இறைவனுக்கு ஒப்புக் கொடுத்தார். முழுமையிலும் முழுமையாய்த் தம்மை அர்ப்பணித்தார். பரிபூரணனுக்கே தம்மைப் பூரணமாய் அடிமை செய்தார். நிற்பதுவும், நடப்பதுவும், பறப்பதுவும் சொப்பனமா, இல்லை, தோற்ற மயக்கமா என்று அவருக்குத் தெரியவில்லை. இந்த உலகில் இருந்துகொண்டே சிறைக்குள் வேறு ஓர் உலகை நிர்மாணித்துக் கொண்டார். அவர் நிர்மாணித்துக் கொண்ட அந்த உலகம், இந்த உலகைவிட இன்னும் அதிக சத்தியமானது. சொல்லப் போனால் அதுவே நிரந்தரமான சத்தியம்.

ஓராண்டு சிறையில் அவர் செய்த சாதனைகள் ஒன்றா இரண்டா! விவேகானந்தர் சூட்சும உருவில் வந்து பல விஷயங்களை போதித்தார். தியானத்தின்போது, இரு வார காலத்திற்கு விவேகானந்தரின் குரலைக் கேட்டார் அரவிந்தர். ஆன்மிகப் பாதையின் ஒரு படி நிலையில் குறிப்பிட்ட ஒரு ஞானத்தை அவர் அடையும் வரை, விவேகம் நிறைந்த அக்குரல் அவரது செவிகளில் அறிவுறுத்திக் கொண்டே இருந்தது. அந்த ஞானத்தை அவர் அடைந்த பின் குரல் நின்றுவிட்டது. அதிமனம் நோக்கிச் செல்லும் சூட்சுமப் பாதை பற்றி முதலில் அரவிந்தருக்குக் குறிப்புக் காட்டியவர் விவேகானந்தர்தான். (பின்னாளில் மோதிலால் ராய் என்ற அன்பருக்கு அரவிந்தர் எழுதிய கடிதத்தில் 'நாம் ராமகிருஷ்ணர் வழியில் தோன்றியவர்கள். என் விஷயத்தில் ஸ்ரீராமகிருஷ்ணர்தான் சிறையில் நேரில் வந்து, இந்த யோகப் பாதையில் என்னைப் போகச் செய்தார்' என எழுதியிருக்கிறார். அரவிந்தருக்கு குருதேவரின் அருளும் கிட்டியது) அவருக்கு இறைவனாலேயே பல சாதனைகள் கற்பிக்கப்பட்டன. அவனருளாலே அவன் தாள் வணங்கி, அவனைக் கண்டவர் அவர். கண்கண்ட தெய்வம் என்கிறோமே! உண்மையிலேயே கண்ணன், அவர் தம் கண்ணால் கண்ட தெய்வம். தெய்வ தரிசனத்தையே நேரில் அடைந்த பிறகு, அடைய வேண்டிய அதனினும் மேலான பேறு வேறு என்ன உண்டு! அவர் எல்லாவற்றிலும் தெய்வத்தைக் காணவும், எல்லாவற்றையும் தெய்வமாகவே காணவும் தொடங்கினார்.

பரமஹம்சர் தம் அடியவர்களின் மனத்தை வெளியிலெடுத்து, களிமண் பிசைவதுபோல் பிசைந்து தாம் விரும்பியவாறு உருவாக்கி, மறுபடியும் அந்த மனத்தை அவர்கள் உடலுக்குள்ளேயே வைத்துவிடுவார் என்று சொல்வதுண்டு. ஏறக்குறைய அதே போன்ற நிகழ்ச்சி, அரவிந்தர் சிறை வாழ்விலும் நடந்தது. டாக்டர் டேலி மனமும், போலீஸ் சூப்பரின்டெண்ட் மனமும் தானாய் மாறின. அவர்கள் தினமும் அரவிந்தரின் அறைக்கு வந்து பேசி விட்டுச் செல்வார்கள். அரவிந்தர் அதிகம் பேச மாட்டார். ஏதோ இரண்டொரு வார்த்தைகள். கேட்ட கேள்விக்கு பதில். அவ்வளவே.

அவர் பேச்செல்லாம் கண்ணனுடன் மட்டும்தான். கண்ணனைக் கொஞ்சவும், அவன் மழலை மொழிகளைக் கேட்கவும், அவன் புல்லாங்குழலில் மயங்கவுமே நேரம் போதவில்லையே! இப்போது சில நாளாய் அவன் வாலிப வடிவில் வந்து கீதையைப் போதிக்கிறான். அதை முழுமையாகப் புரிந்து கொண்டாக வேண்டும். யாராவது வந்தால் அந்த மாயக்கண்ணன் மறைந்து விடுகிறான். தெய்வ தரிசனம் கிட்டுமுன், சிறையின் தனிமை அவரை வாட்டியதுண்டு. ஆனால் இப்போது யார் வந்தாலும் கிருஷ்ணபக்தி தடைப்படுகிறதே என மனம் சிணுங்கியது.

டாக்டர் டேலிக்கும் சூப்பரின்டெண்ட்டுக்கும் என்ன தோன்றியதோ! பின்னாளில் தெய்வமாய் மலரவிருக்கும் ஒரு மகானின் பூர்வீக வாழ்வு, அந்தச் சிறை வாழ்வு. அது சிறையல்ல. அரவிந்த ரிஷியின் ஆசிரமம். கண்ணன் காட்சி தந்த புனித வைபவத்தால் அது கோயிலும் கூடத்தான்.

டேலி ஒருநாள் சொன்னார்: "நீ நாள் முழுவதும் ஒரு சிறிய அறையில் அடைபட்டுக் கிடப்பது சரியல்ல. உன் அறைக்கு வெளியில் காலையிலும் பிற்பகலிலும் நீ

அருள்வாக்கு

'மனிதர்களுக்குச் சேவை செய்வதே பகவானுக்குச் செய்கிற பூஜை. தனியாக பகவத் தியானம், பூஜை எதுவும் வேண்டாம்' என்று சொல்பவர்கள் இருக்கிறார்கள். இவர்களில் சிலர் கோயில்கள் முதலிய வழிபாட்டிடங்கள் வேண்டியதில்லை என்றும், அவற்றை வைத்திய சாலைகளாகவும் பள்ளிக்கூடங்களாகவும் மாற்றிவிட வேண்டும் என்றும் சொல்

கிறார்கள். மனிதர்களுக்கு ஆறுதல் தருவது, நோய்ப் பிணி போக்குவது, கல்வியறிவு தருவது எல்லாம் பரம உத்தமப் பணிதான். அதில் பகவான் நிச்சயமாகப் பிரீதி அடைகிறான் என்பதும் ரொம்ப உண்மைதான். ஆனால் யோசித்துப் பார்க்கும்போது 'மனிதசேவையே பகவத் சேவை' என்பதையே திருப்பி வைத்துச் சொல்வதும் ரொம்ப உண்மை என்று தெரிகிறது. அதாவது பகவத்சேவை செய்வதும் மனிதர்களின் நன்மைக்காகத்தான் என்று தெரிகிறது. அதுவே மற்ற சமூக சேவைகளைவிட மனிதனுக்கு நிரந்தர நலனைத் தருவது மாகும்.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய ஸ்வாமிகள்



உலாவுவதற்கு, உதவி சூப்பரின்டெண்ட் மூலம் பெரிய துரையை சம்மதிக்க வைத்து விட்டேன்!"

இது கைதிகளில் அவருக்கு மட்டும் கிட்டிய சலுகை. ஒரே அறையில் அடைந்து கிடந்தவருக்கு, அந்த அறைக்கு வெளியே சிறிது தூரம் உலாவ அனுமதி. ஒரு பக்கத்தில் சிறைத் தொழிற்சாலைகள், மற்றொருபுறம் மாட்டுக் கொட்டகை. இவற்றினிடையே காலையிலும் பிற்பகலிலும் நடக்கலானார். ஓரிரு மணி நேரங்கள் இதனால் அறைக்கு வெளியே இருக்க முடிந்தது.

மேலும் கீழும் நடந்தவாறே உபநிடதங்களின் சக்தி வாய்ந்த மந்திரங்களை உள்ளுணர்வு பொங்க உச்சரிப்பார். மந்திரங்களின் பொருளை ஆழ்மனத்திற்குக் கொண்டு செல்வார். மந்திரத்தின் ஒலி மயமாகவும், பொருள் மயமாகவும், அவர் உடலும் மனமும் மாறத் தொடங்கும். எங்கும் இறைவனைக் காண முயல்வார். சிறையின் குறுகிய அறை கண்ணனது திருக்கரங்களாக அவரைத் தழுவிக் காப்பது அவருக்குத் தெரிந்தது. சுவர் முழுதும் கண்ணனது கருணையாய் அவர் மேல் கவிந்து, அவரைக் காத்துக் கொண்டிருந்தது. மரங்கள், மலர்கள், விலங்குகள் எல்லாவற்றிலும் கண்ணன் தான் கண்ணுக்குத் தெரிந்தான். எல்லா நேரத்திலும் யாரோ அவரை மடியில் வைத்துக் கொண்டு, பரிவோடு பாதுகாப்பது போல் தோன்றியது. 'என் கண்ணை மறந்துன் இரு கண்களையே என்னகத்தில் இசைத்துக் கொண்டு, நின் கண்ணால் புவியெல்லாம் நீயெனவே நான் கண்டு நிறைவு கொண்டு 'கோவிந்தனைச் சரணடைந்து வாழும் வாழ்வு' அவருக்குத் தன்னியல்பாயிற்று. 'ஸர்வம் கிருஷ்ண மயம் ஜகத்' என்று சொல்லப்படும் தத்துவத்தின் சாரத்தை, அவர் வாழ்வியலில் சகஜமாக உணரலானார்.

சாரி சாரியாகச் செல்லும் எறும்புகளை கவனித்துப் பார்த்தார். ஆகா! சின்னச் சின்னதாக எத்தனை கிருஷ்ணர்கள்! வானில் உல்லாசமாய்ப் பறந்து செல்லும் பறவைகளைப் பார்த்தார். இறக்கை முளைத்துக் கிருஷ்ணர் பறந்து செல்லும் விந்தைதான் என்ன அழகு! மரத்தைப் பார்த்தார். யமுனா தீரத்தில் யாதவர் குலம் செழிக்க கான மழை பொழிந்த கண்ணன், அந்த மரத்தின் கீழே நின்று கொண்டு குழலூதினார். இலைகளெல்லாம் குட்டிக் குட்டிக் கிருஷ்ணர்களாய் மரத்திலிருந்து தொங்கிக் கொண்டிருந்தன. கிருஷ்ணர் நீராய் அவரைக் குளிப்பாட்டினார். நெருப்பாய் உடலுக்குச் சூடு தந்தார். தீக்குள் விரலை வைத்தால், நந்தலாலாவைத் தீண்டுமின்பம் தோன்றியது அவருக்கு.

சுதந்திரப் போரில் ஈடுபட்ட போது அவரிடம் மிகுந்திருந்த ரஜோ குணம் மெல்லக் குறையத் தொடங்கியது. சிறை வாழ்வின் ஆன்மிக அனுபவங்களால் அவரிடம் சத்துவ ஞானம் மிகலாயிற்று. "அலிப்பூர் சிறைவாசத்திற்குப் பின் ஸ்ரீ அரவிந்தர் சுதந்திரத்திற்காகப் போராடும் தியாகி அல்ல. இறைவனை நேரில் தரிசித்த யோகி! பண்டைக்கால இந்திய மகரிஷிகளின் வாரிசு!" என வியந்தார் விவேகானந்தரின் சிஷ்யையான புகழ் பெற்ற வெளிதேசப் பெண்மணி. பின்னாளில் பாரதியாருக்கும் பெண்ணுரிமையை இனங்காட்டிய அந்தப் பெண்மணி...

(அமுதம் பெருகும்)



கல்யாண விருந்தில்

நிகழ்ச்சி தொடக்கம் ஐந்து முப்பது மணிக்கு. ஆனால் மணி மணியாக மாலை நான்கு மணிக்கே குவியத் தொடங்கினார்கள் புதுவை பெருமக்கள். நிகழ்ச்சி தொடங்க நேரமிருந்ததால், கம்பன் அரங்க வளாகத்தில் குடை விரித்திருந்த கொன்றை மர நிழலில், போடப்பட்டிருந்த ஃபைபர் சிம்மாசனங்களில் பாந்தமாய் அமர்ந்து கொண்டு, ஆங்காங்கே குட்டிப் பட்டி மன்றங்களை நடத்திக் கொண்டிருந்தார்கள். இவர்கள் ஆவலோடு எதிர்பார்த்து வந்திருந்தது ஜூன் 20ம் தேதி **கல்கி - கல்யாணமாலை** இணைந்து வழங்கிய **'கல்யாண விருந்து'** சூப்பர் ஜோடிகளின் அனுபவப் பரிமாற்றப் பட்டிமன்றத்துக்கு.











• பணிவு அணி



• புதுவை கல்வி அமைச்சருடன் கல்யாண மாலை மோகன்

விருந்தைத் தொலைக்காட்சிக்காகப் படம் பிடிக்கத் தயாராய் காமெராக்களை நிறுத்தி வைத்துக் காத்திருந்தது விஷன் டைம் குழு. கல்யாணமாலை நிகழ்ச்சி இயக்குனர் மீரா நாகராஜன் ஹெட்













• நடுவர்






• துணிவு அணி

போன்களுடன் அமர்ந்திருந்தார்.

பார்வையாளர்கள் குடும்பம் குடும்பமாக வந்திருந்ததால், ஏதோ குலதெய்வக் கோவில் கொடை விழா போல களை கட்டியது கல்யாண விருந்து. புதுவை முத்தையால்பேட்டை அப்துல் கனி தம்பதியர் தமது இரண்டு மகள்களோடு நிகழ்ச்சிக்கு வந்திருந்தார். "தாத்தா, அப்பாவில் தொடங்கி, எங்கள் குடும்பத்தில் அத்தனை பேரும் கல்கி வாசகர்கள்... அதிகம் குடும்பங்களை உருவாக்கும் கல்யாண மாலையும், குடும்பப் பத்திரிகை கல்கியும் இணைந்து நடத்தும் இந்த இனிய விழாவை எப்படித் தவற விடுவது!" என்று இன்ப அதிர்ச்சி தந்தார் அப்துல்கனி.

கலகல ஜோடிகள்!




விழுப்புரத்திலிருந்து சளைக்காமல் வந்திருந்தனர் கல்கியின் சந்தாதாரரான கே.ஏ. முகமது அலி குடும்பத்தினர். அனைவரையும் வரவேற்க பாண்டிச்சேரி மற்றும் சுற்று வட்டாரப் பகுதிகளின் கல்கி முகவர்கள் ஆஜர்!


அத்தனை பெரிய கம்பன் அரங்கத்தின் ஒட்டுமொத்த இருக்கைகளும் நிரம்பி

'வழிய, சரியாக ஆறு மணிக்கு மைக் பிடித்து நிகழ்ச்சியை ஆரம்பித்தார் புன்னகை மன்னன் கல்யாண மாலை மோகன். "அனைவருக்கும் மனசாந்தி அளிக்கும் ஊர். அரவிந்தரும், அன்னையும் அருளாட்சி செய்யும் புனித மண். இங்கே சித்தர்கள் வாழ்ந்திருக்கிறார்கள். கவிச்சித்தர்கள் பாரதியும், பாரதிதாசனும் வாழ்ந்திருக்கிறார்கள்.

"இத்தனை சிறப்புகள் மிக்க புதுவையில் கல்யாண மாலை நிகழ்ச்சியை, இரண்டாவது முறையாக நடத்துகிறோம். இந்த முறை, எல்லா வயதினருக்கும் ஏற்ற இனிய பத்திரிகையாக புதிய பரிமாணத்தில் பட்டையைக் கிளப்பும் கல்கியுடன் சம்பந்தம் செய்து கொண்டிருக்கிறோம். இது சூப்பர் சம்பந்தம்'' என்றதும் அரங்கமே கைதட்டலில் அதிர்ந்தது.



கல்யாண விருந்தின் முதல் வைபவமாக, குத்து விளக்கு ஏற்றி நிகழ்ச்சியைத் தொடங்கி வைத்தார், புதுவை மாநில அரசின் கல்வி மற்றும் சுற்றுலாத் துறை அமைச்சரான கே. லக்ஷ்மி நாராயணன். இவரைப் போலவே பல பிரபலங்கள் குத்துவிளக்கேற்றி, நிகழ்ச்சிக்குப் பெருமை சேர்த்தனர். புதுவை தமிழ்ச் சங்கம் சார்பாக, பாவேந்தர் பாரதிதாசனின் மகனான மன்னர் மன்னன், தமது மகன் பாரதியோடு முதல் வரிசையில் அமர்ந்து நிகழ்ச்சியை ரசித்தார். களை கட்டியது சூப்பர் ஜோடிகளின் அனுபவப் பட்டிமன்றம்.



✶ மன்னர் மன்னன்

கடந்த ஜூன் பதிமூன்றாம் தேதி, பதினெட்டு சூப்பர் ஜோடிகளை நேர்காணலுக்கு அழைத்து - அவர்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட நான்கு ஜோடிகளை, அனுபவப் பரிமாற்றப் பட்டிமன்றத்துக்குப் பேச்சாளர்களாக அழைத்திருந்தார்கள். வாழ்க்கையில் வெற்றி பெற பணம், படிப்பு, பதவி, பக்தி ஆகிய நான்கும் தேவை. இந்த நான்கிலும் வெற்றி பெறத் தேவை பணிவா? துணிவா? என்பதுதான் தலைப்பு. மதுரை மீனாட்சி கல்லூரியின் பேராசிரியர் மு. ராமச்சந்திரன் நடுவர் பொறுப்பினை ஏற்றுக் கொள்ள, சூப்பர் ஜோடிகளின் வாதங்களைத் தொகுத்து வழங்க, ஓர் அணிக்கு ஒருவர் வீதம் வந்திருந்தனர், பேராசிரியர் இந்திரா ஜெயச்சந்திரன், பேராசிரியர் பழனி சிங்காரவேலு இருவரும்.

முதல் மேடையில், தேர்ந்த பேச்சாளர்கள் போல தங்கு தடையின்றி



✶ புதுவை கல்வி அமைச்சர் லக்ஷ்மி நாராயணன்



வெளுத்து வாங்கிய அந்த நான்கு ஜோடிகள், பார்த்தசாரதி - லீலா, அசோக் குமார் - ஜெயந்தி, மணிகண்டராஜன் - மஞ்சுளா, விவேகாநந்தன் - மங்களம்.

“பாரதப் பிரதமராக இருந்த வாஜ்பாய், பெண்கள் சுய உதவிக் குழு அமைத்துச் சாதனை புரிந்த சின்னப்பிள்ளையின் காலில் விழுந்து வணங்கினார். இது அவருடைய பணிவைக் காட்டுகிறது. எவ்வளவு உயரத்திற்குப் போனாலும் பணிவு ஒருவரை மேலும் உயர்த்தும் என்பதற்கு இந்த வரலாற்றுச் சம்பவம் ஓர் உதாரணம்'' என்று பணிவு அணி தாக்குதல் தொடுக்க, சோர்ந்து முடங்கிவிடாமல், "பெண்களைத் திரட்டிச் சாதித்த சின்னப்பிள்ளையின் துணிச்சலை மதிக்கும் விதமாகத்தான் வாஜ்பாய் அவரை வணங்கினார்'' என்று துணிவு அணி பதிலடி கொடுத்தது.

'காந்தியின் பணிவுதான் தேசத்தின் விடுதலைக்குப் பயன்பட்டது' என்று ஒரு அணி கொடி பிடிக்க, 'ஹிட்லரின் துணிவு மனிதப் பேரழிவுக்குப் பயன்பட்டது' என எதிர் அணி பிடி கொடுக்காமல் ஜமாய்த்தது. இப்படி இறுதிவரை சளைக்காத சூப்பர் ஜோடிகள், "நாங்கள் ஒருவரை ஒருவர் முழுமையாகப் புரிந்துகொண்டு, குடும்பத்தைத் திறமையாக நடத்திச் செல்ல, ஒருவரிடம் பணிவும், இன்னொருவரிடம் துணிவும் இருப்பதால்தான் இயல்கிறது. நாங்கள் சூப்பர் ஜோடிகளாக இன்று இந்தச் சபையில் பேசும் வாய்ப்புக் கிடைத்திருக்கிறது'' என்று சொந்த அனுபவங்களை நகைச்சுவைப் பொரியலாகப் பந்தி வைக்க, 'என்ன, இத்தனை வெளிப்படையாக சொந்த விஷயங்களைப் பிட்டுப் பிட்டு வைக்கிறார்களே' என்று வாயடைத்துப் போனார்கள் புதுவை வாசிகள்.

''பகைவர்களைக்கூட நண்பர்களாக்கும் மந்திரக் கோல் பணிவு. அதேபோல் துணிந்தவனுக்குத் துக்கமில்லை. பணிவுக்குப் பங்கம் வந்தால், துணிவு அவசியம். மின்னல் வேகத்தில் துணிந்து சென்று அம்பானது இலக்கைத் தாக்க வேண்டுமானால், வில்லானது பணிந்து வளைந்து கொடுத்தால்தான், நாணில் அம்பை ஏற்ற முடியும். எனவே தனி மனிதனாக வெற்றி பெற, பணியுங்கள். சமூக மனிதனாக வெற்றி பெற, துணியுங்கள்'' என்று அற்புதமான தீர்ப்பை வழங்கினார் நடுவர் பேராசிரியர் ராமச்சந்திரன்.

* அப்துல்கனி குடும்பத்தினர்



முடிவில் அரங்கத்தின் வெளியே மழை பெய்யவில்லை. ஆனால் உள்ளே வெள்ளிக் கிண்ண பரிசு மழை. பார்வையாளர்கள் அத்தனை பேரின் அனுமதிக் கூப்பன்கள், குலுக்கல் முறையில் பட்டிமன்ற நடுவரால் தேர்வு செய்யப்பட்டு, இருபத்தைந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு, சென்னை ஸ்வர்ணாலயா ஜுவல்லர்ஸ் வழங்கிய வெள்ளிக்கிண்ணம் பரிசாக வழங்கப்பட்டது. அடுத்த விருந்துக்கான அறிவிப்பு விரைவில் வரும்.... அது உங்கள் ஊரிலாகக் கூட இருக்கலாம்.

- ஸ்ரீ

படங்கள் : ஜெய்

செய்திகள் திரிப்பது



"ஹ... ஹா... ஹா... ஹி... ஹி... ஹி... ஐயோ! தாங்க முடியலியே! ஹ... ஹ... ஹா..." என்று அடிவயிற்றை இரு உள்ளங்கைகளாலும் பிடித்துக் கொண்டு சிரித்தேன்.

''என்னப்பா, அட்டகாசமா சிரிக்கிறே! என்ன ஜோக்? சொல்லிவிட்டுச் சிரி; நானும் சேர்ந்து சிரிக்கிறேன்'' என்றார் வாஜ்பாயி.

'நீங்க முதல்ல (பட்டது) போதும்! போதும்! மறுமுறை (பதவி) கிடையாது'ன்னு சொன்னப்போ, அது ஜோக்குன்னே புரியலிங்க. மோடிக்கும் அவர் ஆதரவாளர்களுக்கும் சவால் விட்டுப் போர்க்கொடி உயர்த்துவதாகவே நினைச்சேன். ஆனா மறுநாளே பல்டி அடிச்சு, 'நான் பேசினதெல்லாம் ஜோக்'குன்னு நீங்க சொன்னதும், நிஜமாகவே சிரிப்புத் தாங்கலை... ஹி... ஹி... ஹி... ஹ... ஹ... ஹா..."

"அட அசடே! இப்படித் தப்பாப் புரிஞ்சுக்கிட்டியே..." என்றார் வாஜ்பாயி.

திகைப்படைந்து, "என்ன? என்ன!" என்று கேட்டு விழித்தேன்.

"நான் முன்னர் தமாஷ் பண்ணினதா இப்பச் சொன்னேன் பாரு, இதுதான் ஜோக்! ஏற்கெனவே பேசினதுதான் நிஜம்! 'முதல் தடவையா என்னை ரொம்பத் தாக்கிட்டீங்க. எனக்குப் போதும் போதும்னு ஆயிடுச்சு'ன்னு நேற்று சொன்னதுதான் நிஜம்!"

"அப்ப மோடி..."

''அதான் வெங்கையாநாயுடு கிட்டவே சொன்னேனே... 'ரொம்ப ஆழமா தோண்டாதீங்க; தேர்தல் தோல்விக்கான காரணத்தைக் கண்டுபிடிக்க முடியாமயே போயிடும்'னு சொன்னேனே! கண் எதிரே தெரியும் காரணத்தை ஒப்புக் கொள்ள மறுத்துட்டு, மேலே மேலே தேடி தோண்டிக்கிட்டே இருந்தா கிடைக்குமா?''

"இவ்வளவு ஏமாற்றம், எதிர்ப்பு எல்லாத்தையும் பொறுத்துக்கிட்டு ஏன் அங்கேயே தொத்திக்கிட்டு இருக்கணும்? விலகி வந்துட வேண்டியதுதானே?"

''நான் வளர்த்த பி.ஜே.பியை விட்டு, இத்தனை வயசுக்கு மேலே நானே வெளியேற முடியுமா? புள்ளை மதிக்கலேங்கிறதுக்காக அப்பா, குடும்பத்தை விட்டு வெளியேறிடுவாரா? பாசம்பா! வளர்த்த பாசம்!''

சிரித்துக் கொண்டே போனவன், 'ஓ'வென்று தாங்க முடியாமல் அழுது கொண்டே திரும்பி வந்தேன்.

கருணாநிதி கைக்குட்டையை எடுத்து நீட்டினார். "எதுக்குப்பா இப்படி அழுறே? நீ கண்கலங்கி நான் பார்த்ததே இல்லியே..."

"உங்களுக்காகத்தான் ஸார், அழுறேன்!"

"எனக்காகவா? நீ எதுக்கு அழணும்?"

"பாவங்க நீங்க, காவேரில தண்ணீர் வந்துட்டதா தண்டோரா போடாத குறையா அறிக்கை விட்டீங்க. சோனியாவுக்கும், மன்மோகன் சிங்குக்கும் தனித்தனியா நன்றி தெரிவிச்சீங்க..."

''அதுக்கென்ன இப்ப...?''

"மேட்டூர் கால்வாசி கூட ரொம்பாது போலிருக்கே... கபினி, கிருஷ்ணராஜசாகர் எல்லாத்தையும் இழுத்து மூடிட்டாங்களே... பருவ மழையும் ஓய்ஞ்சு போச்சு..."

''தண்ணி வந்த மட்டும் லாபம்னு நினைச்சுக்க வேண்டியதுதான்."

''அப்ப ஒண்ணு செய்யுங்க; ஆயக்கட்டு

உரிமைங்கிறதை கிடப்பிலே போட்டுட்டு, மத்திய அரசு, "காவிரி வடிகால் வாரியம்"னு ஒண்ணு ஆரம்பிச்சு நடத்தட்டும். அதுக்கு வாரியத் தலைவரா உங்களையே போட லாம்!"

"இந்தக் கிண்டலை பிரதமர் கிட்ட போய்ச் சொல்லு" என்றார் கலைஞர்.

மன்மோகன்சிங் ரொம்ப சந்தோஷ மாக இருந்தார். "பார்லிமெண்டில் ஜனாதி பதி உரை மீதான விவாதத்துக்கு நான் பதில் சொல்லி இருக்கணும். நாடாளுமன்றமே சரியா நடக்க விடாம கலாட்டா பண்ணிட் டாங்க. அதனால் ரேடியோ, டிவி மூலம் பேசினேன். எல்லாப் பத்திரிகைகளும் பிரமாதமா பிரசுரிச்சிருக்காங்க... பாரு!"

"எதிர்கட்சிக்காரங்க நாடாளுமன்றம் நடக்கவே விடலைன்னு குற்றம்சாட்டறீங் களே, முன்னே காங்கிரஸ் செய்ததைத்தானே இப்ப அவங்களும் செய்யறாங்க...?"



"எல்லாக் கட்சி களும் ஒத்துழைக்க ணும்னா, அதுல எங் களையும் சேர்த்துத்தான் சொல்லியிருக்கேன்."

"அதை இன்னும் தெளிவா, 'ஏற்கெனவே நாங்க செய்த தப்பை நீங்களும் செய்ய வேணாம்'னு கேட் டிருந்தா, எதிர்கட்சிகள் இப்ப ஒத்துழைப் பாங்க..!"

"அது கிடக்கு, மற்றபடி ஸ்பீச் எப்படி?"

"படிக்க நல்லாத்தான் இருக்கு... முக் கியமா, 'கிராமப்புறங்களை இந்த அரசு கவ னிக்கும்; விவசாயிகளுக்கு உதவும் அரசாக இருக்கும்'னு சொல்லியிருக்கீங்க.. அதுல ஒரு சின்ன திருத்தம்..."

"என்ன?"

" 'தமிழக விவசாயிகள் நீங்கலாக'ன்னு பேசியிருந்தா சரியா இருந்திருக்கும்...!"

"எப்படிப் போனாலும் காவிரிப் பிரச் னையைக் கொண்டு வந்து நுழைக்காம விட மாட்டியே.. கிளம்பு! கிளம்பு! எனக்கு ரொம்ப வேலை இருக்கு" என்றார் மன்மோகன் சிங்.

சென்னைக்கு வந்து சேர்ந்து கராத்தே தியாகராஜன் முன் நின்றேன்.

"எதிர்கட்சியினர் கேட்ட கேள்விக்கு பதில் சொல்லாமல் வாயை அடக்கி, வெளி யேற்றிப்புட்டீங்க. அதே கேள்வியை அவங்க என்னிடம் கேட்டிருந்தா, 'பளிச்'சுன்னு பதில் சொல்லியிருப்பேன்" என்றேன்.

"அப்ப, நான் எதிர்கட்சிக்காரனா ஒரு நிமிஷம் நடிக்கிறேன்" என்ற கராத்தே, கேள்வி தொடுத்தார் : "சமீபத்துலதான் 75 லட்சம் செலவு செய்து நடைபாதை அமைத்த சாலையில், மறுபடி 4 கோடி செலவு பண்ணி நடைபாதை அமைக்க அவசியம் என்ன?"

"ஏனென்றால் அது சர்தார் பட்டேல் சாலை. அந்த வழியாகத்தான் ஆளுனர் மாளிகைக்கு அம்மா போகணும். அம்மா அடிக்கடி அமைச்சர்களை மாற்றி உத்தரவு போடறாங்க. அதை கவர்னரிடம் போய்ச் சொல்லி, அவர் அங்கீகாரம் பெற ணும். அம்மா காரில் போகும் போது கண்ணுக்குக் குளிர்ச்சியா எல்லாம் சுத்தமா இருக்கணும். அத னால் மறுபடி அதற்காக நாலு கோடி செலவழிப்பதில் தப்பே இல்லை!"

"பலே! பலே! நீ ரொம்பத் தேறிட்டே" என்று தட்டிக் கொடுத் தார் தியாகராஜன்!



செம்பியன்!

கண்ணீரில் கலங்கிய பீலே!

பிரேசில் நாட்டின் முக்கிய நகரமான ரியோ டி ஜனெய்ரோவிற்குள் சில நாட்களுக்கு முன் ஒலிம்பிக் ஜோதி எடுத்து வரப்பட்டபோது ஒரு புதிய சரித்திரம் படைக்கப்பட்டது. காரணம், நவீன ஒலிம்பிக்ஸில் தென் அமெரிக்க நாடு ஒன்றிற்கு ஒலிம்பிக் ஜோதி வருவதென்பது இதுவே முதன்முறை.

முப்பத்து மூன்று கட்டங்களைத் தாண்டி, ஒலிம்பிக் ஜோதி ஏதென்ஸிற்கு வரவேண்டும். அதில் ஒன்பதாவது கட்டத்தில் வருகிறது ரியோ நகரம்.

அனைவரும் எதிர்பார்த்தபடி ஒலிம்பிக் ஜோதியைச் சுமந்து செல்லும் கௌரவம், பிரபல பிரேசில் கால்பந்து வீரர் பீலேவுக்கும் கிடைத்தது. ஆனால் யாரும் எதிர்பாராதது, அவர் அந்த ஜோதியைப் பற்றியபோது உடைந்து அழுததுதான்.

"நான் ரொம்பச் சின்ன வயதிலேயே கால்பந்துப் போட்டிகளில் கலந்து கொள்ளத் தொடங்கிவிட்டேன். இதையே என் தொழிலாகவும் கொண்டேன். அதனால் ஒலிம்பிக்ஸில் கலந்து கொள்ள முடியாமல் போய்விட்டது. இந்த வருத்தம்தான் இப்போது அழுகையாக வெளிப்பட்டு விட்டது" என்றிருக்கிறார்.

1900 மற்றும் 1904ல் நடைபெற்ற ஒலிம்பிக்ஸிலேயே கால்பந்துப் போட்டிகள் இடம் பெற்றன. சொல்லப்போனால், 1932ல் லாஸ் ஏஞ்ஜலீஸ் நகரில் நடைபெற்ற ஒலிம்பிக்ஸை விட்டுவிட்டால், தொடர்ந்து கால்பந்து இடம் பெற்று வருகிறது. ஆனால் பல வருடங்களுக்கு அமெச்சூர்களுக்கு மட்டும்தான் (அதாவது விளையாட்டைத் தொழிலாகக் கொள்ளாதவர்களுக்குத்தான்) ஒலிம்பிக்ஸில் பங்கு கொள்ள அனுமதி. சமீப காலமாகத்தான் அமெச்சூர்கள், மற்றவர்கள் என்ற பிரிவினை நீக்கப்பட்டது.

ஆனால் இப்போது வேறு சில நிபந்தனைகள் உண்டு. இருபத்து மூன்று அல்லது அதற்குக் குறைவான வயது கொண்ட



வர்கள் மட்டுமே ஒலிம்பிக்ஸில் கால்பந்துப் பிரிவில் ஈடுபடலாம். என்றாலும், ஒவ்வொரு அணிக்கும் இதில் மூன்று பேர் விதிவிலக்காக இருக்கலாம்.

ஒலிம்பிக்ஸில் பெண்கள் முதன்முறையாக கால்பந்துப் பிரிவில் பங்குகொள்ள அனுமதிக்கப்பட்டது 1996ல் அட்லாண்டா நகரில் நடைபெற்றபோதுதான். வயதைப் பொறுத்த வரை ஆண்கள் பிரிவுக்கு நேரெதிரான நிபந்தனை. குறைந்தபட்சம் பதினாறு வயதான பெண்கள்தான் ஒலிம்பிக்ஸ் அணியில் இடம் பெறலாம். அதிகபட்ச வயது குறிக்கப்படவில்லை.



• பீலே



தொடக்க காலத்தில் கால்பந்து விளையாட்டுக்கு ஏற்பட்ட சுவாரசியமான சோதனைகளை இங்கு நினைவு கூறுவது பொருத்தமாக இருக்கும். பதினொன்காம் நூற்றாண்டில் கால்பந்து மிகவும் புகழ்பெற, இங்கிலாந்து மன்னன் இரண்டாம் எட்வர்ட் "கால்பந்து விளையாட்டு பெரும் நாராசமான சத்தத்தை எழுப்புகிறது. இதனால் தீய ஆவிகள் கிளம்பி தேசத்துக்கு இறைவனின் சாபத்தைப் பெற்றுத் தரலாம். எனவே யாரும் கால்பந்து விளையாட்டை ஆடக் கூடாது என ஆணை பிறப்பிக்கிறேன். மீறுபவர்களுக்கு சிறைத் தண்டனை'' என அறிக்கை வெளியிட்டார்.

1349ல் மன்னன் மூன்றாம் எட்வர்ட் வெளியிட்ட அறிக்கை, ஓரளவு ஏற்றுக் கொள்ளத் தக்கதாக இருந்தது. ''படைவீரர்களுக்கு அவசியப்படும் வில் வித்தையில் மக்களுக்கு ஆர்வம் குறைய, கால் பந்து காரணமாக இருக்கிறது. எனவே கால்பந்து விளையாட்டு தடை செய்யப்படுகிறது'' என்றது அறிக்கை.

என்றாலும், கால்பந்து விளையாடுவதை தடுக்க முடியவில்லை. காரணம் இரண்டாம் ரிச்சர்ட், நான்காம் ஹென்ரி, இரண்டாம் ஜேம்ஸ், எட்டாம் ஹென்ரி போன்ற மன்னர்கள் அடுத்தடுத்து இது தொடர்பாக அறிக்கை விட்டுக் கொண்டே இருந்தார்கள்.

இன்றைய தேதியில் உலகில் அதிகபட்ச நாடுகளில் விளையாடப்படும் பெருமை கால்பந்துக்குத்தான்.

- ஜி.எஸ்.எஸ்.



மானஸ்தன்

கிராமத்துப் பட்டா மணியம் பதவிகளை எம்.ஜி.ஆர். காலத்தி லேயே எடுத்து விட்டார்கள். மானஸ்தன் படத்திலோ, சரத்குமா ரின் தம்பி அப்பாஸ் நவீன பொறியியல் கல் லூரியில் படிக்கிறார். ஆனால் அவரது தந்தை விஜயகுமார், கிராமத்துப் பட்டாமணியமாக இருக் கிறார். கதை எந்தக் கால கட்டத்தில் நடக்கிறது என்ற இயக்குனரின் கன்ஃப்யூஷனை விட்டுவிட்டு கதையை எடை போட்டால், பழைய சிவாஜி படங் களிலிருந்து உருவியது என்ற விடை கிடைத்து விடுகிறது.

பட்டாமணியத்தின் மனைவிக்குப் பிறக்கும் முதல் குழந்தை இறந்து விட, அதை மறைத்து, வேறொரு ஏழைப் பெண்ணின் குழந் தையை இடம் மாற்றி வைத்துவிடும் மாமி யார்க் கிழவி, இந்தப் படத்திலும் உண்டு. அப்படி இடம் மாறி வளரும் குழந்தை யாரென்றால், சரத் குமார். இந்த உண்மை ஒரு கட்டத்தில் பட்டாமணியத் துக்குத் தெரிந்துவிட, அவரது மனசுக்குள் பட்டாசு வெடிக் கிறது. தனக்குப் பிறக்காத, ஆனால், தனது மகன் என்று ஊர் நம்பும் சரத்தை, அடியாட்களை வைத்து கொலை செய்ய முயற்சிக்கிறார். இந்த உண்மை தெரிந்து போய் அப்பாவிடமே நீதி கேட்கும் சரத்தை, வீட்டை விட்டே வெளியே அனுப்புகிறார் விஜயகுமார். வெளியே போ என்று அப்பா சொன்ன ஒரு வார்த்தைக்கே கட்டுப்படும் அவரை, பிறகு ஏன் கொலை செய்ய ஏற்பாடு பண்ணினார் என்பது, இயக்குனரின் இரவல் மூளைக்குத்தான் வெளிச்சம்!

தவிர ஜாதி, கௌரவம் இவற் றில் பிடிப்புள்ளவராக பட்டா மணியத்தை முன்னமே சித்திரிக் கத் தவறிவிடும் இயக்குனர், பின் னால் 'இவன் எந்தக் குலம், கோத் திரத்தில் பிறந்தவனோ' என்று நிராகரிப்பதும் நெருடல்.

சரத்குமார் உணர்ச்சி பூர்வ மாக நடிக்க முயற்சிக்கிறேன் பேர் வழி என்று, எல்லாக் காட்சிகளி லும் உணர்ச்சிப் பிழம்பாகி, படுத்துவது ரோதனை.

தமிழ் தெரியாத கதாநாயகி சாக்ஷி, பாடல் காட்சிகள், வசனக் காட்சிகள் இரண்டிலுமே ஆ...ஓ... என்று வாயை அஷ்டகோண லாக்குவது, படத்தில் வடிவேலு வின் காமெடியை தூக்கிச் சாப் பிட்டுவிடுகிறது.

ஒளிப்பதிவு, இசை, இயக்கம் என்று எதிலும் புதுமை தென் படாத மானஸ்தனை, புறக் கணிக்கிற ரசிகர், உண்மையில் ஞானஸ்தன்.

- விஷுவல்தாசன்

● ஜஸ்ட் பாஸ்


கல்கி வழங்கும்
சென்னை ஸ்கேன்
கல்கி இதழில் ஒரு மின்னல்!
[சென்னை பதிப்புக்கு மட்டும்]


8 பக்கங்கள் 4, ஜூலை 2004 இதழுடன் இலவச இணைப்பு


உச்சாணி

அடையாறு ஆந்திர மஹிள சபா ஆர்தோபெடிக் சென்டருக்கு சென்றால் நம்பிக்கையை டன் கணக்கில் வாங்கி வரலாம். அதனை அள்ளி நமக்குத் தருவது யார் தெரியுமா?

மூளை முடக்குவாதம் எனும் குணப்படுத்த இயலாத நோயால் பீடிக்கப்பட்டிருந்தாலும், நம்பிக்கையின் வில்வடிவமாகக் காட்சியளிக்கும் திரு. நரசிம்மலுதான்! பிரம்மனின் சிற்றத்தால் பாதிக்கப்பட்டிருந்தாலும், 'ஆந்திர மஹிள சபா' போன்ற நல்ல உள்ளங்களின் உதவியுடன், குழந்தைப் பருவம் தொட்டு பராமரிக்கப்பட்டு வரும் நரசிம்மலு(28) தம்மைப் பற்றிக் கூறும் போது,







• நரசிம்மலுவின் படைப்புகள்

முகில்

நம்பிக்கை = நரசிம்மலு!

"இதுவரை மற்றவர்களுடைய பெருதவியுடன் வாழ்ந்து வருகின்றேன். இருப்பினும் பிறரை நம்பி வாழ்க்கை நடத்துவது - பிறருக்கு பாரமாக வாழ்வது ஆகியவை, எனது கொள்கைக்கு முற்றிலும் எதிரானவை. அதன் காரணமாக ஓவியம், எம்பிராய்டரி மற்றும் மல்டி மீடியா போன்ற துறைகளில் எனது திறனை மேம்படுத்தி வருகிறேன். கணிப்பொறியில் எனது கால்களால் இலச்சினைக் காட்சிகளை தத்ரூபமாகத் தீட்டுவது, எனக்கு மிகவும் பிடித்த விஷயம்."

"எனது குறிக்கோள், எனக்கு மிகவும் பிடித்தமான ஓவியத் துறையில் சிறப்பானதொரு இடத்தை அடைவதுதான். அதனை அடைய இரு விஷயங்கள் தேவை. ஒன்று எனது படிப்பிற்கும், திறனுக்கும் ஏற்ற அரசாங்கப் பணி. மற்றொன்று என்னால் இயலாத, அதே சமயம் எனக்குரிய அத்தியாவசியப் பணிகளைச் செய்வதற்கு எனது நிலைமை நன்கு உணர்ந்த வாழ்க்கைத் துணை" என ரத்தினச் சுருக்கமாக முடித்தார்.

தனது குறிக்கோளையும் எண்ணங்களையும் நரசிம்மலு வெளிப்படுத்திய போது, அவரது வார்த்தைகளில் தன்னம்பிக்கையும், தாகரிகமும் மிளிர்ந்ததைக் காண முடிந்தது.


நரசிம்மலுவைப் பற்றி அவரது நலன் விரும்பி திரு. இராமலிங்கம் கூறும் போது, "ஒரு பழைய, அர்த்தமுள்ள பாடலின் வரிகளை, இவரது ஓவியமாகப் பார்த்த பின்னர் எனக்கு இவர் மீது பாசமும் நாட்டமும் அதிகரித்தன. திறமைசாலியான இவரை ஊக்குவிக்கும் விதமாக, அரீனா மல்டி மீடியா நிறுவனம் இவருக்கு மல்டி மீடியா கோர்ஸை இலவசமாகப் பயிற்றுவித்து வருகிறது. சமீபத்தில் சென்னை சவேரா ஹோட்டலில், இவரது ஓவியக் கண்காட்சி நடந்தது" என்று பெருமிதப்பட்டார்.

நரசிம்மலு, கணிப்பொறியை கால்களைக் கொண்டு இயக்கும் விதமும், துடிப்புமிக்க செயல்பாடுகளும் நம்மை பிரமிக்கச் செய்தன. அவை நமக்கு அவர் மீது கருணையை ஏற்படுத்துவதற்குப் பதிலாக, பெருமிதப்பட வைத்தது. இன்னும் சொல்லப் போனால் நமக்கும் தன்னம்பிக்கையை அதிகரித்தது. நரசிம்மலுவின் வாழ்க்கைப்பாதையில்,


வெற்றி நிச்சயம்! இது வேத சத்தியம்!

இரா. முத்துக்குமார்









ஆதங்கம்

இந்தியாவே லியாண்டர் பயஸ் - மகேஷ் பூபதி ஜோடி மீது நம்பிக்கை வைத்து ஒலிம்பிக் மெடலுக்குக் கனவு காண , "சான்ஸே இல்லை. அவர்களாவது ஒலிம்பிக்கின் பதக்கம் வெல்வதாவது" என முன்னாள் டென்னிஸ் பிளேயரான ராமநாதன் கிருஷ்ணன் கூறியதாக வந்த தகவல், டென்னிஸ் வட்டாரத்தையே உலுக்கி, பல விவாதங்களுக்கு உள்ளானது. இதற்குப் பதிலளித்த மகேஷ் பூபதியோ, "எங்கள் தோல்வி பற்றி கனவு காண்பவர்கள், கனவிலிருந்து எழுந்து காபியைக் கலக்கலாம்" என நக்கலடிக்க,

இவர்களா தோற்பார்கள்?



"என்ன சார், இப்படிச் சொல்லிட்டீங்க!" என ராமநாதன் கிருஷ்ணனிடம் தொலைபேசியில் கேள்வி எழுப்பினோம்.

விம்பிள்டனில் செமி பைனல் வரை சென்ற ஒரே இந்தியரும், தமிழருமான அவர் இதைக் கேட்டவுடன் அலறினார். "இல்லே, நான் அப்படியெல்லாம் சொல்லவேயில்லை. நானும் இவ் விஷயத்தை பேப்பரில் படிச்சேன். பத்திரிகைகாரங்களுக்கு பரபரப்பு வேணும் தேறுக்காக, என்னை இழுத்து சர்ச்சையில் விட்டிருக்காங்க. நான் எப்ப டென்னிஸிலிருந்து ரிடையராயிட்டேன். கடந்த 30 வருடங்களாக டென்னிஸே நான் பார்க்கிறதில்லை. ஒலிம்பிக்கும் பார்க்கிறதில்லை. பிறகெப்படி நான் பயஸ் - பூபதி பற்றித் தலைதாகப் பேச முடியும்? ஆனாலும் இப்போ நான் சொல்றேன். எழுதிக்கங்க. அவங்க மெடல் வாங்க பிரகாசமான வாய்ப்பிருக்கு!" என எதிர்பாராத பதிலைத் தந்தார். அட, ஒரு பொய்க்காகவா இத்தனை ஆர்ப்பாட்டங்கள்!

✍ ச. ந. கண்ணன்

Follow up

ரெடியாகிறார் தன்ராஜ்!



"**யு**.எஸ்.ஸில் நடந்து வரும் ஃபிட்னஸ் கேம்பில், தன்ராஜ் பிள்ளை பின்தங்கி வருகிறார்" என ஒலிம்பிக் கமிட்டியின் செயலாளர் ஜோதிகுமாரன் நமக்கு பேட்டி அளித்தது, பலருக்கும் ஷாக்காக இருந்திருக்கும். ஆனால், இப்பொழுது ஒரு ரசகுல்லா செய்தி நமக்குக் கிடைத்துள்ளது.

அதாவது யு.எஸ். அரிஜோனாவில் நடந்து வரும் ஃபிட்னஸ் கேம்பில், தன்ராஜ் நூறு சதவிகிதம் ஃபிட்டாக இருப்பதாக ட்ரெயினர் க்ரெய்க் ஃப்ரெய்ட்மேன் உறுதியளித்திருப்பது, பிள்ளை ரசிகர்கள் வயிற்றில் பாலை வார்த்திருக்கிறது. கேம்புக்கு வந்த பிறகு, தம் உடலிலுள்ள சிறு சிறு குறைகளும் மறைந்திருப்பதாக தன்ராஜும் உற்சாகக் குரல் கொடுக்கிறார். ம்.. இனியென்ன கவலை இந்திய ஹாக்கிக்கு!

✍ எழில்

எழுத்தாணி

சுஜாதா அட்ஜஸ்ட் செய்து எழுதுகிறாரா?

இலக்கியமே வாழ்க்கை எனும் லட்சியத்தோடு சிறுகதை, நாவல், கவிதை, நாடகம், கட்டுரை, விமர்சனம் என பரவலாக தனது முத்திரையைப் பதித்தவர் எழுத்துலகின் முன்னோடி வல்லிக்கண்ணன்.

புத்தகங்கள் அவரது அறையில் வசிக்கின்றனவா, அல்லது புத்தகங்களின் அறையில் அவர் வசித்து வருகிறாரா என்று சொல்ல முடியாத வண்ணம் தரையெங்கிலும் கட்டுக் கட்டாக புத்தகங்களை அடுக்கி வைத்துள்ளார். அவரிடம் உரையாடியபொழுது :

"இப்ப நிறையப் பேர் எழுதிகிட்டிருக்காங்க. கதை, கவிதை நிறைய வந்திட்டிருக்கு. புத்தகங்களும் அழகழகா பப்ளிஷ் ஆகி வருது. ஆனால் விலைதான் வாங்குற மாதிரி இல்லை.

முன்பெல்லாம் மணிக்கொடி, தாமரை, தீபம் இப்படித் தரமான பல இலக்கியப் பத்திரிகைகள், அதாவது சிறு பத்திரிகைகள் வந்து கொண்டிருந்தன. இப்போது உள்ள சிறு பத்திரிகைகளின் செயல்பாடுகள் சரியில்லை. [illegible] குழு, கவிர்கள குழு இப்படித் தனித் தனியாக குழுக்களை ஆரம்பித்து, ஒருத்தரை ஒருத்தர் தாக்கி எழுதிகிட்டிருக்காங்க! தங்களோட மேதாவித்தனத்தை வாசகர்களுக்கு தெரியப்படுத்தணும் என்பதுதான் இவங்களோட லட்சியமா இருக்கு.



தரமான இலக்கியம் இப்ப குறைச்சலாத்தான் இங்கே இருக்கு. ஒரு வேளை சுஜாதா, பாலகுமாரன் மாதிரி 'அட்ஜஸ்ட்' செய்து எழுதறது தான் சரி போல! அதே மாதிரி, மத்தவங்களுக்கு நான் எழுதறது புரியணும்னு யாருமே நினைக்கிறதில்லை. நவீனத்துவம், பின் நவீனத்துவம் இப்படியெல்லாம் சொல்லிக் கொண்டு, கொஞ்சம் கூட புரியாத மாதிரி எழுதிகிட்டிருக்காங்க. இந்த 'இஸம்' எல்லாம் மேலைநாட்டிலிருந்தே மறைந்து வருகிறது. நாமதான் அதை விடாம எழுதிட்டிருக்கோம்.

உரைநடைதான் இப்படின்னா, கவிதையும் புரியாத மாதிரிதான் இருக்கு. இப்ப வருகிற புதுக்கவிதைகள் வாசகர்களுக்குப் புரியறதில்லை. என்னைப் போல எழுத்தாளர்களுக்கும் புரியறதில்லை. ஒருவேளை எழுதறவங்களுக்கே இந்தக் கவிதைகள் புரியுமான்னு தெரியலை!

என்னைப் பொறுத்தவரை யதார்த்தம்தான் எழுத்தில் பிரதானம். நாம எழுதறது மத்தவங்களுக்குப் புரியணும். அதனால அவங்களுக்குப் பயனும் ஏற்படணும்.

நல்ல எழுத்துகளை நாம் பிரிக்கிறதுதான் ஒரு விமர்சகரோட வேலை. நிகரி போன்றவர்கள் தவிர்க்க வெறுப்பு விருப்பு இல்லாமல் யாரும் விமர்சனம் செய்வதில்லை.

சிறந்த விமர்சகர்கள் உருவாகும் போது, சிறந்த இலக்கியமும் உருவாகும் என்பது என் நம்பிக்கை" (100 சதவிகிதம் உண்மைதான்!)

✍ மருதன்

பதில் சொல்ல வேண்டியவர் கலைஞர்தான்

பொலிட் ப்ரோ



குறிஞ்சிப்பாடியில் பாமக அலுவலகம் நீக்கொளுத்தப்பட்டதால் இரு தரப்பிலும் பதற்றம் கூடிக்கொண்டே போக, விஷயம் கேள்விப்பட்ட அடுத்த நிமிடமே விஜயகாந்த் மன்றத் தலைமை அலுவலகத்திற்கு ஆஜரானோம். அங்கு படு பிசியாக மன்றத்தினருடன் டிஸ்கஷனில் ஈடுபட்டிருந்தார் மன்றத்தில் மாநிலப் பொதுச் செயலாளர் திரு. ராமு வசந்தன். அவரிடம் குறிஞ்சிப்பாடி சம்பவம் பற்றிக் கேட்ட போது,



• ராமு வசந்தன்

"இந்தச் சம்பவம் நிச்சயம் எங்களுக்கும் சம்பந்தம் தொடர்பும் கிடையாது. ஒரு வேளை எங்க மன்ற ஆட்கள் செஞ்சிருந்தா, பகல்லதான் செஞ்சிருப்பாங்க. ஆனா நீங்க சொல்ற சம்பவம் ராத்திரியில நடந்திருக்கு. அதனால இது பா.ம.கவினரோட திட்டமிட்ட அரசியல் நாடகம் அல்லோதான். இவ்வளவு கிளைபரத்துக்கும் என்ன காரணம்? பொதுமக்களோட பிரச்னையை தைரியமா மக்கள்கிட்ட கேப்டன் எடுத்துச் சொன்னது அவங்களுக்குப் பிடிக்கல. அதனாலதான் கொடும்பாவி எரிப்பு, அரைவேக்காடுன்னு தொடர்ந்து பிரச்னை பண்றாங்க.

இந்தச் சம்பவங்களால் கேப்டன் ரொம்ப சங்கடப்படறாரு. 'பொதுமக்கள் பிரச்னையை மக்கள் செல்வாக்குள்ள விஜயகாந்தே பேசக் கூடாதுன்னா, யார்தான் பேசறது?'ன்னு வருத்தத்தோட கேக்குறார் கேப்டன். அதுமட்டுமில்லாம பொதுமக்களுக்கு ஆதரவா பேசறவங்களை எதிர்க்கத்தான் கட்சி நடத்துறாங்களான்னு வேதனைப் படறாரு.

ஆனால் ஒன்று, எங்களுக்கு இதுவரைக்கும் எதிரின்னு யாரும் கிடையாது. யாராவது எதிர்த்தால் அதுக்கு பதிலடி தர பலமும் எங்ககிட்ட இருக்கு. ஒருவேளை 'கிறுக்கிரா'வுக்கும் பிரச்னை பண்ணாங்கன்னா, அதையும் எதிர்த்துப் போராட தைரியமும் இருக்கு" என்று கூறி முடித்துக் கொண்டார்.

மு முகில்

இந்த விவகாரம் முற்றியதற்கான காரணம் குறித்து 'தாய் விஜயகாந்த்' அரசியல் இதழின் ஆசிரியர் சபீதாஜோசப்பிடம் பேசினோம்.

"கேப்டன் - ராமதாஸ் விவகாரம் பற்றி இதுவரை எந்தத் தலைவரும் தராத சன் டீவி, குறிஞ்சிப்பாடி விவகாரத்தை Flash News ஆகப் போட்டது எதற்காக என்பது தெரியவில்லை. விஜயகாந்த் மன்றம், பாமக வலுவாக உள்ள மாவட்டங்கள் மட்டுமின்றி, தமிழகம் முழுவதும் வலுவான தொண்டர் படையைக் கொண்டது. ஒரு வன்னியர் குடும்பத்தில்



• சபீதா ஜோசப்

தந்தை பாமகவில் இருப்பார். மகன்கள் விஜயகாந்த் மன்றத்தில் இருப்பார்கள். பாமக வினர் ஜாதிரீதியாக இதனை அணுகுவதால்தான் பிரச்னை எழுகிறது. அதுமட்டுமில்லாமல் கேப்டன் பேசியதற்கு நியாயமான விளக்கம் தர வேண்டியவர் கலைஞர் அவர்கள்தான். நேர்மாறாக ராமதாஸ், கேப்டனை விமர்சிப்பது தேவையற்றது. ஏன் வீராணத் துறையைக் கேட்கலை, நீர்ப் பாசனத் துறையை கேட்கலைன்னு கேப்டன் வெளிப்படுத்தியதில் என்ன தவறு இருக்கிறது? இதையெல்லாம் கேட்கப் போனால், படத்தை ஓட விட மாட்டோம்னு அறிவிக்கிறார்கள். இதுதான் அவர்களது நடைமுறை" என்று கூறி நமக்கு விடை கொடுத்தார்.

நடந்து கொண்டிருக்கும் சம்பவங்களால் பாமக தொண்டர்களும், விஜயகாந்த் ரசிகர்களும் கொந்தளித்துப் போய் உள்ளனராம். இதைப் பார்த்து வட மாவட்ட போலீஸுக்கு பீபீ தொடக்கு நொடி எகிறிவிட்டே இருக்குதாம்.

(விஜயகாந்த் சார், ராமதாஸ் தோட்டத்து ஆலோசனை முடிவுகள் என்ன?)

மு இரா. முத்துக்குமார்

பொலிட் ப்ரோ

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு அமெரிக்காவிலிருந்து இந்தியா திரும்பிய பின் வைகோ முடக்கி வைக்கப்பட்டாருல்ல. அதற்கு நேர்மாறாக இந்த முறை கட்சி வளர்ச்சிக்காக பல்வேறு அதிரடித் திட்டங்களை 2006ஐ மையப்படுத்தி அமெரிக்காவில் வைத்து தீட்டியுள்ளாராம் வைகோ. அவை ஒவ்வொன்றாக செயல் வடிவம் பெறுமாம். இதை உணர்ந்தாலோ என்னவோ, 'தாயகம்' தற்பொழுது ஜெகஜ்ஜோதியா இருக்குதாம்.

(வைகோ சார்! எப்போ மதுரை மீட்டிங்?)





ராதிகாவின் அண்ணாமலை சீரியலில் முதலில் 'அண்ணாமலை' என்று டைட்டில் போட்டார்களாம். பிறகு பெரியார் சிந்தனை எழுந்து நிலைக்கு வரவே 'அண்ணாமலை' என்று மாற்றி டைட்டில் போட்டார்களாம். மீண்டும் என்ன காரணத்தாலோ 'அண்ணாமலை'க்கே மாறிவிட்டார்களாம். இதுசிக்கு பெரியார் பக்தர்கள் எம்.ஆர். ராதாவின் மகளுக்கே பெரியார் பக்தியில் இத்தனை ஊசலாட்டமா? என்று வருத்தத்துடன் புலம்புகின்றனராம்.

(எம்.ஆர். ராதாவின் மகளுக்கு நியூமராலஜிலயும் நம்பிக்கை உண்டோ?)

முத்துக்கள் மூன்று

- இன்னும் நூறாண்டுகளுக்குப் பிறகு கலைஞர் ஓர் விசித்திரம் என பாரத உலகம் உணரும்.
- மணவழகர் மன்ற பொன் விழாவுக்கு கலைஞர் தமிழக முதல்வராக வருவது நிச்சயிக்கப்பட்ட ஒன்று.
- தமிழ் செம்மொழியானது 81 வயது இளைஞரான கலைஞரின் சாதனை. - வைரமுத்து

(வைரமுத்து சார், எப்போது 'கலைஞர் ஒரு இதிகாசம்' வரப் போகிறது?)

மு கலை

டாக்கீஸ் டாக்



'தமிழா?' அலறும் நமீதா

நமீதா ஒரு விழாவிற்கு வந்தால் அத்தனை கண்களையும் வளைத்து விடுகிறார். 'காதல் FM' ஆடியோ விழாவிலும் இதே கதைதான். படு கிளாமராக உடையணிந்து கொண்டு, லூஸான பேண்ட்டை அடிக்கடி தூக்கி விட்டுக் கொண்டு... இப்படி வந்திருந்த பார்வையாளர்களை இம்சித்துக் கொண்டிருந்தார் நமீதா. 'மேடையில் மட்டும் தமிழில் பேசச் சொல்லாதீர்கள்' என கண்டிஷன் போட்டுவிட்டுத்தான் திருதிருவென ஆடியோ விழாவிற்கு வந்திருந்தார். (அதானே, டி.ஆரால் த்ரிஷா பட்டது போதாதா?)

சிங்கீதம் சீனிவாசராவ் இயக்கத்தில் அடுத்ததாக ஹிந்திப் படத்தில் நடிக்கவிருக்கிறார் கமல்.

ஜோதிகா அவ்வளவுதான். சீக்கிரம் ரிடையராகப் போகிறார் என ஸ்டூடியோக்களில் பேசிக் கொள்கிறார்கள்.

விபச்சார வழக்குகளிலிருந்து பிடிபட்ட நடிகைகள் தப்பித்துக் கொண்டாலும், இத்தனை நாள் அவர்கள் பட்ட அவமானமே அவர்களுக்குரிய தண்டனை என்கிறது போலீஸ் தரப்பு.

சென்னையில் ரிசப்ஷன் நடத்த பாலா மறுப்புச் சொல்லி விட்டதால், ஜூலை 5ம் தேதி மதுரையில் நடக்கவிருக்கும் பாலாவின் திருமணத்திற்கு ஒட்டுமொத்தத் திரையுலகமும் செல்லவிருக்கிறது.

அதில் அனைவர் கண்களும் எதிர்பார்ப்பது சீயானின் வரவைத்தான்.

ஏதாவதொரு நடிகை ஹிட்டானால், உடனே சிம்பு அவர்களை வளைத்துப் பிடித்து விடுவார், தமது புதுப் படத்திற்காக. சோனியா அகர்வால், ஜோதிகா, மந்த்ராபேடி வரிசையில் அடுத்ததாக சிம்புவுடன் இணையவிருப்பது, ஆட்டோகிராஃப் கோபிகா. படம் - தொட்டி ஜெயா; இயக்கம் : 'முகவரி' துரை.

க்ளிப்பிங்ஸ்

ரஜினி, விஜயகாந்த் தொடர்பான அரசியல் சர்ச்சைகளுக்கு கமல் அடித்த கமெண்ட் - "பதிலுக்கு நாமும் மல்லுக்கட்டினால் நம் தொழில்தான் பாதிக்கப்படும். நான் கிருஷ்ணசாமியைத் தீவிரமாக எதிர்த்திருந்தால் 'விருமாண்டி', ரசிகர்களுக்கு காயமின்றிக் கிடைத்திருக்குமா?"



✍ ச.ந. கண்ணன்

எல்லாமே தனுஷ்தான்

தனுஷின் படங்கள் ரிலீஸாகும் ஒவ்வொரு முறையும் அதைத் தடை செய்ய வேண்டும் என, பெண்கள் அமைப்புகள் சென்சாரை வலியுறுத்துவதை வழக்கமாகக் கொண்டுள்ளனர்.

விடாது தொந்தரவு செய்யும் ரசிகைகளால், மூன்று மாதத்திற்கொரு முறை செல்ஃபோன் நம்பர் மாற்றுவாராம் தனுஷ்.



தன் அண்ணன் இயக்கத்தில் 'ஒருநாள் ஒரு கனவு', 'டாக்டர்' போன்ற படங்களில் நடிக்கவுள்ளார்.

அப்பாவைத் தலநாகப் பேசிய ஷெரீனுடன் இனி நடிக்கப் போவதில்லை என முடிவெடுத்துள்ளார் தனுஷ். பாவம் ஷெரீன்!

✍ எழில்

வேற பொழப்பு தெரியாது

ஸ்பென்சர்ஸ் மியூசிக் வோர்ல்டில் 7ஜி ரெயின்போ காலனி படம் தற்காலிகமாக ஷிப்ட் ஆகி, இப் படத்தின் ஆடியோ கேசட்டுகளில் ஆட்டோகிராஃப் போட்டுக் கொடுத்துக் கொண்டிருந்தார்கள்.

கெட்அப் செய்யாத குறையாகக் கூட்டம் சோனியா அகர்வாலை [illegible] தள்ளிக் கொண்டு போய் விட, அவரை மீட்பதற்குள் 'காவலிக்கு' போதும் போதுமென்றாகி விட்டது. ஹீரோ ரவி கிருஷ்ணா பறந்தோ, பாய்ந்தோ வந்து, சோனியாவை மீட்பார் என்று பார்த்தால், அவர் ஓர் ஓரமாக "யாரும் தன்னைக் கவனிக்கவில்லையே" என கவலையோடு நின்றிருந்தார்.

"என் ஒவ்வொரு படமும் ஹிட்டாகணும். ஏன்னா, எனக்கு வேற பொழப்பு தெரியாது" என்று 'கமெண்ட்' கொடுத்தார் காலனி டைரக்டர் செல்வராகவன்.

இந்தப் படத்தின் சவுண்ட் ட்ராக்குகள், ஆங்கிலப் படத்திற்கு இணையாகச் செய்யப்பட்டிருக்கின்றனவாம். 'அப்படியா?' என்று யுவன் ஷங்கர் ராஜாவிடம் கேட்டால், 'ஆமாம்' என்று அடக்கமாகப் புன்னகைக்கிறார்.

கேசட் கச்சேரி முடிந்த பின்பு, [illegible] என்று சொல்லாமல், தம்மை நாடி வந்தவர்களுக்கெல்லாம் ஆட்டோகிராஃப்பாக போட்டுத் தாக்கிக் கொண்டிருந்தார் சோனியா!



📷 முகில் ✍ மருதன்



டாலர் ட்ரீம்ஸ்

கேம்பஸ் கடல!

"ஹே, ஐ நெவர் லைக் டமில் ஹீரோஸ்! தே ஆர் வேஸ்ட்பா!" என்று பீட்டர் விட்டுக் கொண்டிருந்த ஷேக்ஸ்பியரின் இரண்டு டாட்டர்களிடம், நம்ம கேம்பஸ் மேட்டருக்காக, தமிழில் மீட்டர் போட்டோம்!

பெயரை செப்பச் சொன்னோம். "ஜனனி" என ஒரு வார்த்தை ஜனித்தது. "ஷில்பா" என ஒரு குயில் சொல்லியது. என்ன, "ஐ.ஐ.டி. கேம்பஸ்ல சைக்கிளை வைக் ரேஞ்சுக்கு ஓட்டிக்கிட்டு எங்க போறீங்க!"

"புக்கெல்லாம் வரிசையா அடுக்கி வைச்சிருப்பாங்களே, லைப்ரரி.. அங்கதான் போறோம்!" (அடடா! என்ன ஒரு விளக்கம்!)

"மெடிசின்தான் என் எய்ம். இப்பவே படிச்சாதான் கோலை ரீச் பண்ண முடியும்!" என்ற வருங்கால மருத்துவச்சி ஜனனிக்கு வாழ்த்துக்கள்.

"ஐ.ஐ.டி.ல படிக்கிறதுதான் என் லட்சியம். என்ன ஒரு எக்ஸலெண்ட் என்விரான்மெண்ட். ஆனா நார்த் இண்டியன்ஸ்தான் ஜாஸ்தியா இருக்காங்க! எல்லா புக்ஸும் இந்த லைப்ரரில நல்லா இருக்கும். ரொம்ப யூஸ்ஃபுல் இது" என்று சிரித்தார் ஷில்பா.

இப்படிப்பட்ட படிப்பாளிகளையும் படைத்த பிரம்மனுக்கு சலாம் வைத்து விட்டு ஷிப்ட் ஆனோம்.

ஆய்த எழுத்துவைத் தெரிந்த சரத், சூர்யா, விஜய் முன்பு ஆஜரானோம். "நீங்கயெல்லாம் வருங்கால தமிழ் சினிமா கதாநாயகர்களா? அரசியல்வாதிகளை எதிர்க்கத் தயாரா?" என்று அம்பு விட்டோம்.

"நாங்க என்ன முட்டாளா? சினிமாவா, நோ சான்ஸ்! வி ஹேவ் டாலர் ட்ரீம்ஸ். பாஸ்போர்ட் ரெடி! படிச்சு முடிச்சுட்டு பறக்க வேண்டியதுதான்" என்று ஆய்த எழுத்து சித்தார்த்தைப் பிரதிபலித்தார் சூர்யா. (சரி... சரி, அப்ப அரசியலுக்கு வர வாய்ப்பிருக்கு!)

மூவர் கூட்டணிக்குள் புதிதாய் ஒருவர் நுழைந்தார். பெயரைக் கேட்டோம்.

"எம். குமரன், சன் ஆஃப் மகாலட்சுமி
7/G ரெயின்போ காலனி,
மதுர" என்று படமெடுத்தவரை ராமதாஸ், விஜயகாந்தை முறைப்பது போல் முறைத்தோம். "உண்மையான பேரு கமல். பெயிண்டிங்ஸ்ல ரொம்ப ஆர்வம். குட்டிக் குட்டிக் கவிதைகள் எழுதுவேன்" என்றார். 'கமல்'னு பேர் வைச்சாலே 'கலை' ஆர்வம் வந்திடும் போல!

"ஒரு குட்டிக் கவிதையைத் தட்டி விடுங்களேன்" என்றோம். "என் கவிதைக்கு ரசிகர் மன்றமெல்லாம் இருக்கு" என ஆரம்பித்தார்.

"வர்றா பாரு ரோஸி
அவ பார்வை ஏஸி.
நாங்க போவோம் பிசக.."

என அவர் கடுப்படிக்க, அங்கிருந்து கிளம்பினோம் அவர் ரசிகர் மன்றங்களை உடைக்க!

📷 + ✍ கலை



தூள் 'க்ளிக்'!

📷 இரா. சண்முகசுந்தரம்



வாசகர்களும் தாங்கள் எடுத்த தூள் க்ளிக்குகளை சென்னை ஸ்கேனுக்கு அனுப்பலாம்! தூள் - ஆ இருந்தா தட்டு உண்டுங்கோ!

CLASSIFIEDS

ASTROLOGY

ஜாதகம் கணிக்க, முகூர்த்தம் பார்க்க, கல்யாணப் பொருத்தம் நிர்ணயிக்க, ப்ரச்னம் சொல்ல, பொதுப்பலன் அறிய, யோக காலம் தெரிந்து கொள்ள, வார நாட்களில் மட்டும் பகல் 10 முதல் 1 மணி வரை அணுகவும்.

கோமாண்டூர் ஸ்ரீனிவாசன், அஸ்ட்ரோ ஸ்கொயர், எண். 1, முதல் தளம், நான்காவது தெரு, வழி : முதல் மெயின் ரோடு, சாஸ்திரி நகர், சென்னை - 600 020. தொலைபேசி 24469160.

சி.ஐ.பி

என்னிடம் திறமைகள் கிடையாது!

"ஒரு ஊர்ல இப்படித்தான்" என கதை சொல்ல ஆரம்பித்தால் அப்படியே நம் காதுகளை சிறைப் பிடித்து விடுவார் தென்கச்சி சுவாமிநாதன். ஆல் இந்தியா ரேடியோவிலிருந்து ரிடையராகி மடிப்பாக்கத்தில் இதமாக பொழுதைக் கழித்து வருபவரைச் சந்தித்தோம்.

ரிடையரான பிறகு உங்கள் வாழ்க்கை எப்படி கழிகிறது?

நான் ஓய்வு பெற்று இரண்டாண்டுகளாகி விட்டன. சும்மா இருப்பதே ஓய்வுக்கு மரியாதை என்பதால் நேரத்தைப் பேரனுடன் விளையாடி கழித்து வருகிறேன்.

வெளிநாட்டு தமிழர்கள் மத்தியிலும் நீங்கள் பிரபலமாகி விட்டீர்கள் போலிருக்கிறது?

ஆமாம். 'சன்'டீவியில் நிகழ்ச்சி பண்ணுவதால் வெளிநாட்டு தமிழர்களிடமும் அடையாளம் காணப்பட்டு லண்டன், மலேசியா நாடுகளுக்குச் சென்று வந்திருக்கிறேன். நான், சாலமன் பாப்பையா, கிரிசியம் கலந்து கொண்ட சிங்கப்பூர் பட்டிமன்றத்திற்கு பத்தாயிரம் தமிழர்கள் கலந்து கொண்டு உற்சாகப்படுத்தியது மறக்க முடியாதது.

எஃப்.எம் ரேடியோக்களில் நல்ல தமிழைக் கேட்க முடிகிறதா?

தனியார் எஃப்.எம்.களில் வேலை செய்பவர்கள் சிறு வயதிலிருந்தே ஆங்கிலச் சூழலில் வளர்வதால் ஏற்படும் அவலம் அது. ஆனால் ஆல் இந்தியா ரேடியோவில் தமிழைத் தொடர்ந்து பாதுகாத்து வருகிறார்கள். ஒரு புதிய பொருள் புழக்கத்திற்கு வந்தவுடன் உடனடியாக அதன் ஆங்கிலப் பெயரைத் தமிழ்ப் படுத்தி விடுவார்கள். எஃப்.எம் பண்பலை வரிசை என அழைக்கப்படுவது ஒரு உதாரணம்.

உங்களது திறமைகளை மேலும் விரிவு படுத்தியிருக்கலாமே?

நான் மிகத் திறமையானவன் என்ற பொய்யான இமேஜ் எனக்கு எப்படியோ கிடைத்துவிட்டது. புத்தகங்களிலிருப்பதைத் தான் தகவலாகச் சொல்லி வருகிறேன். புதிதாக எதையும் செய்யவில்லை. எனக்கு எந்த விதத் திறமையும் கிடையாது என்பதே உண்மை. 'இன்று ஒரு தகவல்'கூட எதிர்பாராமல் செய்ததுதான். அதைக் கன் தெரியாதவர்கள் மிக உபயோகமாகக் கருதியதால், பதினான்கு ஆண்டுகள் அதை தொடர்ந்து செய்தேன்.

தகவல் சொல்லும்பொழுது நகைச்சுவை அவசியமா?

நான் விவசாயம் படிக்கும் பொழுது 'ஸ்டாடிஸ்டிக்ஸ்' என்ற தூக்கம் வர வழைக்கும் ஒரு பாடம் உண்டு. அதை நடத்தும் ஆசிரியர் கடைசியாக ஏதாவது ஜோக்குகளை ஜாலியாகக் கூறுவார். அதற்காகவே அவரது வகுப்பு மிக சுவாரசியமாக மாறியது. அந்த யுக்தியைத்தான் 'இன்று ஒரு தகவலி'ல் உபயோகப்படுத்தினேன்.

அலுவலகப் பணியில் இருந்த பொழுது வெளியிடங்களில் பேச மாட்டார்கள் அல்லவா?

ஆமாம். என் அலுவலக மேஜையிலேயே "வெளியிடங்களுக்கு என்னை அழைக்காதீர்கள்" என்ற போர்டு ஒன்றை வைத்தேன். காரணம் எனக்கு பொது இடங்களில் பேச வராது. ஆனால் இப்பொழுது அடிக்கடி மைக் முன்புப் பேச பழகிக் கொண்டேன்.


இன்று ஒரு தகவல் சொல்லுங்களேன்?

இந்தியர்கள் அறிவியல் வளர்ச்சியில் அக்கறை காட்டுவதால் அமைதியான வாழ்க்கையை அடைந்துள்ளோம். ஆனால் அமெரிக்காவில் அம்மக்கள் புற அழகு, பகட்டான வாழ்க்கை முறை போன்றவைகளில் கவனம் செலுத்துவதால்தான் தீவிரவாதமும் வன்முறையும் அவர்கள் வாழ்க்கையைச் சின்னாபின்னப் படுத்தி வருகிறது. இதற்கு மாற்றம் எதுவென்றால், உள்ளத்தைச் சுத்தமாக வைத்துக் கொண்டு, அமைதியான வாழ்க்கையில் பயணிப்பதுதான். 'அரிகிரி அசெம்பிளி' டீவி நிகழ்ச்சியில் ஒரு நகைச்சுவை சொன்னேன். ஒரு டாக்டர் இருவருக்கு மூளையில் ஆபரேஷன் செய்வதற்காக அவர்களின் மூளையை தனியாகக் கழற்றினார். பின்பு பார்த்தால் இருவரையும் காணவில்லை. பிறகு 2 வருடங்கள் கழித்து கண்டுபிடித்து 'என்ன செய்து கொண்டிருந்தீர்கள்?' எனக் கேள்வி எழுப்பினார். அதற்கு அவர்கள் நாங்கள் 'அரிகிரி அசெம்பிளி' நிகழ்ச்சியை நடத்தி வருகிறோம்" என்றார்களாம். இதை நான் பாலகிட்டிபாபுவிடம் சொன்ன போது ஆடிப் போய்விட்டார்கள்.



📷 முகில்

✍ எஸ்.கே. கண்ணன்



ஆத்துக்குள்ளே மாயாபஜார்!

வீட்டில் சாப்பிட்டுச் சாப்பிட்டு போரடிக்கிறது என்று, ஹோட்டலைத் தேடி போகிறவர்களைப் போலவே, 'வீட்டுச் சாப்பாடு மாதிரி கிடைக்குமா?' என்று ஒவ்வொரு ஹோட்டலாகத் தேடிப் போகிறவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். ஆவடி காமராஜ் நகர் மெயின் ரோட்டில் இருக்கும் மாமிஸ் மெஸ், இவர்களுக்காகவே உருவாக்கப்பட்டதுதான்.

"ஆத்துல செய்தது மாதிரியே எங்க சமையலும் சுவையா இருக்கும். அதான் எங்க மெஸ்ஸோட ஸ்பெஷாலிட்டி" என்கிறார் ஆனந்த்.

"மோர்க் குழம்பு, அவியல், அப்பளம், கூட்டு எல்லாம் வயிறு நிறையச் சாப்பிடலாம். பாக்கெட் நிறையப் பணம் கொண்டு வரணும்னு அவசியமில்லை. பதினாறு ரூபாய் போதும்" என்று வயிறாரப் பேசுகிறார், அவர் மனைவி விஜயலட்சுமி. சமையல், சர்வீஸ் எல்லாமே இவங்கதான். "கல்யாண சமையல் சாதம்..." என மாயாபஜார் ரங்காராவ் ஸ்டைலில் ரவுண்டு கட்டி சாப்பிடக் கிளம்புங்கள் மாமிஸ் மெஸ்ஸுக்கு!

✍ மருதன்

பக்தி ரவுண்ட்ஸ்

"தம்பி, தண்ணிப் பஞ்சம் சென்னைக்கும் தமிழ்நாட்டுக்கும் மட்டும் வந்தால் போதாது. இந்தியா முழுக்க வரணும்."

பெரம்பூர் துளசிங்கம் தெருவில் சந்தித்த அந்தப் பெரியவர் சொன்ன பதிலைக் கேட்டு திக்கென்றது.

"பின்ன என்ன தம்பி. மிச்சம் மீதியில பிச்சை போடுது கர்நாடகா. நம்ம ஆளுங்க இதோ வீராணம் வந்தாச்சு, போரூருக்கு வந்தாச்சுன்னு அழுற புள்ளைக்கு வாழைப்பழம் காட்டிக்கிட்டிருக்காங்க."



"இனிமே யாரையும் நம்பி பிரயோஜனமில்ல. அந்த ஆண்டவனைத்தான் நம்பணும்னு ஜனங்களுக்குப் புத்தி வந்திருக்கு. இந்த தெருவில இருக்கிற பழனி ஆண்டவர் கோயில் 35-வருஷத்துக்கு முன்ன கட்டினது. இதுவரை நாலு கும்பாபிஷேகம்தான் பார்த்திருக்கு. இப்ப தண்ணிப் பஞ்சம் போகணும்னு வருண ஜபம், கும்பாபிஷேகம்னு இந்த மெட்ராஸ் எல்லாமே அமர்க்களப்படுது பாரு. இனிமேயாவது நல்ல புத்தி வந்தா சரி." பெரியவர் சொன்னது சரிதான். போன வாரத்திலும், இந்த வாரத்திலும் அந்த ஏரியாவிலேயேயும்,

ஊரெல்லாம் திருவிழா...

சென்னை பூராவும் ஏக விசேஷம்.

பழனி ஆண்டவர் கோயில் கும்பாபிஷேகம் ஜூன் 27ம் தேதி நடந்தது.

பாடி, திருவாலீஸ்வரர் கோயிலில் ஆஞ்சநேயருக்கு புதுசா சன்னதி கட்டி ஜூன் 30ம் தேதி முதல் பூஜை நடக்கிறது.

பெரம்பூர் மீனாக்ஷி தெரு ஸ்ரீ ஐயப்பன் கோயிலில் துவஜப்ரதிஷ்டையும், அஷ்ட பந்தன கலச கும்பாபிஷேகமும் 28ம் தேதி நடந்தது. சபரிமலையிலிருந்தே வந்து நடத்தி வைக்கிறார்கள். நம்மாழ்வார்பேட்டை புனித சகாய அன்னை ஆலயத்தில் ஜெபமாலை திருப்பலி தேர் உற்சவமும் நடந்தது. கோயம்பேடு ஸ்ரீ வைகுண்டவாசப் பெருமாள் கோயிலில் பிரம்மோத்ஸவம் ஆரம்பம்.


திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோயிலில் ஸ்ரீ நரசிம்ம சுவாமி பிரம்மோத்ஸவம் ஆரம்பம் என பல பக்தி ஸ்பெஷல்கள் நடக்குது.

அந்தப் பெரியவர் சொன்னது உண்மைதான். சென்னைவாசிகளுக்கு தெய்வ நம்பிக்கை அதிகரித்திருக்கிறது. கடவுளை நம்பினோர் கைவிடப் படார்' நம்புங்கள்!

✍ வி

படம்: நன்றி 'தினமலர்'

இந்த ஆட்டம் போதுமா?



யாராலும் யாரையும் கட்டுப்படுத்த முடியவில்லை. கடந்த 22ம் தேதி விஜய்யின் பிறந்தநாளன்று, அவரது ரசிகர்கள் அடித்த கும்மாளத்தை இப்படித்தான் வர்ணிக்க முடிகிறது.

இரவு 8.30 மணிக்கு காமராஜர் அரங்கில் ஆயிரக்கணக்கான உற்சாக ரசிகர்கள் முன்பு, விஜய் கேக் வெட்டி, 'அப்படிப் போடு' பாடலைப் பாடியபொழுது அடுத்த பிறந்தநாள் வரைக்கும் இந்தக் கொண்டாட்டம் போதுமானதாக இருந்தது.

புன்னகையோடு அனைத்தையும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த சங்கீதா விஜய்யிடம் பேசினோம். "சார் முகத்துல பாருங்க, எவ்வளவு சந்தோஷம். 'திருமலை', 'கில்லி' ஹிட் ஆனதுல சார் ரொம்ப குஷியாயிருக்காரு தெரியுமா" என குதூகலித்தவரிடம், குட்டி விஜய் பற்றிக் கேட்டபொழுது, "அவர் ஸ்கூலுக்குப் போயிருக்காரு. உங்க கிட்ட காமிக்க அவரை ஃபோட்டோ எடுத்திடுவீங்களே" என நழுவினார். அடடா, பிரபலங்களின் வாரிசுகள் கொடுக்கிற கஷ்டங்களுக்கு அளவே இல்லாமப் போச்சு!

✍ ச.ந. கண்ணன்

பூமராங்

(டாப் 3 லெட்டர்ஸ்)

✉ வாரா வாரம் போஸ்ட்கார்ட் போலில் காவிரி நீர்ப் பிரச்னை, அயோத்திப் பிரச்னை போன்ற கொஞ்சம் உருப்படியான விஷயங்களை பற்றியும் வாசகர்களின் அபிப்பிராயங்களைக் கேட்கலாமே!

சென்னை - 50, பி.எல். லக்ஷ்மி




✉ ஒய்.ஜி. மகேந்திராவுக்கும் விவேக்கிற்கும் இடையில் 'எலி' ப்ராப்ளம் இல்லே! இனிதான் ப்ராப்ளமே!

சென்னை - 39, கஸ்தூரி நாராயணன்

✉ எழுத்தாணி' பகுதியில் அ. வெண்ணிலா பேட்டியில் 'புரிதல் எல்லாருக்கும் ஒரே மாதிரியாய் இருப்பதில்லை என்று சொன்னார். மேலும் பாரதியையே புரிந்து கொள்ளவில்லை என்கிறாரே, அந்தக் குற்றச்சாட்டு ஒட்டுமொத்தத் தமிழ் மக்களுக்கா? இல்லை கவிஞர் பாரதிக்கேவா?

சென்னை - 14, கவிஞர் அய்யாறு வாசுதேவன்

கேளுங்க, கேட்டுக்கிட்டே இருங்க!




"ஒரு மருந்தை உட்கொண்டால் அது உடலுக்குள் சென்று செரிமானம் ஆனபிறகு இரத்தத்தில் கலந்துவிட்டுத்தான் தன் வேலையைச் செய்யும். ஆனால் இசை கேட்டவுடனேயே உங்கள் உடம்பில் வைப்ரேஷனை உண்டாக்கும் சக்தி கொண்டது. உதாரணமாக, மூட்டு வலிக்காக தினமும் இருநூறு கிராம் மருந்து சாப்பிடுபவர் இசையைக் கேட்கக் கேட்க மருந்தின் அளவைக் குறைத்துவிடலாம். இசையின் மகத்துவத்தைப் பார்த்தீர்களா" என டாக்டர் மைதிலி பேசும் ஒவ்வொரு வார்த்தையும் நமக்குப் புதிதாக இருக்கிறது. இவர் தலைமையில் அப்பல்லோ மருத்துவமனை செயல்படுத்தியுள்ள 'மியூசிக் தெரபி' எனும் பிரிவும் இவர்கள் வெளியிட்டுள்ள கர்ப்பிணிப் பெண்களுக்கான வாத்தியங்களாலான இசை வடிவங்களும் மருத்துவ உலகில் இந்தியாவிலேயே முதன்முறையான முயற்சி என பெயர் வாங்கியுள்ளது.

✍ நஜில்

கலைஞன் நிரப்பிய வெளி







நுங்கம்பாக்கம் கல்லூரிச் சாலையிலுள்ள அலையான்ஸிற்கு அது ஒரு வித்தியாசமான அனுபவம். தன் எழுத்துக்களால் எல்லோரிடமும் பேசும் சுந்தர ராமசாமியை, 'கலைஞன் நிரப்பும் வெளி' என்ற பெயரில் புகைப்படங்களாக அரங்கில் நிரப்பியிருந்தார் புதுவை இளவேனில் என்ற கே. சங்கர்.

"ஒரு எழுத்தாளனின் எழுத்துகள் அவனை வாசகனிடம் முழுமையாகக் கொண்டு சேர்ப்பதில்லை. என்னைக் கவர்ந்த எழுத்தாளரின் இயல்பை, இன்னொரு பக்கத்தை எல்லோரிடமும் கொண்டு சேர்ப்பது ஒரு கலைஞனாகிய எனக்கு அவசியமாய்த் தோன்றியது. எனவே சுந்தர ராமசாமியின் நிழங்களை நிழற்படங்களாக கண்காட்சி ஆக்கியுள்ளேன். ஆனால் இப்பொழுது கூட அவரைப் பற்றிய மிரட்சியும், பிரம்மிப்பும் என்னிடமிருந்து முழுமையாக விலகவில்லை. இதற்கு முன்பு கி. ராஜநாராயணனின் நிழற்படங்களைக் கண்காட்சியாக வைத்துள்ளேன். இனி யாரையும் வைப்பதாக எண்ணமில்லை." என புன்னகைக்கும் இளவேனில் சாம்பல் எனும் சிற்றிதழ் நடத்தி வருகிறார். தனது மூன்றாவது குறும்படத்தையும் எடுத்து வரும் இவர் ஒரு ஆட்டோ ஓட்டுநர்.

இந்தப் புகைப்படக் கண்காட்சிக்கு தற்போது அமெரிக்காவிலிருக்கும் சுந்தர ராமசாமி வரவில்லை. ஒன்றிரண்டு புகைப்படங்கள் தவிர, மற்றதை அவர் பார்த்ததுகூட இல்லையாம்!

📷 + ✍ வித்யன்

'நியூஸ்'





'திரிஷ்லா பிளானெட்' பெயரைக் கேட்டதும் 'இல்லி' த்ரிஷா ஏதோ கோளரங்கம் கட்டியிருக்காரோன்னு கற்பனைக் குதிரையை ஓட விடாதீங்க! 'திரிஷ்லா பிளானெட்'ங்கறது மயிலாப்பூர் லஸ்ஸில் இருக்குற நான்கடுக்கு 'மெகா' கார்மெண்ட் ஷோரூம். அது என்ன 'திரிஷ்லா' என்று அதன் உரிமையாளர் திரு. வினோத்குமாரிடம் கேட்ட பொழுது, ஜெயின் கடவுளான மகாவீரரின் தாயார் பெயர் திரிஷ்லா தேவி என்று பெயர் வரலாறு வாசித்தார்.

கம்மா அஞ்சு கோடி ரூபாய அனாயசமா அப்பி விசி, அமர்க்களமா வடிவமைக்கப்பட்டு இருக்கிற திரிஷ்லா பிளானெட்ல குட்டீஸ் முதல் ரிட்டையர்ட்ஸ் வரை எல்லோருக்கும் தேவையான தரமான ஆடைகளைக் குவித்து வைத்துள்ளதாகக் கூறும் வினோத்குமார், தமது ஷோரூமின் சிறப்பம்சமே Good Quality - More Variety என்று பூரிக்கிறார்.

கூட்டம் அதிகமாக வருவதை விரும்பாத காரணத்தால் தான் தி.நகரில் ஷோரூம் வைக்காமல் லஸ்ஸில் வைத்துள்ளார்களாம் (கூட்டத்தைத் தவிர்க்க சேலைகளுக்கு தடா போட்டுள்ளார்களாம்) இந்த மெகா ஷோரூமில 10,000 ரூபாய்க்கு Ice World Pants, Rock Fort Jeans, Splendor Shirts வாங்கினால், அதே பிராண்ட் மெட்டீரியல்ல 10,000 ரூபாய்க்கு இலவசமா அள்ளித்தர் தர்றாங்களாம். அதனால் ஏற்படும் 40% நஷ்டத்தையும் லாபக்கணக்காகவே கருதுகிறார்களாம்.

சேலைகளுக்கு ஏன் தடா? என்று கேட்டால் பெண்களை சேலை விஷயத்தில் திருப்திப்படுத்துவது சிரமம். இந்த உண்மை 35 ஆண்டு அனுபவத்தில் நாங்கள் உணர்ந்து கொண்டது என்கிறார் வினோத்!

📷 + ✍ கலை

பிரெய்ன் பாயின்ட்



இதில் எத்தனை குதிரைகள் இருக்கின்றன எனக் கண்டுபிடியுங்கள்!

போஸ்ட் கார்டு POLL


ஒலிம்பிக்ஸ்-ல் இந்தியாவின் பதக்கக் கனவை பூர்த்தி செய்யப் போவது...

- அஞ்சு ஜார்ஜ் - தடகளம் & மல்லேஸ்வரி
- பயஸ் & பூபதி - டெனிஸ்
- தன்ராஜ் பிள்ளை - ஹாக்கி

இந்த மூணுல உங்க சாய்ஸை போஸ்ட் கார்டுல தட்டி விடுங்க... ரிசல்ட் அடுத்த வாரம்.

முகவரி :
போஸ்ட் கார்டு Poll,
சென்னை ஸ்கேன்,
17-NP, ஜவஹர்லால் நேரு சாலை,
ஈக்காட்டுதாங்கல்,
சென்னை - 600 097

சென்ற வார POLL ரிசல்ட் விஜயகாந்த் - இராமதாஸ் மோதல் எதில் போய் முடியும்?



Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 " Registered No. N / PMG (CCR) 572 / 03 - 05" Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 358 / 03 - 05 "
Registered as a Newspaper in Sri Lanka Supplement to the Kalki issue Dated 4 / 7 / 2004

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / PMG (CCR) 572 / 03 - 05*
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 358 / 0' '5 * Registered as a Newspaper in Srilanka

